REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 நவம்பர் 9 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 265 | Wednesday 09, November, 2022 | 16 பக்கங்கள் | 50/-

75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு

## நாட்டிலுள்ள மாவீரர் சிலைகளுக்கு அஞ்சலி



எதிர்வரும் சுதந்திர தினத்தை முன்னிட்டு, நாட்டில் உள்ள அனைத்து மாவீரர்களின் சிலைகளுக்கும் மரியாதை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன,

06

உலகில் அதிகரித்துவரும் வாயு வெளியேற்றத்தினால் கடும் பாதிப்பு;

# பொருளாதார ரீதியாக போராடும் நாடுகளுக்கு இரட்டிப்பு அச்சுறுத்தல்

பாதிக்கப்படும் நாடுகளுக்கு இழப்பீடு வழங்க ஜனாதிபதி ரணில் கோரிக்கை



எகிப்தில் நடைபெறும் COP 27 சர்வதேச மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தல்

அபிவிருத்தியடைந்த நாடுகளின் கட்டுப்பாடற்ற தொழில்மயமாதலே காலநிலை மாற்றத்திற்கான அடிப்படைக் காரணம் என்றும், இதன் விளைவுகளையே வறிய நாடுகள் அனுபவிக்க நேரிட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாதிக்கப்படும் நாடுகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டு நிதியை இரட்டிப்பாக்குவது அவசியமென்றும் தெரிவித்தார். எகிப்தின் ஷாம் அல்ஷேக் நகரில் நடைபெற்று வரும் காலநிலை மாற்றம் தொடர்பான COP 27 மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, போதுமான நிதி இல்லாததால் வறிய நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதன் விளைவாக, இந்த நாடுகள் தங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்க போராடும் அதேவேளையில் பொருளாதார ரீதியாக முன்னேறவும் போராடுவதனால், இந்த நாடுகள் இரட்டை ஆபத்தை எதிர்கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எனவே, வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு மற்றும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும் வகையில் தமது நிதியை இரட்டிப்பாக்குவதன் மூலம் அபிவிருத்தியடைந்த நாடுகள் கிளாஸ்கோவில் வழங்கிய உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டுமென்றும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

காலநிலை தொடர்பான பாதிப்புக்களை அடையாளப்படுத்தும் பேரவையால் முன்மொழியப்பட்டதற்கமைய, எதிர்கால சவால்களுக்கு பதில் வழங்கக்கூடியவாறு சர்வதேச விழிப்புணர்வை வலுப்படுத்தும் வகையில் ஒரு விசேட அறிக்கையை உருவாக்குவது பொருத்தமானதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

COP 28 இற்காக நாம் டுபாய் செல்வதற்கு முன், 'காலநிலை நிதி' மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர்கள் மட்ட கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் ஜனாதிபதி, கோப்27 இல் முன்மொழிந்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நிறைவான உயிர்ப் பல்வகைமையைக் கொண்டுள்ள இலங்கை, காலநிலை மாற்றத்தின் சவால்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ளது. இது தொடர்பாக இலங்கை முன்னெடுத்த நடவடிக்கைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

2030 ஆம் ஆண்டளவில் காபன் வெளியேற்றத்தை 14.5 சதவீதமாக

06

## எவரும் காணாமற்போகாவிடின் அதற்கான அலுவலகம் எதற்கு?

பாராளுமன்றில் மனோ எம்பி ஆவேசம்

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் எவரும் காணாமற் போகாவிட்டால் காணாமல் போனோருக்கான அலுவலகம் எதற்கு என மனோ கணேசன் எம்பி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் .

எவரும் காணாமலாக்கப்படவில்லை எனக் கூறும் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலக தலைவரின் கூற்று விந்தையானது என தெரிவித்த அவர், அந்த தலைவரை பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை

06

## பண்டிகை காலங்களில் தடையின்றி பொருட்கள்

விலைகளும் அதிகரிக்கப்படமாட்டாது

லோரன்ஸ் செல்வநாயகம்



பண்டிகை காலங்களில் விலை அதிகரிப்பின்றி அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடில்லாமல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு அதனைக் கடைப்பிடிப்பது தொடர்பில் தேசிய உற்பத்தியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் அத்தியாவசிய பொருட்கள் பலவற்றின் விலைகள் தற்போது குறைக்கப்பட்டுள்ளதாக சபையில் குறிப்பிட்ட அவர் அரிசி,

06

வடக்கில் அரசு நடத்திய நடமாடும் சேவை:

## நீதியமைச்சர் விஜேதாசவுக்கு TNA சுமந்திரன் MP பாராட்டு

மக்களது தேவைகளை நிறைவேற்றியதாகவும் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் நடமாடும் சேவைகளை அரசாங்கம் நடத்தியமைக்கு நன்றி தெரிவிப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ள வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

06

சிங்கப்பூர் அருகே சர்வதேச கடற்பரப்பில் விபத்து:

## நடுக்கடலில் தத்தளித்த 303 இலங்கையர்கள் மீட்பு

ஜப்பான் கப்பல் மூலம் வியட்நாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

20 சிறுவர்கள், 19 பெண்கள் உட்பட 303 பேரும் காப்பாற்றப்பட்டனர்



சிங்கப்பூருக்கு அருகிலுள்ள சர்வதேச கடற்பரப்பில் 303 இலங்கை தமிழர்களுடன் தத்தளித்துக்கொண்டிருந்த படகை, ஜப்பான் கப்பலொன்று மீட்டுள்ளது.

300க்கும் மேற்பட்ட இலங்கை தமிழ் அகதிகள் பயணித்துக்கொண்டிருந்த இந்த மீன்பிடிப்படகு சேதமடைந்து ஸ்பிராட்லி தீவுகளில் தத்தளித்துக் கொண்டிருந்தது என விஎன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

மியன்மார் கொடியுடன் பயணித்துக்கொண்டிருக்கும் லேடிஆர்3 படகு ஆபத்தில் சிக்கியுள்ளது. இந்த படகு 303 இலங்கையர்களுடன் கனடா செல்ல முயல்கின்றது என தகவல் கிடைத்ததாக வியட்நாமின் கடல்சார் மீட்பு மற்றும் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

நவம்பர் ஐந்தாம் திகதி குறிப்பிட்ட கப்பல் தென்கரையோரத்தில் உள்ள வுங் டாவுவில் இருந்து 258 கடல் மைல் தொலைவில் காணப்பட்டது .படகின் இயந்திர அறைக்குள் நீர் சென்றதால் அந்த

06

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

## பதினைந்து தமிழக மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும்

ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது





இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யவும், அவர்களுடைய 2 விசைப் படகுகளை விடுவிக்கவும் நடவடிக்கை

06

## இரு மாணவர்கள் மோதல்; ஒருவர் பலி

திருக்கோவில், தம்பிலுவில் பாடசாலையில் சம்பவம்

திருக்கோவில் தினகரன் நிருபர்

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவில் இரு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில், 13 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பிலுவில் பகுதி பாடசாலையொன்றில் 8ஆம் ஆண்டில் கல்வி

06

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு:

## தனுஷ்க குறித்து விசாரிக்க மூவரடங்கிய குழு நியமனம்

இலங்கை கிரிக்கட் சபை செயலாளர் தெரிவிப்பு

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு அவுஸ்திரேலியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள தனுஷ்க குணதிலக தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சிசிர ரத்நாயக்க தலைமையில் மூவர்

06

வடக்கில் மாவீரர் தின ஏற்பாடுகள்:

## புலிகள் குறித்த பிரசாரத்தை தவிர்க்குமாறு வேண்டுகோள்

மீறுவோர் கைதாவர் என பொலிஸார் அறிவிப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது அதன் உறுப்பினர்கள் மீதான எந்தவொரு பிரசாரத்தையும் தவிர்க்குமாறு பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் வடக்கில் மாவீரர்தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் தரப்பினருக்கு அறிவித்துள்ளனர். இந்த அறிவிப்பை மீறும் எந்த

06

## தாய்லாந்து தூதுவரின் இல்லத்தில் திருட்டு!

கொழும்பில் ஞாயிறு அதிகாலை சம்பவம்



கொழும்பு ஃப்ளவர் வீதியிலுள்ள தாய்லாந்து தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். தாய்லாந்து தூதுவர் போஜ் ஹன்போலின் வாசஸ்தலத்துக்குள் நுழைந்த மர்ம நபர்

06

யால சரணாலய சம்பவம்:

## பாரபட்சமற்ற விசாரணை நடைபெற்று வருகிறது

சிலர் கைது; வாகனங்களும் மீட்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



யால சரணாலய பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புபட்ட வாகனங்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளதாக

06

## இறக்குமதி செய்த எரிபொருள் விபரம்

சபையில் சமர்ப்பித்தார் கஞ்சன

லோரன்ஸ் செல்வநாயகம்



2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் தொடர்பான முழுமையான விடயங்களை சபைக்கு

06

கந்தக்காடு மோதல் சம்பவம்:

## ஐவர் அடங்கிய குழு விசாரணைக்கு நியமனம்



கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசாரணை நடவடிக்கைகளுக்காக சிரேஷ்ட அதிகாரிகள் ஐவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம், மேஜர் ஜெனரல்

06

## SLMC யின் தலைவராக ஹக்கீம் மீண்டும் தெரிவு

புத்தளம் பேராளர் மாநாட்டில் தீர்மானம்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 30ஆவது பேராளர் மாநாடு நேற்றுமுன்தினம்(07) புத்தளத்தில் நடைபெற்றது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்,

06


90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

















## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின், 30 ஆவது பேராளர் மாநாடு புத்தளத்தில்











### கலாபூஷணம் நூருல் அயினின்

# "மின்னும் தாரகைகள்" நூல் அறிமுகம் கட்டாரில்

ஸ்கை தமிழ் வலையமைப்பு மற்றும் கட்டார் முத்தமிழ் மன்றம் ஆகியன கூட்டாக இணைந்து ஏற்பாடு செய்த இலங்கையின் மூத்த எழுத்தாளரும், அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரியுமான கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைனின் "மின்னும் தாரகைகள்" நூல் அறிமுக விழா கட்டார் CWF அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு சிறப்பதிதிகளாக கட்டார் நாட்டிற்கான இலங்கைதூதரகசிரேஷ்டஅதிகாரி ரஷீத்.எம்.பியாஸ் (நளீமி), கத்தார் இஸ்லாமிய வங்கி முகாமையாளர் முஹம்மத் சிராஜ் ஏ. முத்தலீப், CWF தலைவர் முஹம்மத் அக்ரம், கத்தார் முத்தமிழ் மன்ற நிர்வாகக் குழு உறுப்பினர் குருஸ்ரீ, கட்டார் தமிழ் சொல்வேந்தர்கள் மன்றத் தலைவி ஷோபா ராஜ், ஒருங்கிணைந்த தமிழர் பேரவை செயலாளர் வலியுல்லாஹ், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் நஜ்முல் ஹுசைன், அனைத்து சம்மேளன கட்டார் தலைவர் அமீர் தீன் மௌலானா, இலங்கையின் பிரபல நாவலாசிரியை ஜரீனா முஸ்தபா ஆகியோரும், விசேட அதிதிகளாக ஸ்கை தமிழ் வலையமைப்பின் பணிப்பாளர் ஜே. எம். பாஸித், முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி, புத்தளம் சங்கம் கட்டார் தலைவர் சாஜித் ஜிப்ரி, கட்டார் வாழ் இலங்கை மகளிர் அமைப்பின் உதவிப் பொதுச் செயலாளர் மோகன பிரியா பிரசாத், கட்டார் முத்தமிழ் மன்றம் விஜய் ஆனந்த், கட்டார் தமிழ் சொல்வேந்தர்கள் மன்றம் நிர்வாக குழு உறுப்பினர் ஹாழிர் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அதிதிகளுக்கு நூலாசிரியையினால் "மின்னும் தாரகைகள்", தமிழ் மற்றும் சிங்கள நூல்பிரதிகள் கையளிக்கப்பட்டன. கத்தார் தமிழ் சொல்வேந்தர்கள் மன்றத் தலைவி ஷோபா ராஜ், கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் அவர்களுக்குப் பொன்னாடைப் போர்த்தி கௌரவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 நவம்பர் 9 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
08 முதல் 15 வரை
சுபஹ் - 04.41
லுஹர் - 11.56
அஸர் - 03.18
மஃரிப் - 05.50
இஷா - 07.02

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஐப்பசி 22
ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: அமிர்த சித்தயோகம்
திதி: பிரதமை



இராசி பலன்கள்
மேஷம் - சுகம்
ரிஷபம் - நன்மை
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - நிறைவு
கன்னி - முயற்சி
துலாம் - கோபம்
விருச்சிகம் - பாராட்டு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - செலவு
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

### அரசாங்கத்தின் கொள்கையில் உறுதி
# நாட்டில் எவருக்கும் அவமதிப்பு ஏற்பட ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது
### பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் எவருக்கும் எந்தவித அவமதிப்பும் இடம் பெறுவதற்கோ அல்லது எதையும் மறைப்பதற்கோ இடமளிக்க முடியாது. அவ்வாறான கொள்கையின் அடிப்படையிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது என பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ரோஹிணி கவிரத்ன எம்பி எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டில் பிள்ளைகள் மட்டுமன்றி எவரும் அவமதிப்புக்குள்ளாக இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

06

### எரிபொருளை வழங்காத
# நிரப்பு நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை



கடந்த சில நாட்களாக நுகர்வோருக்கு எரிபொருளை வழங்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு பெற்றோலியத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த நாட்களாக சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகம் சீராக இடம்பெறுவதில் தடைகள் ஏற்பட்டிருந்தன. இதன் காரணமாக எரிபொருள் நிலையங்களில் வரிசைகள் காணப்பட்டன.

எரிபொருள் விலைச்சூத்திரன்படி கடந்த 5 ஆம் திகதி எரிபொருளின் விலைகள் குறையலாம் என்ற அச்சம் காரணமாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் அவற்றை கொள்வனவு செய்து விநியோகிப்பதில் காட்டிய தயக்கமே இந்த நிலைமை ஏற்படக் காரணம் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

# காத்மண்டுவில் நேற்று 4.5 ரிச்டர் நிலநடுக்கம்
### பாரிய சேதம் பதிவாகவில்லை



நேபால் காத்மண்டு நகரில் நேற்றைய தினம் 4.5 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

நேபாலின் தலைநகர் காத்மண்டுவிலிருந்து 155 கிலோமீற்றர் தொலைவில் 100 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நில நடுக்கம் பதிவாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலநடுக்கத்தினால் எவ்வித சேதங்களும் பதிவாகவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 19 ஆம் திகதி நேபால் காத்மண்டுவில் 5.1 ரிக்டர் அளவில் நில நடுக்கம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண:
# பொறுப்பு, அர்ப்பணிப்புடன் செயல்படுவது அவசியம்
### சபையில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக அனைவரும் ஒன்றிணைந்து பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டியது அவசியம் என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு முரண்பாடற்ற வகையில் வெளிப்படைத் தன்மையுடன் தீர்வு காண அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் என தெரிவித்த அமைச்சர், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக அரசு பொறுப்புடன் செயற்படும் போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சில ஆதரவாளர்களை வைத்துக் கொண்டு அதற்கு தடையேற்படுத்தும் வகையில் செயற்பட்டமை கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சர் சபையில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒக்டோபர் மாதம் 31 மற்றும்

06



# இனப்பிரச்சினைக்கு தீர்வின்றி பொருளாதார மீட்சி இல்லை
### ராசமாணிக்கம் சாணக்கியன் எம்பி சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வு காணாது நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் இராஜமாணிக்கம் சாணக்கியன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிரச்சனைகளின் உண்மைத் தன்மை தொடர்பில் இனியாவது சிங்கள மக்களுக்கு உண்மைகளைக் கூறுங்கள் என்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு சுதந்திரக்குப் பின்னர் நாட்டை ஆட்சி செய்த அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

மனோ கணேசன் எம்பி சபையில் உரையாற்றிய போது இந்திய வம்சாவளி தொழிலாளர்கள் நாட்டுக்கு ஆற்றிய பணிகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். எனினும் 1948ஆம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்த பின் டி.எஸ்.சேனாநாயக்க இந்திய வம்சாவளி மக்களின் பிராஜாவுரிமையை பறித்தார்.



அதுவும் பொருளாதாரப் பின்னடைவுக்குக் காரணமாகியது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இளைஞர்களுக்கு காணிகளை வழங்காது வேறு மாவட்டங்களில் இருந்து இளைஞர்களை அழைத்து வந்து காணிகளை வழங்கினார்கள்.

மாத்தறை மாவட்டத்தில் அதிகளவானோர் காணிகள் இல்லாதிருக்க மட்டக்களப்பில் உள்ளவர்களுக்கு அங்கு காணிகளை வழங்குவதை மாத்தறை மக்கள் ஏற்றுகொள்வார்களா?

இப்போதாவது சிங்கள மக்களுக்கு அரசாங்கம்

06

# ஆசிரியர், மாணவர்களது சீருடையில் மாற்றமில்லை
### பாராளுமன்றில் கல்வியமைச்சர் சுசில் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆசிரியைகள், ஆசிரியர்களின் உடை முறைமையிலேயோ அல்லது மாணவர்களின் சீருடை முறைமையிலோ எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ளப்போவதில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றிய போதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் கல்வி முறைமை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஆசிரியைகள் சேலையையே அணிகின்றனர். இஸ்லாமிய ஆசிரியைகள் சேலையை அணித்து தலைக்கு பர்தாவை அணிகின்றனர். இதுவரை ஆசிரியர்களின் உடை தொடர்பில் எவ்வித பிரச்சினைகளும் எழவில்லை. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் சீருடையில் எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ள போவதில்லை என விவேகானந்தா பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்தேன்.

அங்கு வருகைதந்திருந்த 300 முதல் 400 வரையிலான பெண்கள் அதற்கு பாரிய கரகோசத்தினை தந்து ஆதரித்தனர்.

தமிழர்கள், கலாசாரம் அழிந்துவிடக்கூடாது என்பதிலும், சேலையே ஆசிரியைகளுக்கான உரிய உடை எனவும் அவர்கள் எடுத்துணர்திய தாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஆகையினால் ஆசிரியை,

06

# கப்பல் விபத்தில் மீட்கப்பட்டவர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் பெற ஐ.நா.வின் நடவடிக்கை அவசியம்
### பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்தல்

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

கப்பல் விபத்திலிருந்து மீட்கப்பட்ட ஈழத்தமிழ் அகதிகளுக்கு அவர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் பெற்றுத் தர ஐ.நா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ம.க நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து டாக்டர் ராமதாஸ் கூறியதாவது, "கனடா நாட்டில் தஞ்சம் புகும் நோக்குடன் 306 ஈழத்தமிழ் அகதிகள் பயணித்த கப்பல் பிலிப்பைன்ஸ் அருகில் புயலில் சிக்கித் தவித்த நிலையில், அவர்களை சிங்கப்பூர் அதிகாரிகள் மீட்டு வியட்நாமுக்கு அனுப்பி வைத்திருப்பது நிம்மதியளிக்கிறது. சிங்கப்பூர் அரசு காலத்தினால் செய்த உதவி பாராட்டத்தக்கது.

முதலில் போராலும், பின்னர் பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் இலங்கையில் தொடர்ந்து வாழ முடியாமல், பிற நாடுகளில் தஞ்சமடைய தவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவில் அவர்களுக்கு அகதிகள் தகுதியும், கண்ணியமான வாழ்வுரிமையும் மறுக்கப்படுகிறது. அதனால் கனடா, இங்கிலாந்துக்கு சொந்தமான டியாகோ கார்சியா தீவு, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் தஞ்சம் தேடி பாதுகாப்பற்ற முறையில் கப்பல் பயணம் மேற்கொள்ளும் ஈழத்தமிழ் அகதிகள் பல தருணங்களில் விபத்துகளில் சிக்கிக் கொள்கின்றனர். இதுவரை நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

கப்பல் விபத்திலிருந்து மீட்கப்பட்ட ஈழத்தமிழ் அகதிகளுக்கு அவர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் பெற்றுத் தரவும், இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் அந்த நாட்டின் ஏழை, எளிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கவும் ஐநா நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

# வெட்டுக் காயங்களுடன் ஆணொருவர் சடலமாக மீட்பு
### கிளிநொச்சி புதுமுறிப்பில் சம்பவம்



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் நீர்ப்பாசன வாய்க்காலில் வெட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வீதியில் சென்றவர்கள் சடலம் வாய்க்காலில் இருப்பதனை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸாரினால் சடலம் மீட்கப்பட்டது.

கிளிநொச்சி கோணாவில் ராஜன் குடியிருப்பை சேர்ந்த ப. சத்தியராஜ் (வயது 36) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரின் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட பின்னர் புதுமுறிப்பு குளத்தின் கீழ் உள்ள நீர்ப்பாசன வாய்க்காலில் சடலத்தை வீசியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பாக மேலதிக விசாரணையை கிளிநொச்சி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

### மேற்பார்வைக் குழுக்கள், நிலையியற் குழுக்களை நியமிக்க:
# ஆதரவு வழங்குமாறு சபாநாயகர் கோரிக்கை



பாராளுமன்றத்தில் நியமிக்கப்படவுள்ள 17 துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கான சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான பிரேரணை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் நேற்று (08) அறிவித்தார்.

அதேபோன்று, நியமிக்கப்படவுள்ள குழுக்கள் தொடர்பில் இறுதித்தீர்மானத்துக்கு வந்து அனைத்துப் பணிகளையும் ஆரம்பிப்பதற்கு அவசியமான ஆதரவை வழங்குமாறு சபாநாயகர் அனைத்து உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்தார்.

அதற்கமைய, நேற்று (08) இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு மற்றும் தெரிவுக்குழுக் கூட்டங்களில் இந்தத் துறைசார் மேற்பார்வைக்குழுக்கள் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பிலும் வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு (Committee on Banking and Financial Services), பொருளாதார உறுதிப்படுத்தல் குழு (Committee on Economic Stabilization) மற்றும் வழிவகைகள் பற்றிய குழு (Committee on Ways and Means) ஆகிய மூன்று குழுக்களை நியமிப்பது தொடர்பிலும் அனுமதி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 223.10 | 233.90 |
| கனடியன் டொலர் | 257.50 | 269.44 |
| யூரோ | 345.67 | 360.32 |
| ஜப்பான் யென் | 2.4481 | 2.5509 |
| சிங்கப்பூர் டொலர் | 247.77 | 258.33 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 394.42 | 410.24 |
| சுவிஸ் பிராங்க் | 355.17 | 372.22 |
| அமெரிக்க டொலர் | 359.23 | 369.96 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 961.64 | கட்டார் ரியால் | 99.31 |
| குவைத் டினார் | 1,168.79 | சவூதி ரியால் | 96.54 |
| ஓமான் ரியால் | 942.56 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.79 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 23ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 13

### குறள் தரும் சிந்தனை



மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு

*வீரம், மான உணர்வு, முன்னோர் சென்ற வழி நடத்தல், தலைவனின் நம்பிக்கையைப் பெறுதல் ஆகிய நான்கும் படையைப் பாதுகாக்கும் பண்புகளாகும்.*

# சட்டவிரோத புலம்பெயர்வில் நிறைந்துள்ள உயிராபத்து!

அபிவிருத்தி அடைந்துள்ள மேற்குலக நாடுகளுக்கு கடல்மார்க்கமான சட்டவிரோதப் புலம்பெயர்வு முயற்சிகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. இவ்வாறான முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்றும், மீன்பிடிப் படகுகளில் கடல் மார்க்கமாக மேற்கொள்ளும் முயற்சிகள் பாதுகாப்பற்றவையும் உயிராபத்து மிக்கதுமாகும் என்றும் அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக கடல்மார்க்கமாக சட்டவிரோமாகப் பயணித்து தமது நாட்டுக்குள் வருகை தர வேண்டாம் என்றும் அவ்வாறு வருபவர்கள் தாய்நாட்டுக்கே திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் அவுஸ்திரேலியா அடிக்கடி விளம்பரங்களைச் செய்து கூறி வருகிறது.

அப்படியிருந்தும் சட்டவிரோதமான முறையில் பாதுகாப்பற்ற மீன்பிடிப்படகுகளில் கடல்மார்க்கமாகப் புலம்பெயர்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் சிலாபம், மட்டக்களப்பு, திருகோணமலை, மாத்தறை போன்ற பல பிரதேசங்களில் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணிக்க ஏற்பாடு செய்ய செய்யப்பட்டிருந்த படகுகளும் கைப்பற்றுள்ளன. அதேநேரம் ஒருசிலர் இந்நாட்டின் கடற்பரப்புக்குள் வைத்தும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத புலம்பெயர்வு நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான முயற்சிகளும் அடிக்கடி இடம்பெறவே செய்கின்றன. சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் ஏமாற்று வார்த்தைகளை நம்பியே இவ்வாறான முயற்சிகளில் பலர் ஈடுபடுகின்றனர். ஆனால் கடல்மார்க்கமான சட்டவிரோதப் புலம்பெயர்வு மிகவும் ஆபத்தானதும் பயங்கரமானதுமாகும். ஆழ்கடலில் இடம்பெறும் அனர்த்தங்களும் அதன் விளைவான மரணங்களும் இதற்கு நல்ல சான்றுகளாகும்.

இவ்வாறான ஆட்கடத்தல் வியாபாரம் உலகின் எல்லா எல்லாப் பிராந்தியங்களிலும் இடம்பெறவே செய்கின்றது. இன்றைய காலகட்டத்தில் அதிக இலாபம் ஈட்டக் கூடிய ஒரு செயற்பாடாகவே இவ்வியாபாரம் விளங்குகிறது.

சட்டவிரோத புலம்பெயர்வுக்கு எதிரான கடும் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சூழலிலும் கூட 300 க்கும் மேற்பட்ட இலங்கையர் பயணித்துக் கொண்டிருந்த மீன்பிடிக் கப்பலொன்று வியட்நாம் நாட்டின் தெற்குக் கடற்கரையில் அமைந்துள்ள வொங்க் தௌ துறைமுகத்தில் இருந்து 258 கடல் மைல் தொலைவில் பிலிப்பைன்ஸுக்கும் வியட்நாமுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் இரண்டொரு தினங்களுக்கு முன் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளது. அச்சமயம் கடற்பரப்பு கொந்தளிப்பாகக் காணப்பட்டுள்ளதோடு, குறித்த கப்பல் கடுங்காற்றில் சிக்குண்டதால் கப்பலின் என்ஜின் பகுதிக்குள் கடல்நீர் உட்புகுந்திருக்கின்றது.

இந்நிலையில் கப்பலோட்டி சிறிய படகொன்றில் தப்பியோடியதாகத் தகவல்கள் வெளியாகின. இவ்வாறான நிலையில் குறித்த கப்பலில் இருந்த ஒருவர், தாம் பயணித்துக் கொண்டிருக்கும் கப்பல் அனர்த்தத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும் தம்மையும் கப்பலில் இருப்பவர்களையும் காப்பாற்ற விரைந்து செயற்படுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் விரைந்து செயற்பட்ட இலங்கை கடற்படையின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம், இவர்களைப் பாதுகாப்பாக மீட்பதற்கு சிங்கப்பூர், வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவியைக் கோரியது. அக்கோரிக்கைக்கு சிங்கப்பூர் உடனடியாக பதிலளித்தது. வியட்நாம் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தினர் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள கப்பலுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும் முயற்சியை மேற்கொண்டதோடு, இக்கப்பல் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள கடற்பிராந்தியத்தில் அவ்வேளையில் காணப்பட்ட கப்பல்களுக்கு அவசர உதவிக்கான சமிக்ஞையையும் விடுத்தனர்.

அந்த சமிக்ஞையின் அடிப்படையில் அச்சமயம் ஜப்பானிய கொடியுடன் அப்பிராந்தியத்தில் காணப்பட்ட ஹீலியோஸ் லீடர் என்ற கப்பல் விரைந்து செயற்பட்டதோடு மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் இருந்த 264 ஆண்களையும் 19 பெண்களையும் 20 குழந்தைகளையும் நேற்றுமுன்தினம் பாதுகாப்பாக மீட்டு, வியட்நாம் வொங் தௌ துறைமுகத்திற்கு அழைத்து வந்துள்ளது. உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு அவர்கள் தற்போது வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பிலான இராஜதந்திர ரீதியிலான தொடர்புகளை இலங்கை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

அனர்த்தத்திற்கு உள்ளான லேடி 3 என்ற இக்கப்பல், 300 க்கும் மேற்பட்ட இலங்கையருடன் தாய்லாந்தில் இருந்து மியன்மார் நாட்டு கொடியுடன் கனடா நோக்கி பயணித்துக் கொண்டிருந்ததாக ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

ஆனால் கடல்மார்க்கமான சட்டவிரோத புலம்பெயர்வு மிகப் பயங்கரமானதும் ஆபத்துக்கள் நிறைந்ததும் ஆகும் என்பதற்கு இந்த சம்பவமும் நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஆகவே கடல்மார்க்கமான சட்டவிரோத புலம்பெயர்வு குறித்த ஆட்கடத்தல்காரர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமாறுவதையும் உயிராபத்து மிக்க அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதையும் தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் வேண்டும். அது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# சாணக்கியம் நிறைந்த அரசியல் தலைவர் ஜீவன் தொண்டமான்

## இன்று 28ஆவது பிறந்தநாள்

இளம் வயதில் அரசியல் பிரவேசம் செய்வதென்பது புதிய விடயமல்ல, ஆனால் மிகவும் இளமையான பருவத்தில் இலங்கை அரசியலில் பிரவேசித்து, ஒரு இ ராஜாங்க அமைச்சராக பொறுப்பேற்றிருந்தமை மிகவும் அபூர்வமான விடயம்.

அ ப்படி ஒரு வாய்ப்பைப் பெற்றிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் இதுவரை சாதுரியமாக அரசியல், தொழிற்சங்கப் பணி செய்து வருகின்றார்.

இது பெருந்தோட்ட சமூகத்திற்குக் கிடைத்த கௌரவமாகவே கொள்ளப்பட வேண்டிய விடயம். சரியான தருணத்தில் தொலைநோக்கோடு தொழிற்சங்கப் பணியில் ஈடுபட்டதன் மூலம் தனது சாணக்கியத்தை நிலைநாட்டியவர் அவரது தந்தையாரான அமரர் ஆறுமுகன் தொண்டமான்.

தமக்குக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கொண்டு குறுகிய காலத்தில் முழு மலையகத்தையும் தன்பால் ஈர்த்துக் கொண்டவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான். இதன் பெறுபேறாக இன்றைய அரசாங்கத்தில் நம்பிக்கைக்குரிய அரசியல் பிரமுகராக மதிக்கப்படுகின்றார் ஜீவன். மலையக பெருந்தோட்ட நலன் சார்ந்த விடயங்களில் இவரது தீர்மானங்கள் மக்களால் போற்றப்படுகின்றன. அவரின் அர்ப்பணிப்பான முயற்சியின் பயனாகவே சிறந்த இளம் அரசியல்வாதியாக அவர் பாராட்டப்படுகின்றார். மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளத்தை பெற்றுத் தந்து தந்தையின் கனவை நனவாக்கியவர் ஜீவன். தேசிய மட்ட அரசியல் தலைமைகளோடு மிக நெருக்கமான தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டும், தமிழக அரசியல் தலைவர்களோடு உறவுகளை பேணுவதிலும் தனது கவனத்தை செலுத்தி வருகின்றார் அவர்.

அண்மையில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுடனான சந்திப்பின் போது தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் நலன்கள் தொடர்பாகவும், மலையக மக்களுக்கான அபிவிருத்திகள், உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி மேம்பாட்டுக்கான உதவிகள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் அமையவுள்ள பல்கலைகழகத்திற்கான இந்திய அரசாங்கத்தின் உதவிகள் தொடர்பாகவும் அவர் கலந்துரையாடியமை இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டிய ஒரு அம்சமாகும்.





மலையகத்தின் இளைய தலைமுறை நாயகனாக அவர் வலம் வருகின்றார். இளம் வயதிலேயே அரசியலில் அனுபவ முதிர்வை வெளிக்காட்டும் அவர், மலையக சமூகத்தின் முன்னேற்றமான மாற்றத்திற்கான முன்னெடுப்புக்களை துணிச்சலுடன் மேற்கொண்டு வருவதன் மூலம் நம்பிக்கை விடிவெள்ளியாகத் திகழ்கின்றார்.

இன்று அவரது 28 ஆவது பிறந்த நாள் ஆகும். அவரின் இடைவிடாத முயற்சிக்கும் அயராத உழைப்பிற்கும் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கின்றனர் மலையக மக்கள்.

**சவரிமுத்து தேவதாஸ்...**
*சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்*
*இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்*

# உருமாறி வரும் நூலகங்களுடன் மக்களை ஒன்றிணைத்தல்

## சர்வதேச ஆய்வு மாநாடு ICULA 2022

கடந்த இரண்டரை வருட கால இடைவெளிக்குப் பின்னர், அண்மையில் முதற்தடவையாக நேரடிப் பிரசன்னத்துடன், இலங்கைப் பல்கலைக்கழக நூலகர் அமைப்பினர் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நூலக, தகவல் விஞ்ஞான நிலைக்குழுவோடு இணைந்து, சர்வதேச ஆய்வு மாநாடொன்றைப் பிரமாண்டமானமுறையில் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தனர்.

கல்வி மற்றும் நூலகத் தகவல் விஞ்ஞானத் துறைகளில் வீரியம் பெற்றுவரும் பல்வேறு அபிவிருத்திப் போக்குகளை ஆய்வுகளினூடு ஆராய்ந்த இம்மாநாட்டில் மாலைதீவு, இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த பல்வேறு ஆய்வாளர்களும், துறைசார் விற்பன்னர்களும் தத்தமது புலமைசார் படைப்புக்களை விஞ்ஞானபூர்வமாக நிரூபித்தனர். அத்துடன் சமகாலச் சவால்களை எவ்வாறு ஆரோக்கியமாக மேற்கொண்டு, நூலகத் துறையை மீள் பொறிமுறைக்குள்ளாக்கும் நுட்பமுறை பற்றியும் ஓர் அறிவுசார் குழுநிலை விவாதமும் நடைபெற்றது.

இலங்கைப் பல்கலைக்கழக நூலகர் அமைப்பின் தலைவரும், இச்சர்வதேச ஆய்வு மாநாட்டின் இணைத்தலைவருமான கலாநிதி டபிள்யூ. ஜெ. ஜெயராஜ் இதுகுறித்துக் கூறுகையில், ஓர் நாட்டின் தரநிர்ணயமானது, அறிவுசார் சமூகத்தின் விகிதாசாரத்தை வைத்தே கணிக்கப்படுவதுடன், இவ்வறிவுசார் சமூகத்தைச் செல்நெறிப்படுத்துவதில் நூலகத் தகவல்துறை பாரிய பங்காற்றிவருவதால், கொரோனா பேரிடர்பாட்டுக்குப் பின்னரான புதிய இயல்புநிலைக்கேற்ப மீள் உருவாக்கலுக்குள்ளாகி வரும் நூலகத்துறையினை மக்களுடன் இணைக்க வேண்டிய தேவைப்பாடுள்ளதெனக் குறிப்பிட்டார்.

பிரதம அதிதியாக, இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நூலக, தகவல் விஞ்ஞான நிலைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் பிரேமகுமார டி. சில்வா மற்றும் கௌரவ அதிதியாகக் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வி. கனகசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய இச்சர்வதேச மாநாட்டில், தலைவருக்கான ஆரம்ப உரையினை அமைப்பின் தலைவர் கலாநிதி டபிள்யூ. ஜெ. ஜெயராஜ் நிகழ்த்தினார். மாநாட்டு அறிமுக உரையினை மாநாட்டு இணைத்தலைவர் கலாநிதி சி. சி. ஜயசுந்தர நிகழ்த்தியிருந்தார்.

பிரதம அதிதி தமதுரையில், கற்றல் மற்றும் தொடர்பாடல் வலையமைப்பினைக் கட்டியெழுப்பிவரும் பல்கலைக்கழக நூலகங்கள், மக்களை இலகுநிலையில் உள்வாங்கும் நிலையில் தமது பாரிய பங்களிப்பினை அளித்து வருவதை பாராட்டிப் பேசினார். கௌரவ அதிதி தமதுரையில், நூலகங்களின் மரபுசார் வழிமுறைகளிலிருந்து தொழினுட்பரீதியிலான படிமுறை வளர்ச்சிக்கு அத்திவாரமிடுவதில் இவ்வாறான ஆய்வு மாநாடுகள் செல்வாக்குச் செலுத்துவதையும்;, எதிர்காலச் சந்ததியினரைப் புடமிடுவதில் மேற்கொள்ளப்பட்டுவரும் நூலக ஆய்வுகளின் தளங்களையும் வெகுவாகச் சிலாகித்துப் பேசினார்.

இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் அரங்கேறிய, கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பட்டதாரி மாணவர்களின் கலாசார நடனம் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தது.



இலங்கைப் பல்கலைக்கழக நூலகர் அமைப்பின் சர்வதேச மாநாட்டின்போது பிரதம அதிதியான இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நூலக தகவல் விஞ்ஞான நிலைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் பிரேமகுமார டி. சில்வாவுக்கு இலங்கைப் பல்கலைக்கழக நூலகர் அமைப்பின் தலைவரும், சர்வதேச மாநாட்டு இணைத்தலைவருமான கலாநிதி டபிள்யூ. ஜெ.ஜெயராஜ் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

மேலும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக்கழக நூலகர் டொக்டர் வத்மானெல் செனவிரெட்ண, களனிப் பல்கலைக்க ழக நூலக, தகவல் விஞ்ஞான சிரேஷ்ட விரிவுரையாள ர் டொக்டர் நாமலி சுரவீர மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக பிரதி நூலகர் டொக்டர் டி. சந்திராணி குருப்பு ஆகியோர் தலைவர்களாகவும், இலங்கைப் பல்கலைக்கழக நூலகர் அ மைப்பின் பொதுச் செயலாளர் டொக்டர் கல்பனா சந்திர சேகர், நிர்வாகக்குழு உறுப்பினர்களான டொக்டர் சிராந்தி விஜேசுந்தர,டொக்டர் கே.டி.என் ஹர்சனி ஆகியோர் அறிக்கையாளர்களா கவும் செயற்பட்ட மூன்று ஆய்வரங்குகளில் பதினொரு ஆளுமை ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு விவாதிக்கப்பட்டன.

இவ்வாய்வரங்கின் சிறந்த ஆய்வுக்கான விருதினை டொக்டர் உதய க ப்ரால், சிறந்த அளிக்கையாளருக்கான விருதினை திருமதி எம். பி ராஜபக்ஷ ஆகியோர் கைப்பற்றினர்.

மா நாட்டு ஆய்வு நூலானது வெளியீட்டுக் குழு அங்கத்தவர்களான டொக்டர் சிராந்தி விஜயசுந்தர, டொக்டர் கே. டி. என.; ஹ ர் ச னி ஆகியோரால் பிரதம அதிதி, கௌரவ அதிதி ஆகியோருக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

வரலாற்றுச்சிறப்புமிக்க இச்சர்வதேச ஆய்வு மாநாட்டின் இணைச்செயலாளர்களாக ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களின் சிரேஷ்ட உதவி நூலகர்களான டொக்டர் மனோஜா சமரதிவாகர, டொக்டர் மஞ்சுள விஜேசுந்தர ஆகியோரும், இயங்குநிலைக் குழுவினர்களாக சகல நிர்வாகக் குழு அங்கத்தவர்களும் செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



மாநாட்டில் கலந்து கொண்ட அதிதிகள், ஆய்வாளர்கள், விமர்சகர்கள், நூலகத்துறைசார் விற்பன்னர்கள் ஆகியோரை படத்தில் காணலாம்.

# அகிலன் பிறந்ததின நூற்றாண்டு விழா; சென்னையில் இருநாள் கருத்தரங்கு

எழுத்தாளர் அகிலன் நூற்றாண்டு விழா சென்னை லயோலா கல்லூரியில் இரண்டு நாள் கருத்தரங்காக நடைபெற்று வருகிறது. இதன் தொடக்கவிழாவில் சாகித்திய அகடமியின் பொறுப்பு அலுவலர் சந்திரசேகர ராஜ் அனைவரையும் வரவேற்று, சாகித்திய அகடமியின் செயற்பாடுகள் குறித்து விளக்கினார்.

சிறப்புரை ஆற்றிய கல்லூரியின் தாளாளர் போனிபஸ் ஜெயராஜ் "சாகித்திய அகடமியானது கொரோனா காலத்திலும் இணையவழியில் நிகழ்ச்சிகளை நடத்தித் தமிழை வளர்ப்பதில் முக்கிய அமைப்பாக இருந்து வருகிறது. அகிலனின் பன்முகத் திறமையை வெளிப்படுத்தும் கருத்தரங்காக இது அமையும். தமிழக அரசு 100 இளம் பத்திரிகையாளர்களை லயோலா கல்லூரியில் உருவாக்க பொருளுதவி செய்துள்ளது" என்று கூறினார்.



அறிமுக உரை ஆற்றிய பாரதிபாலன், "அகிலன் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ள விரும்பி பாரதியார் பாடல்கள் தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் துணிந்து பாட முயற்சி செய்தார். பள்ளிப் பருவத்தில் 'அவன் ஏழை' என்ற தலைப்பில் ஒரு சிறுவனின் ஏக்க உணர்வைக் குறித்த தன் முதல் கதையை எழுதினார். காந்தி மீது கொண்ட பற்றால் கதர் உடுத்தித் திருமணம் செய்தவர் அகிலன்" என்று கூறினார்.

தொடக்கவுரை நிகழ்த்திய திலகவதி IPS, ஞானபீடம் பெற்ற முதல் எழுத்தாளர் அகிலன் என்றும், 'எழுத்தும் வாழ்க்கையும்' என்ற அவரது சுயசரிதை அவரைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள உதவும் என்றும் கூறினார். தலைமையுரை ஆற்றிய பத்மஸ்ரீ கவிஞர் சிற்பி, தான் 1952 இல் வெளிவந்த 'சிநேகிதி' என்ற பின் நவீனத்துவ நாவல் குறித்துப் பேசினார். வாழ்வுக்காகத்தான் கலை, அன்பு காட்டுவதே கலைஞனின் நோக்கம் என்பதே அகிலனின் சித்தாந்தம் என்றும் தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

வாழ்த்துரை வழங்கிய அகிலனின் மகன் அகிலன் கண்ணன், தன் தந்தை ICS படிக்க வேண்டும் என்று தன் தாத்தா விரும்பியதாகவும் அது நடைபெறவில்லை என்றும், பல்கலைக்கழகங்களில் நவீன இலக்கியங்களை கொண்டு செல்ல குரல் கொடுத்தவர் தனது தந்தை என்றும் கூறினார். இறுதியாக தமிழ்த் துறைத் தலைவர் அமல்ராஜ் நன்றி கூறினார்.

தலைமையுரையாற்றிய கே.எஸ்.ராதாகிருஷ்ணன், "அகிலன் அறச்சீற்றம் கொண்டவர். வள்ளுவரை வழிகாட்டியாகக் கொண்டவர். நேரு, இந்திரா, ஜெயப்பிரகாஷ் நாராயண், காமராஜர், அண்ணா , பக்தவத்சலம் , கலைஞர், எம். ஜி. ஆர் என்று பல தலைவர்களிடமும் பழகியவர். அவர்களும் இவரிடம் மரியாதை கலந்த அன்பு செலுத்தினர். அவர்களில் பலரையும் தம் படைப்புகளில் நேரடியாகவே விமர்சித்த சுதந்திர மனிதர். கலைஞர் சிறையில் அடைக்கப்பட்ட போது கலைஞர் அகிலனின் 'வேங்கையின் மைந்தன்', 'பொன்மலர்' நாவல்களை வாங்கி வரச் சொல்லிப் படித்தார். இலங்கையில் பலரது வீடுகளில் அகிலனின் நூல்கள் பலவும் இருக்கும். அகிலனின் புகைப்படங்களைக் கூட சில வீடுகளில் கண்டுள்ளேன். ஒரு முறை அமிர்தலிங்கம் துணைவியார் அகிலனைப் பார்க்க விரும்பிச் சென்றபோது, 'நீங்கள் இலங்கை வந்திருந்த போது ஓரிடத்தில் யானைக் கூட்டம் விரட்டியதைக் குறித்து எழுதியிருந்தீர்கள். அது எங்கே' என்று கேட்டார்.

அகிலன் சிரித்துக் கொண்டே 'இவ்வளவு நினைவு வைத்துள்ளீர்களே' என்று பதிலும் கூறினார். அடுத்து உரையாற்றிய உமா மோகன் "வீட்டுக்குள் முடங்கிக் கிடந்து அடுப்பூதுவதற்கு மட்டுமே பெண்கள் அல்ல. சுதந்திரப் போராட்டத்தில் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண் என்பதுபோல் பெண்களும் வீதிக்கு வந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதை வெளிப்படுத்திய சிறந்த நாவல் பெண்.

அதேபோல் 'பொன் மலர்' நாவலில் நாயகி சங்கரி எந்த அளவுக்கு முக்கியமோ அதேபோல் ராஜேஸ்வரியும்படைக்கப்பட்டதே அகிலனின் பார்வையில் பெண்கள் எவ்வளவு முக்கியத்துவம் அடைந்துள்ளனர் என்பதை உணரமுடிகிறது" என்றார்.

அகிலன் பிறந்த நூற்றாண்டில் அவரது எழுத்தையும் வாழ்க்கையையும் நினைவு கூரும் விதத்தில் லயோலா கல்லூரியில் இருநாள் கருத்தரங்கு சாகித்த்ய அடமியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பாராட்டு முனைவர் பாரதி பாலனுக்குரியவை. அவர் தான் இந்தக் கருத்தரங்கை முன்னெடுத்தவர். ஒழுங்கு செய்தவர்.

சிற்பி பாலசுப்ரமணியம், திலகவதி, அகிலன் கண்ணன், கே.எஸ்.ராதாகிருஷ்ணன், கீழாம்பூர் சங்கர சுப்ரமணியம், பேராசிரியர் இரா. காமராசு,

(06ஆம் பக்கம் பார்க்க)







# மத்தியஸ்த சபைகளின் சேவை மக்களுக்கான வரப்பிரசாதம்

**மக்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளை பணச்செலவு மற்றும் காலவிரயமின்றி, இலகுவாகத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு, நாடளாவிய ரீதியில் பிரதேச ரீதியாக இயங்கிவரும் மத்தியஸ்த சபைகள் மூலம் ஏற்பட்டுள்ளது. மத்தியஸ்த சபைகளின் உதவியுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் தங்களுக்கிடையில் பரஸ்பரம் விட்டுக்கொடுப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டு கொள்வதால் மத்தியஸ்த சபைகளை நாடி வருபவர்களின் தொகையும் அதிகரித்து வருவதாக இத்துறையுடன் தொடர்புடைய அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.**

அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபைகளுக்கான புதிய மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்கான 'சமரச திறன்கள் மற்றும் உபாய மார்க்கம் தொடர்பான 05 நாள் பயிற்சி நெறி' அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலை கூட்ட மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அங்குரார்ப்பண நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் அஹமட் ஸாபிர் பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் அன்வர் சாதாத் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான பயிற்சி அதிகாரி எம்.ஐ.எம். ஆஸாத், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான பயிற்சி அதிகாரி செல்லத்துரை விமலராஜா ஆகியோர் ஐந்துநாள் பயிற்சி நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்தனர்.

ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் ஸாபிர் குறிப்பிடுகையில், "அரசியல் கலப்பற்ற மத்தியஸ்த சபைகளின் தோற்றத்திற்குப் பின்னர் பொலிஸ் நிலையம், பிரதேச செயலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. மக்களுக்கிடையில் பிணக்குகளை செலவு, நேர விரயமின்றி இலகுவாகத் தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு மத்தியஸ்த சபை மூலம் வழங்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

## பணச்செலவு, காலவிரயம் இன்றி பிணக்குகளை தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு

மத்தியஸ்த சபைகள் நமது நாட்டில் சிறப்பாக இயங்கி வருகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக சுமார் 20, 30 வருடங்கள் நீடித்த பிணக்குகளை ஒரு மாத காலத்தில் தீர்த்துக் கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. சிறிய சிக்கல்களுக்கு நீதிமன்றங்களை நாடுபவர்களின் தொகையும் கணிசமான அளவு குறைவடைந்துள்ளது" என்றார்.

"அட்டாளைச்சேனை மத்தியஸ்த குழாத்திற்கு அனுபவமிக்க துறைசார் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பினை வாழ்வில் கிடைத்த பெரும் பேறாகக் கருதி பணியாற்ற வேண்டும். எதிர்காலத்தில் இச்சபை மேலும் சிறப்பாக தொழிற்பட வேண்டும் என வாழ்த்துகின்றேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான பயிற்சி அதிகாரி எம்.ஐ.எம்.ஆஸாத் பேசுகையில், "சர்வதேச ரீதியில் மத்தியஸ்த சபைகளின் பணிகள் சிங்கப்பூருக்கு அடுத்தபடியாக இலங்கையில் சிறப்பாக அமைந்துள்ளன. நாளாவிய ரீதியில் பணியாற்றும் 08 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மத்தியஸ்தர்களினால் 02 இலட்சத்திற்கும் அதிகமான பிணக்குகள் வருடாந்தம் ஆற்றுப்படுத்தப்படுகின்றன. மத்தியஸ்த சபைகளின் சேவை மக்களுக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதம்" எனக் குறிப்பிட்டார்.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான பயிற்சி அதிகாரி செல்லத்துரை விமலராஜா பேசுகையில், "நமது நாட்டில் மத்தியஸ்த சபைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. தனது பிரதேசத்திற்கும், சமூகத்திற்கும் பணியாற்றக் கிடைத்துள்ள சந்தர்ப்பம் இதுவாகும். இதனை சவாலாக ஏற்று, மத்தியஸ்தர்கள் பணிகளை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். அரசினால் வழங்கப்பட்டுள்ள சட்ட அங்கீகாரத்திற்கு புறம்பாக மத்தியஸ்தர்கள் பணிகளை முன்னெடுப்பார்களேயானால் அதற்குப் பெயர் மத்தியஸ்தமல்ல என்பதை தெளிவாகத் தெரிந்து கொண்டு பணிகளை முன்னெடுக்க வேண்டும்" என்றார்.





அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபைத் தவிசாளர் ஐ.எல்.எம்.ஹாசிம் தலைமையில் நடைபெற்ற பயிற்சிநெறி இறுதிநாள் நிகழ்வுகளில், அட்டாளைச்சேனை ஜும்மா பெரியபள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அதிபர் ஏ.சி.எம்.ஹரிஸ் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# யா/மந்துவில் றோ.க.த.க பாடசாலையில் திறன் வகுப்பறை செயற்பாடுகள் ஆரம்பம்

**தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியம்(IFTF), கணபதி நிதியம் ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன், IMHO, USA ஆகிய நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பில் யா/மந்துவில் றோ.க.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நவம்பர் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.**

வித்தியாலய அதிபர் ந.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக கணபதி நிதிய இணைப்பாளர் க.ராஜேந்திர, தென்மராட்சிக் கல்வி வலய விஞ்ஞானபாட வளவாளர் சி.சக்திதரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

ஏற்கெனவே பயிற்சி வழங்கப்பட ஆசிரியர்களின் வழிகாட்டலில் மாணவ மாணவிகள் திறன் பலகையில் தமது பாடங்களை நிகழ்த்திய பாங்கு, நிகழ்வில் பங்கேற்றவர்களை ஈர்த்ததை காண முடிந்தது. ஆசிரியர் ஒருவரும் திறன்பலகையை தம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இந்நிகழ்வில் செய்து காட்டியமை குறிப்பிடத்தக்கது.



உதவியளித்திருந்த அமைப்புக்களுக்கு அதிபர் மற்றும் விருந்தினர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டதுடன், திறன்பலகையை தம் கற்றல் கற்பித்தலில் செயற்படுத்தும் ஆசிரியர்களுக்கான உபாயங்களும் வழங்கப்பட்டன.



அத்துடன் மாணவர்கள் தமது ஆராய்வூக்கம் மற்றும் ஆக்குதிறன் முயற்சிகளுக்காக எவ்வாறு திறன் பலகையை பயன்படுத்தி சிறப்பாக துலங்கலாம் என்பது பற்றிய அறிவுரைகளும் விருந்தினர்களால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, மாணவி ஒருவரது நன்றியுரையுடன் விழா நிறைவடைந்தது.

# சிங்கப்பூர் எழுத்தாளர் கழகத்தின் ஏற்பாட்டில் கதைக்களம் நிகழ்வு

**சிங்கப்பூர் அரசின் ஆதரவில் நடைபெற்று வரும் ஆங்கிலம், சீன, தமிழ், மலாய் மொழி எழுத்தாளர்கள் விழாவின் ஒரு நிகழ்வாக சிங்கப்பூர் எழுத்தாளர் கழகத்தின் கதைக்களம் நிகழ்வு அண்மையில் சிங்கப்பூர் தேசிய நூலக அரங்கில்நடைபெற்றது. அந்நிகழ்வில்வில் அவுஸ்திரேலிய எழுத்தாளர் மாத்தளை சோமு சிறப்பு அழைப்பாளராக கலநது கொண்டார்.சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் நா.ஆண்டியப்பன் முன்னிலை வகித்தார்.**

இந்நிகழ்வில் 'எழுத்தும் சிந்தனையும்' என்ற தலைப்பில் உரையாற்றிய மாத்தளை சோமு குறிப்பிட்டதாவது:

"இலக்கியம் படைக்க நல்ல சிந்தனை வேண்டும். எழுதப்படும் எழுத்து வாசிப்பவனை சிந்திக்க வைக்க வேண்டும். ஒரு கதையோ கவிதையோ அவற்றைப் படிப்பவனின் சிந்தனையில் புகுந்து அவனுக்குள் தாக்கத்தை உண்டுபண்ண வேண்டும். கதை சமூகத்தின் நேற்றைய வரலாற்றை, மனிதரின் குமுறல்களை, உணர்வுகளைச் சொல்லவேண்டும். எழுத்து மனிதருக்கு நண்பனாக, அவனை நெறிப்படுத்துவதாக அமைய வேண்டும்.




சிலப்பதிகாரக் கதையில் இளங்கோ காட்டிய கண்ணகியே பெண் உலகின் முதல் போராளி. கண்ணகி கதையான போதும் இளங்கோவின் சிந்தனையைப் பார்க்க வேண்டும்

அதேபோன்று தான் அக்கினிப் பிரவேசத்தில் ஜெயகாந்தன் காட்டிய தாயையும் பார்க்க வேண்டும். ஒரு சமூகத்தைக்கட்டி எழுப்புவதில் எழுத்துக்குப் பெரும் பங்குண்டு. ரஷ்ய புரட்சியின் ஒரு ஆயுதமே தாய் நாவல். ஒவ்வொரு நாடுகளிலும் வாழும் மக்களை அடையாளப் படுத்துவது எழுத்தாளர்களின் சிந்தனையில் உருவான இலக்கியங்கள். எழுத்தாளர்களை பல் கலைக்கழகங்களால் உருவாக்க முடியாது. அதற்கான பாடத்திட்டமும் இல்லை.

எழுத்தாளன் மக்களிலிருந்துதான் வருவான். மக்கள்தான் அவனுக்கு கதையைச் சொல்வார்கள். அங்கு வாழும் மனிதர்கள்தான் அவன் சிந்தனையைத் தூண்டுவார்கள். நல்ல கதையை வானத்தில் தேட வேண்டியதில்லை. மனிதர்கள் வாழும் மண்ணிலேயே காணலாம். அதைக் காண்பதற்கு இலக்கிய சிந்தனை வேண்டும்.

சிறுகதை சில பக்கங்களிலும் வரலாம். பத்து இருபது பக்கங்களிலும் வரலாம். திருக்குறளில் 774 குறள்களில் ஒரு சிறுகதை உண்டு. உலகின் மிகச்சிறிய சிறுகதையே அது.

கதை இதுதான்:

தாயகத்தை காக்க யுத்தம் நடக்கிறது. வீரன் ஒருவன் கடுமையாகப் போராடுகிறான். கையிலிருந்த ஆயுதங்களை எதிரிமேல் பாய்ச்சுகிறான். கையில் ஆயுதம் இல்லாத போது எதிரி ஒரு வேலை பாய்ச்சி விடுகிறான். அப்போது எதிரியின் யானை அவனைத் தாக்க வேகமாக வருகிறது. கையில் ஆயுதம் இல்லையே என்ன செய்யலாம் என்று எண்ணிய போது, எதிரி பாய்ச்சிய வேல் நெஞ்சில் இருப்பது நினைவுக்கு வர, அவனுக்குள் உவகையும் நம்பிக்கையும் வருகின்றன. அந்த வேலால் போரிட எண்ணுகிறான்.

இதுதான் குறள் தரும் கதை. இதில் வள்ளுவர் காட்டிய சிந்தனை என்ன? எத்தனை துன்பம் வந்தாலும் கலங்காமல் எதிர்கொள்ள வேண்டும். இதுதான் எழுதுகின்றவர்கள் மக்



களுக்கு கரும் இருட்டில் காட்ட வேண்டிய சிந்தனை மின்னல்.

சிங்கப்பூர் சிறிய தீவு. சீமான் தீவு. இங்கு கதை இருக்குமா என்று எண்ணலாம். இங்கும் கதை உண்டு. கொதிக்கும் எண்ணங்கள் கொண்ட மனிதர்கள் இருப்பார்கள். அவர்களை அடையாளம் காணும் சிந்தனை வேண்டும். அந்த சிந்தனையே தரமான இலக்கியத்தைப் படைக்கும்."

இவ்வாறு மாத்தளை சோமு தெரிவித்தார். இந்நிகழ்வில் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கும், விமர்சனம் செய்தவர்களுக்கும் ஏற்பாட்டாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாத்தளை சோமு பரிசில்கள் வழங்கினார். நிகழ்வை திருமதி பிரேமா மகாலிங்கம் தொகுத்தளித்தார்.

# முஸ்லிம் விவாக/விவாகரத்து சட்டம்; அட்டாளைச்சேனையில் கலந்துரையாடல்

**அட்டாளைச்சேனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் வழிகாட்டலில் றுஹுணு லங்கா நிறுவனமானது முஸ்லிம் விவாக/விவாகரத்து சட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை அதன் தலைவர் எம்.எஸ். ஜெளபர் தலைமையில் அண்மையில் அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் நடத்தியது.**

இந்நிகழ்வில் வளவாளர்களாக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம். பஹீஜ், மேலதிக மாவட்ட பதிவாளர் எஸ்.ஏ. நஸீர்டீன் ஆகியோர் கலந்து கொண்டு பள்ளிவாசல்களின் பரிபாலசபை உறுப்பினர்கள், கத்தீப்மார்களுக்கு விவாக / விவாகரத்து சட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்திருந்தனர்.

இந்நிகழ்வில் அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். எம். ஹனிபா, அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நஹீஜா முஸாபிர், அட்டாளைச்சேனை ஜும்மா பெரிய பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைடீன் ஆகியோருடன் அட்டாளைச்சேனை ஜம்இய்யத்துல் உலமா தலைவர் மற்றும் உறுப்பினர்கள், அம்பாறை மாவட்டத்திலுள்ள






அனைத்து மேலதிக மாவட்ட பதிவாளர்கள், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை போன்றவற்றில் கடமை புரியும் விவாகப் பதிவாளர்கள், உலமாக்கள் மற்றும் புத்திஜீவிகள் போன்றோர் கலந்து ஆக்கபூர்வமான கருத்துகளைத் தெரிவித்தனர்.

**எம்.எப். நவாஸ்...**
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

## நாட்டில் எவருக்கும்... (03 ஆம் பக்கத் தொடர்)

ரோஹிணி கவிரத்ன எம்பி தமது கேள்வியின் போது பொலனறுவை மாவட்டத்தில் சிறுமி ஒருவர் உணவு இல்லாத பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளதையடுத்து 13 வயதான அந்த சிறுமியை அவமானப்படுத்தும் வகையில் பொலனறுவை மாவட்ட செயலாளர் அந்த சிறுமி கர்ப்பிணியாக உள்ளார் என தெரிவித்துள்ளார். இந்த தகவல் சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரப் படுத்தப்பட்டு அந்த மாணவி பெரும் அவமானத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதுடன் அவரது நன்னடத்தைக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன என அவர் கேள்வியெழுப்பினார். அந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

## பொறுப்பு, அர்ப்பணிப்புடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

நவம்பர் முதலாம் திகதிகளில் வடக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் வடக்கில் விசேட நடமாடும் சேவைகள் நீதி அமைச்சினால் நடத்தப்பட்டன. முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரி கடந்த ஜனவரி மாதம் வடக்கு மாகாணத்திற்கான முதலாவது நடமாடும் சேவையை நடத்தினார். இரண்டாவது நடமாடும் சேவையும் அவர் தலைமையில் இடம்பெற்றது. மூன்றாவது நடமாடும் சேவை எனது தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

பல்வேறு காரணங்களினால் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்திருந்த 11,782 இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.அவர்கள் முக்கிய ஆவணங்கள் எதுவுமின்றி பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒருசிலருக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்,தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் எதுவும் கிடையாது. இந்த அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே 12 அமைச்சுக்களை ஒன்றிணைத்து விசேட நடமாடும் சேவை நீதியமைச்சின் செயலாளர் ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

2016ஆம் ஆண்டு காணாமற் போனோர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த அலுவலகம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. காணாமற் போனோர் அலுவலகம் கடந்த நான்கு வருடத்தில் 65 விசாரணைக் கோவைகளை மாத்திரமே நிறைவு செய்திருந்த நிலையில் நாம் தற்போது அதனை 2000 ஆக அதிகரிக்க முடிந்துள்ளது. அத்துடன் காணாமற் போனோரது உறவுகளுக்கு வழங்கப்படும் 1 இலட்சம் ரூபா நட்ட ஈட்டை 2 இலட்சமாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## ஆசிரியர், மாணவர்களது... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் உடை முறைமையில் எவ்வித மாற்றங்களும் கொண்டுவரப்போவதில்லை என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார்.

அத்துடன், போதை பொருள் ஒழிப்பு மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பில் கொழும்பு மாவட்டத்திலுள்ள 144 பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆலோசனை வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியிலும் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## இனப்பிரச்சினைக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

உண்மையைக் கூற வேண்டும்.அரசியல்வாதிகளே நாட்டை சீரழித்துள்ளனர்.1948ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படவில்லை. நீண்டகால இப்பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காது நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது.

தனிச் சிங்கள சட்டம் கொண்டுவந்ததன் பின்னர் நாட்டில் இருந்த ஐரோப்பியர்களும் இலங்கையை கைவிட்டுச் சென்றனர். யாழ்ப்பாணத்தில் 95 புள்ளிகளை பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கு செல்ல முடியாத நிலையே காணப்பட்டது.

ஆனால் அதே பரீட்சை வினாத்தாளை எழுதிய மொனராகலை மாவட்ட பிள்ளைகள் வெறும் 50 புள்ளிகளைப் பெற்றால் கூட பல்கலைக்கழகத்துக்கு செல்ல முடியும் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற தவறுகளே 30 வருட யுத்தத்திற்கு காரணம். யுத்தத்தை நிறைவு செய்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவோம் என சர்வதேசத்துக்கு இலங்கை வாக்குறுதி வழங்கியிருந்தது. அதனை நிறைவேற்றவில்லை என்பதாலேயே இலங்கை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## அகிலன் பிறந்ததின... (04ஆம் பக்கத் தொடர்)

வழக்கறிஞர் அருள்மொழி, எழுத்தாளர் தமிழ்மகன், எம்.எஸ். பெருமாள், கலாப்ரியா, பழனிபாரதி, பிருந்தாசாரதி, சுபவீரபாண்டியன் ஆகியோரும் மறைத்திரு தோமஸ் அமிர்தம் (லயோலா கல்லூரி முதல்வர்), மறைத்திரு. ஜெயராஜ் (செயலர் லயோலா கல்லூரி) சகாயராஜ், பேராசிரியர் அமல்ராஜ் (தமிழ்த்துறைத் தலைவர் லயோலா கல்லூரி) போன்ற பெரியோர்களும் கருத்தரங்கில் உரை ஆற்றினர். இலக்கியச் சிற்றேடுகளின் நவீன இலக்கிய உலகைச் சார்ந்தவர்களும், அகிலனின் அரசியல் கொள்கைகளுக்கு எதிரான சிந்தனை வகுப்பைச் சார்ந்தவர்களும் பங்கேற்று தங்கள் உள்ளத்திலிருந்து அகிலனைப் பற்றிப் பேசினார்கள்.

## இரு மாணவர்கள்...

கற்கும் இரு மாணவர்களுக்கிடையில் நேற்று (08) கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதன்போது மாணவர் ஒருவருக்கு வாயால் நுரை வந்ததையடுத்து அம்மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தம்பிலுவில் ஏ.பி.சி வீதியைச் சேர்ந்த 13 வயது மாணவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மேற்படி பாடசாலையில் ஒரே வகுப்பில் இவ்விரு மாணவர்களும் கல்வி கற்று வருகின்றனர். இந்நிலையில், சம்பவதினமான நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முடிவடையும் நேரத்தில் உயிரிழந்த மாணவன் வகுப்பறை மேசையில் பெயின்ரால் கீறியதாகவும் சக மாணவனின் கை பட்டு கீறல் அழிந்து விட்டதால் இவ்விருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. அதில் வகுப்பறைக்குள் வைத்தே உயிரிழந்த மாணவனின் வாயில் நுரை வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, உயிரிழந்த மாணவனை தாக்கிய சக மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இருவரும் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அறியமுடிகின்றது.

உயிரிழந்த மாணவனின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த திருக்கோவில் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பண்டிகை காலங்களில்...

கோதுமை மா, பருப்பு உள்ளிட்ட முக்கிய அத்தியாவசிய உணவுப் பொருட்களும் அதில் உள்ளடங்குவதாக அவர் தெரிவித்தார்.

## தனுஷ்க குறித்து விசாரிக்க...

கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார். சட்டத்தரணிகளான நிரோஷன பெரேரா மற்றும் அசேல ரகவே ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் ஏனைய அங்கத்தவர்கள் எனவும் இந்த சம்பவம் தொடர்பில் இலங்கை அணியின் முகாமையாளர் மற்றும் வீரர்களிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் கிரிகெட் அணியின் அதிகாரிகள் உட்பட எவரேனும் பொறுப்பை புறக்கணித்திருந்தால் அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

## புலிகள் குறித்த பிரசாரத்தை...

வொரு நபரும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர். வடக்கில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 26ஆம் திகதி மாவீரர் தினம் நினைவுகூரப்படுகிறது. வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தாய்லாந்து தூதுவரின்...

சுமார் 300,000 ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் பணத்தை திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணிக்கும் காலை 7 மணிக்கும் இடையில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருடப்பட்ட பொருட்களில் கையடக்கத் தொலைபேசி, நினைவுப் பரிசு, தாய்லாந்து நாணயம் மற்றும் இலங்கை ரூபா என்பன உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வாசஸ்தலத்துக்கு வெளியில் கடமையில் இருந்துள்ள அதேவேளை மற்றொரு தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் வீட்டிற்குள் இருந்த போதே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் சந்தேநபர்கள் எவரும் கைதுசெய்யப்படாத அதேவேளை, கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பொருளாதார ரீதியாக...

குறைக்கும் செயன்முறையை இலங்கை ஆரம்பித்துள்ளது. கடல் சார்ந்த பிரதேசங்களில் திட்டமிடலை ஆரம்பித்துள்ளதோடு காலநிலை அலுவலகம் ஒன்றை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்தது. மார்ச் 1 ஆம் திகதியை உலக கடல் புல் தினம் எனும் ஐ.நா பிரகடனத்தை தலைமை தாங்கியமை, சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் நிலைபேண்தகு பயன்பாட்டிற்கான தேசியக் கொள்கையை அமுல்படுத்துதல்,காலநிலை மற்றும் சமுத்திரங்களில் ஏற்படக்கூடிய அபாயம் மற்றும் பாதிப்புக்கான பொதுநலவாயத்தின் முன்னோடி திட்டத்தை செயல்படுத்துதல், நிலக்கரி சக்தி மூலமான ஆற்றல் திறனை மேலும் அதிகரிக்காதிருத்தல், படிம எரிபொருள் மானியங்களை படிப்படியாக நீக்குதல், 2030ஆம் ஆண்டுக்குள் மின்சார உற்பத்திக்காக 70% புதுப்பிக்கத்தக்க ஆற்றலை இலக்காகக் கொள்ளுதல்,வொஷிங்டனில் அண்மையில் வழங்கப்பட்ட உலகளாவிய மீத்தேன் உறுதிமொழியில் இணைதல் என்பன அதில் அடங்கும். இருந்தாலும், காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு UNFCC மற்றும் பரிஸ் உடன்படிக்கையை பூர்த்தி செய்வதற்கான பரந்த அளவிலான நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும்.காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் ஆற்றலின்மை மிகப்பெரிய தடையாக உள்ளது.

இப்பிரச்சினையிலிருந்து மீள்வதற்காக நாம், பல்கலைக்கழக மாதிரியில் இதுவே முதல் வகை எனக் குறிப்பிட்டுக் கூறும் வகையில், சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை இலங்கையில் நிறுவ வேண்டும். அதன் துணை நிறுவனம் மாலைதீவில் அமைக்கப்பட வேண்டும். இப்பல்கலைக்கழகமானது, விஞ்ஞானிகள், சூழலியலாளர்கள்,ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்போர், அபிவிருத்தியை நடைமுறைப்படுத்துவோர் மற்றும் உலகின் அனைத்து நாடுகளையும் சேர்ந்த மாணவர்களுக்கும் தமது எல்லைகளைத் தாண்டி கற்கைகளை மேற்கொள்ளும் உலகளாவிய மையமாக செயற்படும்.உத்தேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகமானது காலநிலை மாற்றத்தைத் தணிக்கும் மற்றும் அதனுடன் ஒத்திசைவாக்கும் ஆற்றல்களை உருவாக்கும் வகையிலான குறுகிய கால கற்கைநெறிகள் மற்றும் பட்ட பின்படிப்புக்களை தொடரும் வாய்ப்புகளை வழங்கும். இப்பல்கலைக்கழகமானது காலநிலை மாற்றத்தில் இருந்து உலகைப் பாதுகாப்பதற்கு தேவையான அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மற்றும் டிஜிட்டல் மாற்றங்களை வழங்குவதற்காக புதிய தலைமுறையினரின் ஆற்றல்களை மேம்படுத்தும், காலநிலை மாற்ற சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பில் உள்நாட்டில் அறிவூட்டும் வாகனமாக இது செயற்படும். ஸ்தாபிக்கப்படும் உயர்கல்வி நிறுவனமானது பல பங்குதாரர் கூட்டுமுயற்சியாகவும் தேசிய எல்லைகளை தாண்டிய ஒரு நிறுவனமாகவும் திகழ்வதற்காக பொதுநலவாய அமைப்பு, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல்தரப்பு நிறவனங்கள் மற்றும் அமைப்புக்களுடன் இணைந்து முன்னெடுக்கப்படும்.இலங்கையின் பிரேரணைக்கு சர்வதேச சமூகத்தின் விரிவான ஆதரவும் ஒப்புதலும் கிடைக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## நாட்டிலுள்ள மாவீரர் சிலைகளுக்கு...

பணிப்புரை விடுத்துள்ளார்.

சுதந்திர தினத்தில் அனைத்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள மாவீரர்களின் சிலைகளுக்கு அஞ்சலி செலுத்துமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவிக்குமாறு அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் செயலாளருக்கு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

75 ஆவது சுதந்திர தினத்துடன் இணைந்து இலங்கையின் தேசிய மாவீரர்களின் தகவல் பதிவேட்டை தயாரிக்கவும், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூக அமைப்புகளை தொடர்பு கொண்டு இந்த பணிகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் தினேஷ் குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

## பாரபட்சமற்ற விசாரணை...

வும் அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். விசாரணைகள் நிறைவடைந்ததும் அது தொடர்பான விடயங்கள் வெளியிடப்படும் என அவர் சபையில் தெரிவித்தார். எவ்வாறாயினும் மேற்படி சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்தவித பாரபட்சமுமின்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் மயந்த திசாநாயக்க எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், யால சரணாலயப் பகுதியில் மேற்படி சர்ச்சைக்குரிய சம்பவம் இடம்பெற்ற சமயத்தில் நான் வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தேன். எனினும் அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியிருந்தேன். அதற்கிணங்க உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பதினைந்து தமிழக மீனவர்களையும்...

எடுக்கக்கோரி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் திங்கட்கிழமை (07) எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது : தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் 5.11.2022 அன்று கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களது இரண்டு விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு பலமுறை கோரிக்கை விடுத்த போதிலும், பாக் ஜலசந்தியில் இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்யும் சம்பவங்கள் தொடர்வதாகவும், இது பாரம்பரிய மீன்பிடி பகுதியை நம்பியிருக்கும் ஒட்டுமொத்த மீனவ சமூகத்தினரிடையே அச்சத்தையும், கோபத்தையும் ஏற்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய, தூதரக வழிமுறைகள் வாயிலாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள 100 மீன்பிடிப் படகுகளை விடுவிக்க மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் உதவிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். இவ்வாறு அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்டிகை காலங்களில்...

பாராளுமன்றத்தில் நேற்று தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி இணைந்துகொண்டுவந்த நாட்டின் தற்போதைய நெருக்கடி தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தமையே எமது டொலர் நெருக்கடிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இந்தியா உட்பட பல சர்வதேச நாடுகள் 70 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை எமக்கு நன்கொடையாக வழங்கியுள்ளன. அத்துடன் இறக்குமதி செய்யும் 10 உணவுப் பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டமை மக்களுக்கு சிறந்த நிவாரணமாக அமைந்துள்ளது.

அரிசி,முட்டை ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலை தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது. இறக்குமதி செய்யப்படும் அரிசி குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அடுத்த அறுவடையின் பின்னர் அரிசியின் விலை மேலும் குறைவடையும். நாடளாவிய ரீதியில் நுகர்வோரின் தேவைகளை கண்காணிப்பதற்காக 227 நுகர்வோர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்களின் பிரதான தேவைகள் தொடர்பில் அந்த குழுக்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். மலையகத்தில் மட்டுமின்றி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன.

## எவரும் காணாமற் போகாவிடின்...

விவாதத்தில் உரையாற்றும் போதே மனோ கணேசன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டில் எவரும் காணாலாக்கப்படவில்லை என்றால் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் எதற்கு? பாராளுமன்றத்தில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் அது தொடர்பான சட்டமொன்றைக் கொண்டுவந்து அலுவலகத்தை ஸ்தாபித்துள்ளோம். தற்போது ஆளுங்கட்சியில் இருப்பவர்களே அப்போது அதனை எதிர்த்தார்கள். மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் நாம் கிளை அலுவலகங்களை திறந்து வைத்தோம். காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை எங்களால் மேற்கொள்ள முடியாதளவுக்கு அப்போது எதிர்க்கட்சியினர் பிரச்சினைகளை ஏற்படுத்தினார்கள். எனினும் நாம் அவ்வாறு செயல்படவில்லை. 1988, 1989, 2000ஆம் ஆண்டுகளில் பலர் வடக்கு, கிழக்கு, தெற்கிலிருந்தும் காணாமலாக்கப்பட்டனர். இந்த சாபம், பாவத்தை நாட்டிலிருந்து துடைத்தெறியவே நாம் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை ஸ்தாபித்தோம். அந்த விசாரணைகளுக்கு நாம் ஒத்துழைப்புகளை வழங்குகிறோம். ஆனால் முதலில் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டியது அவசியம். இதுபோன்ற தலைவரை வைத்துக்கொண்டு எவ்வாறு அந்த அலுவலகம் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

## நீதியமைச்சர் விஜேதாசவுக்கு...

தொடர்பில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச கரிசனையுடன் செயல்படுவது தொடர்பிலும் அவர் சபையில் பாராட்டுகளைத் தெரிவித்தார். அதேவேளை, விடுதலைப் புலிகள் எவரும் இராணுவத்தினரிடம் சரணடையவில்லை என இராணுவத்தினரும், காணாமற் போனோர் என்று எவருமில்லை என காணாமற்போனோர் அலுவலகமும் தெரிவித்து வருகின்றமை பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் ஆத்திரத்திற்குள்ளாக்கியுள்ளது என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அவர்,

அது தொடர்பில் நீதியமைச்சர் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவின் உரையையடுத்து உரையாற்றிய போதே சுமந்திரன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த சுமந்திரன் எம்பி,

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் நீதியமைச்சு வடக்கில் நடத்திய நடமாடும் சேவை வரவேற்கத்தக்கது. அதேபோன்று அகதிகளாக சென்று இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ள மக்களின் நலன் தொடர்பில் நீதியமைச்சர் கரிசனை கொண்டுள்ளமைக்கும் நன்றி. இலங்கையிலிருந்து மேலும் 33,000 இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு எதிர்பார்த்துள்ளனர். பல்வேறு காரணங்களினால் அவர்கள் நாட்டுக்கு வருவது தாமதப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களை அழைத்து வந்து மீள்குடியமர்த்த நீதியமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

காணாமற் போனோர் என எவரும் கிடையாது என காணாமல் போனோர் அலுவலகத்தின் தவிசாளர் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரியது.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வது தான் காணாமற் போனோர் அலுவலகத்தின் பொறுப்பாகும். அதனை விடுத்து விசாரணைகளை மேற்கொண்டு இறுதித் தீர்மானத்தை எடுக்காமல் காணாமற் போனோர் என எவரும் கிடையாது என்று கூறுவது விந்தையாகும்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் எவரும் இராணுவத்தினரிடம் சரணடையவில்லை என இராணுவத்தினர் குறிப்பிட்டுள்ளதாக தகவலறியும் சட்டத்தின் ஊடாக அறிக்கையிடப்பட்டுள்ளது. தமது உறவுகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்ததாக பாதிக்கப்பட்டவர்கள் உறுதியாக தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் இராணுவம் மற்றும் காணாமற் போனோர் அலுவலகத்தின் கூற்றுக்கள் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை மலினப்படுத்தும் வகையில் உள்ளன.

## இறக்குமதி செய்த...

சமர்ப்பிப்பதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகர சபாநாயகரிடம் தெரிவித்தார். சபாநாயகர் தலைமையில் நேற்று (08) பாராளுமன்ற கூட்டத்தொடர் கூடிய போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, எரிபொருள் கொள்வனவு மற்றும் இறக்குமதி தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கடந்த காலங்களில் பல்வேறு விடயங்களை முன்வைத்துள்ளார்கள். எரிபொருள் இறக்குமதி தொடர்பிலான தகவல்களை வெளிப்படை தன்மையுடன் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்தினார்கள். இதற்கமைய 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் தொடர்பான சகல விடயங்களையும் சபைக்கு சமர்ப்பிக்கிறேன் என்றார்.

## நடுக்கடலில் தத்தளித்த...

கப்பல் தத்தளிக்க தொடங்கியது கடல் கொந்தளிப்பாக காணப்பட்டுள்ளது. வியட்நாமின் கடல்சார் மீட்பு மற்றும் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு நிலையம் கப்பலை தொடர்புகொள்ள முயற்சித்துள்ளது,அந்த பகுதியில் உள்ள ஏனைய கப்பல்களுக்கு அவசர சமிக்ஞையை அனுப்பியுள்ளது. திங்கட்கிழமை அந்த பகுதியில் ஜப்பான் கொடியுடன் ஹெலியோஸ் லீடர் என்ற கப்பல் காணப்பட்டுள்ளது,படகில் தத்தளித்துக்கொண்டிருந்தவர்களை காப்பாற்றுமாறு அந்த கப்பலுக்கு உத்தரவு வழங்கப்பட்டது. ஜப்பான் கப்பல் உடனடியாக தத்தளித்துக்கொண்டிருந்த படகைநோக்கி சென்று வேளை படகில் இருந்தவர்கள் மிகுந்த பதட்டத்துடன் காணப்பட்டுள்ளனர்.ஜப்பான் கப்பல் படகில் இருந்தவர்களை மீட்டு அவர்களுக்கு மருத்துவகிசிச்சைகளை வழங்கியுள்ளது. வியட்நாம் மேலும் ஐந்து கப்பல்களை அந்த பகுதிக்கு அனுப்பியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளன. 20 சிறுவர்கள் 19 பெண்கள் உட்பட 303 பேரும் வுங் டாவுவை சென்றடைவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மீட்கப்பட்ட கப்பலில் இருந்த 303 பேரும் இலங்கையர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அந்த கப்பலில் இருந்த இலங்கையர்கள் குழு தற்போது ஜப்பானிய கப்பல் மூலம் வியட்நாமுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார். இவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு வியட்நாம் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். 303 இலங்கையர்களை ஏற்றிச் சென்ற இலங்கை மீன்பிடிக் கப்பல் திங்கட்கிழமை (07) வியட்நாம் மற்றும் சிங்கப்பூருக்கு அருகிலுள்ள கடலில் விபத்துக்குள்ளானது.

கப்பல் ஆபத்தில் சிக்கியபோது, அங்கிருந்த இலங்கையர் ஒருவர் இலங்கை கடற்படை மீட்பு நடவடிக்கை மையத்தை தொடர்புகொண்டு, இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ளார். இதனையடுத்து, அவர்கள் இது தொடர்பாக வியட்நாம் கடற்படை மீட்பு நடவடிக்கை மையத்திற்கு தகவல் கொடுத்தனர்.

அப்போது வியட்நாமிய பிரதேசத்தில் இருந்து 258 கடல் மைல் தொலைவில் கப்பல் சென்று கொண்டிருந்ததாக வியட்நாம் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## SLMC யின் தலைவராக...

பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் வருகைதந்ததை அடுத்து பேராளர் மாநாடு ஆரம்பமானது. பேராளர் மாநாட்டின் போது கட்சியின் பதவி நிலைகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பெயர்கள் அறிவிக்கப்பட்டன. கட்சியின் தலைவராக ரவூப் ஹக்கீமும் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கட்சியின் தேசிய அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரிவாகியுள்ளார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம்.மன்சூர் மற்றும் அலிசாஹிர் மௌலானா, யு.டி.எம்.அன்வர், சட்டத்தரணி எஸ். எம்.ஏ.கபூர் ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் தவிசாளராக அப்துல் மஜீத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அரசியல் விவகார, கலாசார பணிப்பாளராக மொஹம்மட் சப்ராஸ் நியமிக்கப்பட்டுள்ளார். உதவி தேசிய அமைப்பாளராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவு செய்யப்பட்டுள்ளார். கட்சியின் கொள்கைக்கு எதிராக செயற்பட்ட குற்றச்சாட்டில் இடைநிறுத்தப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம் மற்றும் எம்.எஸ். தௌபீக் ஆகியோரும் பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர்.எனினும், பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹாரிஸ் இம்முறை பேராளர் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எல்.தவம் மற்றும் ஆரிப் சம்சுதீன் ஆகியோரும் இந்த மாநாட்டில் பங்குபற்றியிருக்கவில்லை.

## ஐவர் அடங்கிய குழு...

தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். இந்த குழுவினூடாக தயாரிக்கப்படும் அறிக்கை, நீதி அமைச்சருக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார். இதனிடையே, கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் 201 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ நேற்று முன்தினம்(07) தெரிவித்திருந்தார். கட்டடமொன்றை ஆக்கிரமித்திருந்த கைதிகள் குழு நேற்று முன்தினம்(07) பிற்பகல் பொலிஸாரிடம் சரணடைந்ததன் பின்னர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, மோதல் சம்பவத்தின் போது தப்பிச்சென்ற 30 கைதிகளை தேடி சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை(06) இடம்பெற்ற மோதலின் பின்னர் கைதிகள் பலர் தப்பிச்சென்றுள்ளனர்.

பாபாகுரு நானக்கின் பிறந்த நாள்

# சீக்கிய யாத்ரீகர்களுக்கு பாகிஸ்தான் விசா வழங்கல்



பாபாகுரு நானக்கின் பிறந்த நாள் நிகழ்வையொட்டி, பாகிஸ்தானில் இம்மாதம் 06ம் திகதி முதல் 15ம் திகதி வரை நடைபெறவிருக்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்ள இந்தியாவின் சீக்கிய யாத்ரீகர்களுக்கு 2942 விசாக்களை புதுதில்லியில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் வழங்கியுள்ளது.

1974ஆம் ஆண்டின் மத வழிபாட்டுத்தலங்களுக்குச் செல்வதற்கான பாகிஸ்தான் இந்தியா விதிமுறைகளின் கீழ் விசா வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், இந்தியாவில் இருந்து ஏராளமான சீக்கிய யாத்திரீகர்கள் பல்வேறு மத விழாக்கள் மற்றும் நிகழ்வுகளைக் காண பாகிஸ்தானுக்கு வருகை தருகிறார்கள். மேலும், இந்தியாவில் இருந்து மட்டுமல்லாமல் பிறநாடுகளில் உள்ள சீக்கிய யாத்ரீகர்களுக்கும் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்க விசா வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

புனித வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாப்பதிலும், வருகை தரும் யாத்ரீகர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதிலும் பாகிஸ்தான் பெருமை கொள்கிறது. யாத்ரீகர்கள், தேராசாஹிப், பஞ்சாசாஹிப், நங்கனாசாஹிப் மற்றும் கர்தார்பூர் சாஹிப் ஆகிய இடங்களையும் தரிசிக்கலாம். நவம்பர் 06ம் திகதி பாகிஸ்தானுக்குள் பிரவேசிக்கும் யாத்திரீகர்கள் நவம்பர்15ம் திகதி இந்தியா திரும்புவார்கள்.

# தமிழ்நாட்டில் வாழும் மலையக தமிழர்களை பாதுகாக்க நடவடிக்கை

## தமிழ்நாட்டு சட்டமன்ற உறுப்பினர் ஜெயசீலனிடம் இ.தொ.கா உறுதி



தமிழ்நாட்டு சட்டமன்ற உறுப்பினர் ஜெயசீலன் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் புலம்பெயர்ந்து TANTEA தோட்டங்களில் வசிக்கும் மலையக தமிழர்கள் தற்போது எதிர்க்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானுடன் கலந்துரையாடினார்.

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஆதரவளிக்க வேண்டிய தார்மீகக் கடமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு உண்டு.

அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க தமிழக அரசு மற்றும் இந்திய அரசுடன் கலந்துரையாடுவதாக இதன்போது இ.தொ.காவின் தலைவர் அவரிடம் உறுதியளித்துள்ளார்.

# மோட்டார் சைக்கிளில் வந்து தங்கச்சங்கிலி அபகரிப்பு

## பொலிஸாரினால் இருவர் கைது


***(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)***

மோட்டார் சைக்கிளில் வந்து பெண்களின் தங்கச் சங்கிலிகளை அபகரித்து சென்ற இருவரை உரிகஸ்வெவ பொலிஸார் (07) கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கல்நேவ தொரனேகம பிரதேசத்தைச் சேர்ந்த 22, 24 வயதுடையவர்களாவர்.

கடந்த சில தினங்களாக பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் பெண்களை பொலிஸ் மோட்டார் சைக்கிள் போன்ற மோட்டார் சைக்கிளில் வந்து நிறுத்தி தங்கமாலை மற்றும் தங்க ஆபரணங்களை அபகரித்து சென்றுள்ளனர். இது சம்பந்தமாக உரிகஸ்வெவ மற்றும் எப்பாவல பொலிஸ் நிலையங்களுக்கும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனையடுத்து விரைவாக செயற்பட்ட உரிகஸ்வெவ பொலிசார் இதற்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளை உரிகஸ்வெவ பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.




***மாத்தளை சுழற்சி நிருபர்***

மாத்தளை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் தலவங் கோயா பைரோஸ் தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் மூன்று குடியிருப்புகள் சேதமாகியுள்ளன. ஒரு வீட்டின் சுவர் பகுதி முழுமையாக உடைந்துள்ளது. ஏனைய இரண்டு வீடுகளும் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மண் சரிவில் பாதிக்கப்பட்ட நான்கு பேர் உறவினர்கள் வீட்டில் தங்கியுள்ளனர்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 118 ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு

WP DAH-3653 Tata, 2019, Cab கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958. 067531

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP DAB-4620 Tata Ace, 2015, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 067532

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

NC BID-3844 Yamaha Ray ZR, 2019, motor cy cle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810. 067534

SG BFM-8105 Honda Dio, 2017, motor cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 0711210810. 067528

SP YM-7883 Bajaj, 2011, WP YM-5943 Bajaj, 2011, Three-wheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810. 067536




## 1964 இலக்கம் 28 இன் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல:- 3/ඉ/අත්පත්/බෝයවලාන – අතිරේක
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2020/HW/262

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோலிசக் குடியரசின் 17.05.2022ஆம் திகதிய 2280/21 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : வடமேல்
மாவட்டம் : குருநாகல்
பிரதேச செயலாளர் பிரிவு : அலவ்வ

| ஆ.வ.இலக்கம்/ கடத்திரள் இலக்கம் | துண்டு இல. | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| 449/28/30 | 03 | 0.1765 | போயவலான | இல. 1029, போயவலான |

**எம்.ஆர்.எம்.எஸ். மல்லவ**
**பிரதேச செயலாளர்**
**அலவ்வ**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**அலவ்வ.**
**2022.11.08**

## ஹம்பாந்தோட்டை பிரதேச சபை

### 2023 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டுக்காக ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு விரும்பும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. நீங்கள் தயாரித்த விண்ணப்பப் படிவம் ஒன்றை 2022.12.20ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், பிரதேச சபை, ஹம்பாந்தோட்டை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் என்பதோடு விண்ணப்பப் படிவத்தை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் 2023ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
3. அனைத்து விண்ணப்பப் படிவங்களுடனும் ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைக்காக மீளளிக்கப்படாத 700 ரூபா பதிவுக் கட்டணம் ஒன்றை அனுப்ப வேண்டும் என்பதோடு, காசோலை மூலம், காசுக் கட்டளை மூலம் பணம் செலுத்துவதாயின் செயலாளர், ஹம்பாந்தோட்டை பிரதேச சபை என்ற பெயரில் எழுதி இருத்தல் வேண்டும்.

**01. பொருட்கள் வழங்கல்**

1.1 எழுது பொருட்கள்
1.2 அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (பிளாஸ்டிக், உருக்கு, மரப்பலகை) மற்றும் கணினி வலைப்பின்னல், கணினி மென்பொருள் பொருத்துதல்.
1.3 வீதி விளக்கு உபகரணங்கள் மற்றும் மின் துணைப்பொருட்கள்
1.4 தட்டச்சு மற்றும் துணைப்பொருட்கள், ஸ்கேனர் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணினி இயந்திரம், நிழல் பிரதி இயந்திரம், சி.சி.டிவி கெமரா கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள்
1.5 துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள்
1.6 சீருடை துணி
1.7 பெயர்ப் பலகை, அறிவித்தல் பலகை மற்றும் பதாகை
1.8 அனைத்து வகையான அச்சு செயற்பாடுகள்
1.9 கட்டிடப் பொருட்கள் மற்றும் நீர்க்குழாய் துணைப்பொருட்கள்
1.10 கல், மணல், செங்கல், கற்தூள், சரளை மண், சிறு கல் மற்றும் சீமெந்துக் கல்
1.11 டயர், டியுப் மற்றும் பெட்டரி
1.12 வாகனம், இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள்
1.13 மழை அங்கி, கம்பூட்ஸ் மற்றும் பாதணிகள்
1.14 இசைக் கருவிகள் மற்றும் விளையாட்டுக் பொருட்கள்
1.15 ஹியூம் குழாய் உட்பட கொங்கிறீட் உபகரணங்கள்
1.16 விவசாய இரசாயனப் பொருட்கள்
1.17 விவசாய உபகரணங்கள்
1.18 முதலுதவி மற்றும் சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள்
1.19 உராய்வு எண்ணெய்கள்
1.20 மின்சார வேலி அமைப்புக்குத் தேவையான மின் துணை உறுப்புக்கள்
1.21 உலர் உணவு, சமைத்த உணவு வழங்கல்

**02. சேவைகள் வழங்கல்**

2.1 தட்டச்சு, நிழல் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், ஸ்கேன் இயந்திரம் மற்றும் கணினி இயந்திரம் CCTV கெமரா பழுதுபார்த்தல்
2.2 மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் நன்னிலைப்படுத்தல்
2.3 வளிச்சீராக்கி மற்றும் மின் கட்டமைப்பை பழுதுபார்த்தல்
2.4 மொழி பெயர்ப்பு சேவை வழங்கல்
2.5 வாகனம் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கல்
2.6 டயர்களை மீள் நிரப்பல்
2.7 சட்டத்தரணி சேவை வழங்கல்
2.8 ஒப்பந்த சேவைகளை வழங்கல்
2.9 தொழில்துறைசார் சேவைகளை வழங்கல்
2.10 பயிற்றப்பட்ட/ பயிற்றப்படாத மனிதவலு சேவைகளை வழங்கல்

**03 மேலதிக விபரங்களுக்கு 047-2258099 இனை அழைக்கவும்**

**நிபந்தனைகள்:-**

01. நீங்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற பொருட்கள் மற்றும் சேவைகளை வெவ்வேறாக விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
02. விண்ணப்பப் படிவத்துடன் நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் மற்றும் வெட் பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
03. நீங்கள் சமர்ப்பிக்கின்ற விலைமனுக்கள் 06 மாத காலத்திற்கு மாற்றமின்றி இருத்தல் வேண்டும்.
04. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுவதோடு சந்தர்ப்பத்திற்கு அமைய வழங்குநர்களுக்கு அப்பால் பொருட்கள் மற்றும் சேவையை பெற்றுக்கொள்ளும் உரிமை சபை வசமானதாகும்.
05. கோரியபோது விலைமனுக்களை சமர்ப்பிக்காத மற்றும் கோரல் விடுத்தபோது பொருட்களை வழங்குவதற்கு தவறுகின்ற வழங்குநர்களினதும் குறித்த தரத்தில் பொருட்கள் மற்றும் சேவையை வழங்காத வழங்குநர்களினதும் பதிவு ரத்துச் செய்யப்பட்டு அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படும்.
06. ஒப்பந்ததாரர்களுக்காக வர்த்தக பெயர் பதிவு மற்றும் தேசிய நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவன (ICTAD) செல்லுபடி சான்றிதழ் அவசியமாகும்.

**காமினி சமரகுணரத்ன,**
**தலைவர், ஹம்பாந்தோட்டை பிரதேச சபை.**

**2023ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் விண்ணப்பப் படிவம்**

01. வர்த்தக உரிமையாளரின் பெயர் :..........................................
02. வர்த்தக பெயர் :..........................................
03. வர்த்தக முகவரி :..........................................
04. வர்த்தக பதிவு இலக்கம் :..........................................
05. தொலைபேசி இலக்கம் :..........................................
06. தொலைநகல் இலக்கம் :..........................................
07. வெட் பதிவு பெயர் பதிவு இலக்கம் :..........................................
08. வழங்க முடியுமான கடன் வசதி தொடர்பில் விபரம்
    i. பெறுமதி..........................................
    ii. காலம் ..........................................
09. பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற உருப்படி மற்றும் இலக்கம் :..........................................
    i. ..........................................
    ii. ..........................................
    iii. ..........................................
    iv. ..........................................
    v. ..........................................

மேலுள்ள தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது என்றும் பெறுகை நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன் என்றும் உறுதி செய்கிறேன்.

**திகதி:-** ..........................

..........................
**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

**விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம்**

கூறு 1: மதிப்பு சங்கிலி மேம்பாடு

**விவசாயம், கால்நடை மற்றும் மீன்வளத் துறை**

## திட்ட மதிப்பீட்டிற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை (EOI)

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம் (ASMP) உலக வங்கியிடமிருந்து விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் மதிப்பு சங்கிலி அபிவிருத்தி கூறு 1: அபிவிருத்திக்கான நிதியுதவியைப் பெற்று, ஏற்றுமதி சார்ந்த விவசாயம், கால்நடை மற்றும் மீன்வளத் துறை வணிகம் என்பவற்றில் மதிப்பு கூட்டல் சங்கிலிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

06 வருட திட்ட அமுலாக்க காலத்தில் திறந்த அழைப்பு-முன்மொழிவுகள் மூலம் உள்நாட்டில் அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்கு நிதியளிக்க வடிவமைக்கப்பட்ட பொருந்தக்கூடிய மானியம் மூலம் ஏற்கனவே உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மற்றும் புதிதாக நிறுவப்பட்ட உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாய வணிகங்களுக்கு ஆதரவளிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் எதிர்வரும் ஜுன் 2023 அதன் நிறைவுறு நிலையில் காணப்படுவதால் இத் திட்டத்தின் இந்த கூறு 1 அதன் எதிர்பார்த்த முடிவுகளை அடைந்துள்ளதா என்பதை மதிப்பிடுவதற்கான முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இதுவரையிலான திட்ட செயல்திறன் குறித்து ஒரு விரிவான மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. திட்ட கால எல்லைக்குள் இலக்குகள் மற்றும் முடிவுகள் எட்டப்பட்டதா என்பதை மதிப்பீடு செய்து, திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் பயனுள்ள முடிவுகளை எட்டமுடியும்.

முன்மொழியப்பட்ட மதிப்பீடு ஐந்து (05) பிராந்திய மானிய முகாமைத்துவ அலகுகளின் கீழ் 05 திட்டப் பிராந்தியங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ளது. அதாவது கொழும்பு (மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களை உள்ளடக்கியது ), காலி (தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களை உள்ளடக்கியது ), கண்டி (மத்திய மற்றும் வட மத்திய மாகாணங்களை உள்ளடக்கியது), அம்பாறை (கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களை உள்ளடக்கியது) மற்றும் வவுனியா (வடக்கு மாகாணத்தை உள்ளடக்கியது).

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்ட முகாமைத்துவப் பிரிவு, சேவைகளை வழங்குவதில் அவர்களின் ஆர்வத்தைக் குறிப்பிடுவதற்குத் தகுந்த நிபுணத்துவம் மற்றும் திட்ட மதிப்பீடுகளை நடத்துவதில் அனுபவமுள்ள தகுதியுள்ள ஆலோசனை நிறுவனத்தை எதிர்பார்க்கின்றது. ஆர்வமுள்ள ஆலோசனை நிறுவனங்கள் தங்கள் EOI களையும், மதிப்பீட்டைச் செய்யத் தகுதியுடையவர்கள் என்பதையும், சமீப காலங்களில் இதேபோன்ற பணிகளில் அனுபவங்களைக் கொண்டிருப்பதையும் குறிக்கும் கடிதத்துடன் அனுப்ப வேண்டும்.

EOI இன் மதிப்பீட்டு அளவுகோல்கள் நிறுவனத்தின் அனுபவத்தின் அடிப்படையில் இருக்கும் அதாவது ஒத்த மாதிரியான திட்டங்களில் மதிப்பீடு செய்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவசாய மதிப்பு சங்கிலி மேம்பாட்டுத் திட்டங்களில் ஆவணங்கள்/வெளியீடுகளை வெளியிட்டிருத்தல், குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் ஆராய்ச்சி பணியாற்றியவர்கள், விவசாய மதிப்பு சங்கிலிகள் பற்றிய அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் முக்கிய பணியாளர்களின் கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகள், குழுவின் முக்கிய பணியாளர்களின் அனுபவம், மற்றும் நிறுவனத்தின் விவரங்கள் (EOI சமர்ப்பித்த நிறுவனத்தின் கடந்த மூன்று நிதியாண்டுகளில் நிறுவனத்தின் விற்றுமுதல், ஜே.வி. பங்குதாரர்களின் கூட்டு விற்றுமுதல் மற்றும் ஆராய்ச்சி ஆய்வுகள், விவசாய மதிப்புச் சங்கிலி மேம்பாடுகள் தொடர்பான பணிகள்).

IBRD கடன்கள் மற்றும் IDA கடன்கள் மற்றும் மானியங்களின் கீழ் ஆலோசகர்களைத் தேர்வு செய்தல் மற்றும் பணியமர்த்துதல் ஜனவரி 2011 வெளியிடப்பட்டு ஜூலை 2014 திருத்தப்பட்ட உலக வங்கியின் வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி ஆலோசகர் தகுதித் தேர்வு (CQS)முறையின் அடிப்படையில் ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

ஆர்வமுள்ள ஆலோசகர்கள்/ நிறுவனங்கள் அலுவலக நேரத்தில் 30ம் திகதி நவம்பர் 2022 10.00 மணி வரை கீழே உள்ள முகவரியில் கூடுதல் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : விதிமுறைகளை (TOR) திட்ட முகாமைத்துவ பிரிவிலிருந்து மின்னஞ்சல் (asmp.pd@gmail.com) மூலம் பெற்றுக்கொள்ளலாம் அல்லது அமைச்சின் இணையத்தளமான www.asmp.mpi.gov.lkஇல் 30 நவம்பர் 2022 வரை பார்வையிடலாம்

ஆர்வத்தின் வெளிப்பாடுகள் கீழுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவே அல்லது நேரடியாகவோ 30 நவம்பர் 2022ம் திகதி 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்
உறையின் மேல் இடது மூலையில் "திட்ட மதிப்பீட்டிற்கான EOI" என்று குறிப்பிட வேண்டும்.

**ரோஹன கமகே,**
**திட்ட பணிப்பாளர் ,**
**பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டம்**
**16ம் மாடி "சுஹுருபாய",**
**பத்தரமுல்ல,**

**09.11.2022**

தினகரன்

வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

2022 நவம்பர் 9
புதன்கிழமை

# உலக உணவுத்திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்க நடவடிக்கை



(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

உலக உணவுத்திட்டத்தின் உணவுப் பாதுகாப்பு விசேட திட்டம் முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உணவுப்பாதுகாப்பை உறுதி செய்வதற்கான உலக உணவுத்திட்டத்தின் நிவாரணம் வழங்கும் நடவடிக்கை முல்லைத்தீவு நகரில் நேற்று நடைபெற்றது.

இலங்கையில் உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில் உலக உணவுத்திட்டத்தினால் முல்லைத்தீவு மாவட்டமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணமும்,நிவாரணமும் வழங்கிவைக்கவுள்ளனர்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 3083 குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா பணம் வெஸ்ரன்யூனியன் ஊடாக முதற்கட்டமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 9 ஆயிரத்து 577 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி வங்கி ஊடாக தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் புள்ளி விபரீதியில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு 60 நாட்களுக்கு தேவையான உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

50 கிலோ அரிசி,20 கிலோ பருப்பு,5 லீற்றர் உணவு எண்ணெய் என்பன இதன்போது பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலகப் பிரிவின் கீழ் 19 ஆயிரத்து 890 குடும்பங்களுக்கு வழங்கிவைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன்,உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான இணைப்பாளர், மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள் பிரதேச செயலாளர்,திட்டமிடல் பணிப்பாளர்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராமசேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் என பலர் கலந்துகொண்டு மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கிவைத்தனர். தொடர்ந்து ஏனைய பிரதேசங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ்.புதிய பஸ் நிலையத்திலிருந்து தனியார் பஸ் சேவைகள் ஆரம்பம்



யாழ்.நகரில் நிலவும் போக்குவரத்து நெருக்கடியை கருத்திற் கொண்டு அனைத்து உள்ளூர் மற்றும் வெளியூருக்கான தனியார் பயணிகள் பஸ் சேவைகள் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை முதல் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

பஸ் நிலையத்திற்கு நேற்று காலை நேரில் சென்று பார்வையிட்ட யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ் மாநகர ஆணையாளர் இ த.ஜெயசீலன், தனியார் பஸ் சங்கங்களின் பிரதிநிகள், பொலிஸார் இதுதொடர்பில் கலந்துரையாடியதுடன் தற்போதுள்ள சில குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் ஆராய்ந்தனர்.

யாழ். நகர் பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகளை நிவர்த்தி செய்யும் முகமாக புதிய பஸ் நிலையத்திலிருந்து தங்களது சேவைகளை ஆரம்பித்த அனைத்து தனியார் சங்கங்களின் தலைவர்கள் பிரதிநிதிகள் மற்றும் பஸ் உரிமையாளர்களுக்கும் யாழ்ப்பாணப் போக்குவரத்து பொலிஸாருக்கும் யாழ் மாநகர முதல்வர் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

தற்போதைய போக்குவரத்து சேவைகளில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை இனங்கண்டு அடுத்த வாரம் அது தொடர்பில் ஆராய்ந்து இத்திட்டத்தினை மேம்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தனியார் பஸ்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடுவதால் ஆஸ்பத்திரி பின் வீதி, மணிக்கூட்டுக்கோபுர வீதி ஆகிய வீதிகளில் வாகனங்கள் குறைவாக இருந்ததுடன் நெரிசல் இன்றி பயணிக்கக் கூடியதாகவிருந்தது.

## கோப்பாயில் சிறுமி குளிப்பதை வீடியோ எடுத்த இளைஞன் மடக்கிப்பிடிப்பு

யாழ். விசேட நிருபர்

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சிறுமியொருவர் குளிப்பதை வீடியோ எடுத்த இளைஞனை அயலவர்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சிறுமி வீட்டில் குளித்துக்கொண்டிருந்த வேளை , இளைஞர் ஒருவர் த னது கையடக்கத் தொலைபேசியில் சிறுமியை வீடியோ எடுத்துள்ளார்.

அதனை அவதானித்த சிறுமி கூக்குரலிடவே, அயலவர்கள் ஒன்று கூடி வீடியோ எடுத்த இளைஞனை மடக்கிப் பிடித்து நையப்புடைத்து கோப்பாய் பொ லிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் போராட்டத்திற்கு 100 நாள் நிறைவு





ஓமந்தை விஷேட நிருபர்

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் முன்னெடுக்கப்படும் 100 போராட்டத்தின் இறுதிநாள் நிகழ்வு வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று (08) இடம்பெற்றது.

வடக்கு,கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத் தர வேண்டும் என்ற 100 நாள் செயலமர்வு வடக்கு கிழக்கு ஒருங்கணைப்பு குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

அதன் இறுதி நாளான நேற்று காலை 10.30 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு 100 நாள் போராட்டத்தின் கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு,கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை உறுதிப்படுத்துக எனும் தொனிப் பொருளில் பாதாகையும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இறுதி நாள் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், தியாகராஜா மற்றும் வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகைதந்த மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## கடலட்டை பண்ணை விவகாரம்

# நாகவிகாரை விகாராதிபதி - கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளுக்கிடையில் சந்திப்பு



யாழ்.விசேட நிருபர்

கடலட்டை பண்ணை விடயம் தொடர்பாக, யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் ஆரியகுளம் நாகவிகாரை விகாராதிபதி மீகஹஜந்துர சிறிவிமல தேரரை நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் சம்மேளனத்தின் தலைவர் அ.அன்னராசா, உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கடலட்டை பண்ணைகளை அமைக்கும் போது அதனை ஆய்வுக்குட்படுத்தி மேற்கொள்ளல், ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கடலட்டை பண்ணை தொடர்பாக பேசுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் போன்ற விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. அரசியல் தலைவர்கள் உட்பட அரசாங்க அதிகாரிகள் கடலட்டை பண்ணை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமையால் மதத்தலைவர்களை சந்தித்து அவர்கள் மூலம் அரசியல் தலைவர்களை அணுகுவதற்கு ஏற்பாடு செய்துள்ளதாக கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# புனர்வாழ்வு திணைக்களத்தினால் தமிழ் குடும்பமொன்றுக்கு வீடு கையளிப்பு



ஓமந்தை விஷேட நிருபர்

புனர்வாழ்வு திணைக்களத்தால் வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் வறிய குடும்பமொன்றுக்கு வீடு ஒன்று கையளிக்கப்பட்டது.

புனர்வாழ்வு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராட்சியின் மேற்பார்வையில் புனர்வாழ்வு திணைக்களம், நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 7 மில்லியன் நிதியுதவியில் வீடு அமைக்கப்பட்டு நேற்றையதினம் (08) கையளிக்கப்பட்டது.

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வசிக்கும் வறிய குடும்பமொன்றுக்கே இவ்வீடு கையளிக்கப்பட்டது. வீடு கையளிக்கும் நிகழ்வில் வவுனியா புனர்வாழ்வு நிலையத்தின் பணிப்பாளர் கேணல் நிலந்த விஜயசிங்க , வவுனியா புனர்வாழ்வு நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் கேணல் சம்பத் ரத்நாயக்க, புனர்வாழ்வு நிலையத்தின் பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# இலங்கைக்கான ரோட்டரிக் கழக ஆளுநர் சொய்சா வடக்கு விஜயம்



சாவகச்சேரி விஷேட நிருபர்

இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான ரோட்டரிக் கழக ஆளுநர் ரோட்டரியன் புகுதுடீசொய்சா வடக்குக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டத்திலுள்ள சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம்,நல்லூர் ரோட்டரிக் கழகம் மற்றும் யாழ்ப்பாணம் ரோட்டரிக் கழக பிரதிநிதிகளை சந்தித்திருந்தார். சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத் தலைவர் தேவகுமார் தலைமையில் சுன்னாகம் கஜா விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற சந்திப்பில் ரோட்டரிக் கழகத்தின் மாவட்ட ஆளுநர்,பொதுச் செயலாளர் ,உதவி மாவட்ட ஆளுநர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

மேலும் கிளிநொச்சி,யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட ரோட்டரிக் கழகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார்.

# புலோலி கமநல சேவை நிலையத்துக்கு முன்பாக விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டம்



(நாகர்கோவில் விஷேட , கரவெட்டி தினகரன் நிருபர்கள் )

விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கோரி நேற்று (08) காலை 9.30 மணியளவில் புலோலி கமநல சேவை நிலையத்துக்கு முன்பாக விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகளின் அடிப்படை தேவையான மண்ணெண்ணெய், உரம் என்பவற்றை வழங்குமாறு கோரி விவசாயிகளால் கவனயீர்ப்பு போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

'மறுக்காதே மறுக்காதே மண்ணெண்ணெய் மறுக்காதே, வழங்கு வழங்கு உரத்தினை வழங்கு, அடிக்காதே அடிக்காதே ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே' என கோஷங்களை எழுப்பியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதான வீதி ஊடாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தை சென்றடைந்து அங்கு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ.சிறியிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

# நெதர்லாந்து நாட்டவரை திருமணம் செய்ய பெற்றோர் வற்புறுத்துவதாக 15 வயது சிறுமி புகார்

யாழ்.விசேட நிருபர்

நெதர்லாந்து நாட்டை சேந்த 53 வயதான ஒருவரை திருமணம் செய்யுமாறு பெற்றோர் தன்னை வற்புறுத்தி வருவதாக சிறுமியொருவர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சிறுமி பிரான்ஸ் நாட்டிலிருந்து அச்சுவேலிக்கு வந்திருந்த 20 வயதான இளைஞனுடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தலைமறைவாகியிருந்தார். இதுதொடர்பில் சிறுமியின் பெற்றோர், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து தலைமறைவான சிறுமி மற்றும் இளைஞன் அச்சுவேலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து , சிறுமி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தப்படவில்லையென தெரியவந்தது. இதனால் சிறுமி அச்சுவேலி சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பொலிஸார் , சிறுவர் நன்னடத்தை பிரிவினர் சிறுமியிடம் மேற்கொண்ட விசாரணையில் தனது பெற்றோர் தன்னை நெதர்லாந்து நாட்டில் வசிக்கும் 53 வயதான நபரை திருமணம் செய்யுமாறு , வற்புறுத்தி அடிக்கடி தாக்குவதாகவும் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அதுமட்டுமின்றி, நெதர்லாந்து நாட்டில் உள்ளவருடன் வீடியோ கோல் மூலம் உரையாடுமாறு வற்புறுத்துவார்கள். அதனால் தான் அவருடன் உரையாற்றுவதாகவும் சிறுமி தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

# கைவிடப்பட்ட குளத்தை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா மன்னகுளம் கிராம சேவகப்பிரிவுக்குட்பட்ட பகுதியில் நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் மங்கைகொடி என்ற குளத்தை புனரமைத்துத்தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர். 180 குடும்பங்கள் வாழும் கொல்லர் புளியங்குளத்திற்கு பின்புறமாக அமைந்துள்ள மங்கை கொடி என்ற குளம் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் உடைப்பெடுத்தமையினால் திருத்தப்படாமல் கைவிடப்பட்டது. எனினும் இக்கிராம மக்கள் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இக்குளத்தை புனரமைத்து தருமாறு கோரியபோதிலும் அக்கோரிக்கை நிறைவேறவில்லை.

இதன் காரணமாக எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தினை கருத்திற் கொண்டு மங்கைகொடி குளத்தை புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



# கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக மாபெரும் தொழில் கல்விச் சந்தை

## மட்டக்களப்பில் நேற்று ஆரம்பம்

மட்டக்களப்பு விசேட நிருபர், வெல்லாவெளி தினகரன் நிருபர்



கிழக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்தின் ஏற்பாட்டில், 'திறன்மிகு ஊழியப்படையால் தொழிலுலகை வெல்வோம்' எனும் தொனிப்பொருளில் தொழில் கல்விச் சந்தை முதன் முறையாக கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வருகின்றது.

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நேற்று (08) ஆரம்பமாகிய இத்தொழில் கல்விச் சந்தை நாளை மறுதினம் (10) வரை மட்டக்களப்பில் நடைபெறும்.

இச்சந்தையில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக்கழகம், சமுத்திரவியல் பல்கலைக்கழகம், தொழில் பயிற்சி அதிகார சபை, துறைசார் கற்கை நெறி நிறுவகம், சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் மையம், சுவாமி விவேகானந்தா தகவல் தொழில் பயிற்சி நிறுவகம் மற்றும் சமுதாய உயிர்ப்பு மையம் என்பன தங்களது வழிகாட்டல் நெறிகளின் விபரங்களை வெளிப்படுத்தியுள்ளன.

இதனைத் தொடர்ந்து, அம்பாறையில் இம்மாதம் 15ஆம் 16ஆம் 17ஆம் திகதிகளில் நிந்தவூர் மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்திலும் திருகோணமலையில் இம்மாதம் 22ஆம் 23ஆம் 24ஆம் திகதிகளில் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் இத்தொழில் கல்விச் சந்தையை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக, கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

க.பொ.த உயர்தரத்தில் கற்பவர்கள் மற்றும் பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மையமாகக் கொண்டு இத்தொழில் கல்விச் சந்தை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்தொழில் கல்விச் சந்தையினூடாக மாணவர்கள், அவர்களது உள்ளார்ந்த திறன்களை இனங்காணவும் ஏனையோர் உயர்கல்வி வாய்ப்புகளை அறியவும் திறனை வளர்த்தெடுத்து தொழிற்பயிற்சி நிலையங்களை அடையாளம் காணவும் தொழில் வழங்குநர்கள் மற்றும் சுய முயற்சியாளர்களைக் கண்டறியவும் அவர்களது அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்கான அரிய சந்தர்ப்பமாக அமையுமெனவும், அவர் தெரிவித்தார். உயர்தரப் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள், உயர் கல்வியைக் கற்க விரும்புவோர், தொழில் திறனை வளர்க்க ஆர்வமுள்ளோர், சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடவுள்ளோர் மற்றும் தொழில் வாய்ப்புகளைத் தேடும் அனைவரும் இதில் கலந்து பயனடையுமாறும், அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வடக்கு, கிழக்கின் அதிகாரப்பகிர்வு: 100 நாட்கள் செயல்முனைவின் இறுதிப் பிரகடனம்



காரைதீவு குறூப் நிருபர், அன்புவழிபுரம் தினகரன் நிருபர், வெல்லாவெளி தினகரன் நிருபர்

'ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு' எனும் தீர்மானம், வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களிலும் நேற்று (08) பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு பிரகடனம் செய்யப்பட்டது. அந்த வகையில், அம்பாறை மாவட்டத்துக்கான பிரகடன ஒன்றுகூடல், காரைதீவு கடற்கரை சிறுவர் பூங்காவுக்கு அருகில் இடம்பெற்றது.

இதேவேளை, திருகோணமலை மக்கெய்சர் வெளியரங்கிலும் மட்டக்களப்பு, தன்னாமுனை புனித சூசையப்பர் மைதானத்திலும் இப்பிரகடன ஒன்றுகூடல் இடம்பெற்றன. அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருமளவான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப்பகிர்வு கோரிய 100 நாட்கள் கொண்ட செயல்முனைவின் 100ஆவது நாள் நேற்றாகும். இந்நிலையிலேயே மேற்படி பிரகடனம் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் 70 ஆண்டுகளுக்கும் மேலாக எதிர்கொண்டு வரும் அரசியல் அடக்குமுறைகளை முடிவுக்கு கொண்டு வந்து, சுய கௌரவமுள்ள உரிமைகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு அடிப்படையான நிலைபேறான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்துவதாக, அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெரும்போக நெற்செய்கை; விவசாயிகளுக்கு விரைவில் உரம்

### மட்டு. அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் ஏற்பாடு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்குத் தேவையான இரசாயன மற்றும் சேதன உரத்தை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்குரிய முன்னாயத்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இம்மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான இரண்டாவது அபிவிருத்திக் குழுக் கூட்டம், பாராளுமன்ற உறுப்பினரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது, கடந்த ஆண்டில் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

அத்துடன் பொருளாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார்பான விடயங்களும் ஆராயப்பட்டதுடன், அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

# அம்பிளாந்துறை - குருக்கள்மடம் படகுப்பாதையின் அவலம்!





பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு, படுவாங்கரைப் பிரதேசத்துக்கும் எழுவாங்கரைப் பிரதேசத்துக்கும் இடையிலான பிரதான போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாகக் காணப்படும் மட்டக்களப்பு வாவியை ஊடறுத்துச் செல்லும் அம்பிளாந்துறை – குருக்கள்மடம் ஓடத்துறை படகுப் பாதையை திருத்தியமைத்துத் தருமாறு, பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்படகுப் பாதையைப் பயன்படுத்தி விவசாயிகள், ஆசிரியர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற ஊழியர்கள், வியாபாரிகள் பொதுமக்களெனப் பலரும் பயணம் செய்து வருகின்றனர்.

தற்போது இப்படகுப் பாதையானது துருப்பிடித்து துவாரங்கள் காணப்படுவதுடன் மிகவும் பழுதடைந்தும் காணப்படுகின்றது. இந்நிலையிலும், இப்படகுப் பாதையானது தனது சேவையை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. இப்பழுதடைந்த படகுப் பாதையில் மிகுந்த அச்சத்துடனையே தாம் பயணிப்பதாகவும், பயணிகள் தெரிவித்தனர். ஆகவே, தாம் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ளும் வகையில் இப்படகுப் பாதையை உரிய அதிகாரிகள் உடனடியாக திருத்தியமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், பயணிகள் தெரிவித்தனர்.

## மூதூரில் கசிப்பு வைத்திருந்த இருவருக்கு அபராதம்

தோப்பூர் குறூப் நிருபர்



கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவருக்கு தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, மூதூர் நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணைச்சேனை மல்லிகைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த இவ்விருவரும் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நேற்று (08) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அத்துடன், இவர்களிடமிருந்து கசிப்பையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்களில் ஒருவர் 19,000 மில்லி லீற்றர் கசிப்பையும் மற்றையவர் 30,000 மில்லி லீற்றர் கசிப்பையும் வைத்திருந்ததாக நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டு. விவசாயிகளுக்கு இன்று முதல் யூரியா உரம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்காக, இலங்கை லக்போஹொர நிலையத்தினால் வழங்கப்பட்ட யூரியா உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கை இன்று (09) முதல் இடம் பெறவுள்ளது.

விவசாய அமைச்சினால் இலங்கை லக்போஹொர நிலையத்துக்கு வழங்கப்பட்ட யூரியா உரத்தில், மட்டக்களப்பு மாவட்டத்துக்கான 3,434 மெற்றிக்தொன் யூரியா உரத்தை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனிடம் கையளிக்கும் நடவடிக்கை மட்டக்களப்பு லக்போஹொர களஞ்சியசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

இலங்கை அரசாங்கத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு முதற் கட்டமாக வழங்கப்பட்ட 1,943 மெற்றிக்தொன் யூரியா உரத்தை தொடர்ந்து, தற்போது இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டுள்ள 3,434 மெற்றிக்தொன் யூரியா உரம் மற்றும் விவசாயக் கிருமிநாசினி ஆகியனவே விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

மட்டக்களப்புக்கு விஜயத்தை மேற்கொண்ட விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உட்பட இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் ஆகியோரே, மாவட்ட அரசாங்க அதிபரிடம் இவ்வுரத்தைக் கையளித்தனர்.

# மட்டு. மாநகர சபையின் பௌர்ணமிக் கலைவிழா



மட்டக்களப்பு விசேட நிருபர்

கலைஞர்களை ஊக்குவித்து அவர்களின் ஆற்றுகைகளை அரங்கேற்றும் நோக்கில் மட்டக்களப்பு மாநகர சபையின் பௌர்ணமிக் கலை விழா காந்தி பூங்காவில் நேற்று முன்தினம் (07) நடத்தப்பட்டது.

ஓர் இனத்தின் அடையாளம் அதன் மொழி மற்றும் பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்களாகும். கலைகளை வாழ வைக்கும் நோக்குடன் கலை, கலாசாரக் குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மா.சண்முகலிங்கம் தலைமையில் இவ்விழா நடத்தப்பட்டது.

இதன்போது, தமது ஆற்றுகையை வெளிப்படுத்திய கலைஞர்கள் நினைவுச்சின்னமும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், கதிரவன் பட்டிமன்ற பேரவையின் 101ஆவது நிகழ்வாக 'தற்கால வாழ்க்கை சுமையானதா அல்லது சுவையானதா' எனும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றதுடன், அணிக்கு 3 பேர் கொண்ட 6 பேரின் வாதப் பிரதிவாதங்களில், நடுவராகக் கலந்து கொண்ட கதிரவன் கலைக் கழகத் தலைவர் கதிரவன் ரி.இன்பராசா, தற்கால வாழ்க்கை சுமையானது எனத் தீர்ப்பளித்தார்.

மேலும், இவ்விழாவில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## பள்ளிவாசல் சுற்றுப்பயண பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடியில் பள்ளிவாசல் சுற்றுப் பயண வழிகாட்டி பயிற்சிப்பட்டறையை பூர்த்தி செய்தவர்களுக்கு நேற்று (08) சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

புதிய காத்தான்குடி அல் அக்ஸா பெரிய ஜும்மா பள்ளிவாசலில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

மலேசியா நாட்டின் இஸ்லாமியக் கற்கைகள் நிலையத்தின் சிரேஷ்ட பணிப்பாளர், கலாநிதி மௌலானா மௌலவி ஹுஸைன் ஆப்தீன் தலைமையில் கடந்த 04ஆம் திகதி இப்பயிற்சிப்பட்டறை ஆரம்பமாகி, நேற்று வரை நடைபெற்று வந்தது.

இதன்போது ஊடக இன நல்லுறவு, சமாதானம், ஐக்கியம், புரிந்துணர்வு, பள்ளிவாசல்களை பார்வையிட வரும் சகோதரர்களுடன் நடந்துகொள்ளும் முறை போன்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.



# நகர்வலம்



## பேருவளை நல்லஹேன ஆதார வைத்தியசாலைக்கு மருந்துகள்

### சீனன்கோட்டை தனவந்தர்கள் அன்பளிப்பு



பேருவளை நல்லஹேன ஆதார வைத்தியசாலையில் நிலவுகின்ற நோயாளிகளுக்கு தேவையான மருந்துப்பொருட்களை சீனன்கோட்டை தனவந்தர்களின் நிதியுதவியுடன் நேற்று (08) வைபவரீதியாக கையளிக்கப்பட்டது.

மேற்படி ஆதார வைத்தியசாலையின் பிரதம அத்தியட்சகர் டொக்டர் எஸ்.பி. ஹேவாகம, சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் கீழ் இயங்குகின்ற சீனன் கோட்டை அவசரகால நிவாரண அமைப்பினரிடம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே சுமார் 05 இலட்சம் பெறுமதியான மருந்து வகைகள் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

மேற்படி அமைப்பின் வேண்டுகோளின் பேரில் சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச்செயலாளர் அல்ஹாஜ் ஷிஹாப் நிகழ்வில் அதிதியாக கலந்துகொண்டு மருந்து வகைகளை பிரதம அத்தியட்சகரிடம் கையளித்தார். இந்நிகழ்வில் சீனன் கோட்டை அவசரகால நிவாரண அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

போயா தினத்தில்

## இராணுவ அம்பியூலன்ஸ் வண்டி மூலம் 3 கிலோ மான் இறைச்சி கடத்தல்

### லான்ஸ் கோப்ரல், சிப்பாய் உள்ளிட்ட இருவர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மாவனாவெல இராணுவ முகாமிற்கு சொந்தமான அம்பியூலன்ஸ் மூலம் மூன்று கிலோ மான் இறைச்சியை கொண்டு சென்ற சாரதியான லான்ஸ் கோப்ரல் மற்றும் சிப்பாய் உள்ளிட்ட இருவரையும் போயா தினமான திங்கட் கிழமை (07) மதியம் மாதுறுஓய பூங்காவில் கைது செய்துள்ளதாக மாதுறுஓய வனவிலங்கு அலுவலகம் தெரிவித்தது.

சந்தேக நபர்களான இருவரும் மாவனாவெல இராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாய்களாவர். இவர்களை தெஹியத்தகண்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக மாதுறுஓய பூங்காவின் பொறுப்பாளர் டீ.எஸ். ஜயசோம ரத்னாயக்க தெரிவித்தார்.

மாதுறுஓய ஹேனன்னேகலவில் இருந்து மாவனாவெல இராணுவ முகாமிற்கு இதற்கு முன்னரும் மான் இறைச்சி கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் ஜயசோம ரத்னாயக்க தெரிவித்தார். கடந்த (07) இராணுவ அம்பியூலன்ஸ் மூலம் மான் இறைச்சி கொண்டு செல்வதாக ஹேனன்னேகல வனவிலங்கு அலுவலகத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய உடனடியாக சுற்றிவளைப்பை மேற்கொண்ட போது அம்பியூலன்ஸ் மற்றும் மான் இறைச்சியுடன் சந்தேக நபர்களான இராணுவ சிப்பாய்கள் இருவரையும் கைது செய்ய முடிந்துள்ளதாக ஜயசோம ரத்னாயக்க மேலும் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில்

## டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

மாத்தறை மாவட்டப் பகுதியில் கடந்த சில வாரங்களாக நிலவி வந்த மழையுடனான காலநிலையால் டெங்கு நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கின்றனர்.

நீர் தேங்கி நிற்கும் இடங்கள் மற்றும் பொருட்கள் இருப்பின் அவற்றை உடனுக்குடன் அகற்றி விடுமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர். குறிப்பாக கூரைகளின் நீர் வழிந்தோடும் பீலிகளை அவதானித்து அதில் நீர் தேங்கி நிற்கா வண்ணம் கவனித்துக் கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

மேலும், கொதித்தாறிய நீரை அருந்துமாறும் ஆகாரங்களை ஈக்கள் தொற்றாமல் மூடி வைக்குமாறும் சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வேண்டுகின்றனர். நுளம்பு பரவும் வண்ணம் சுற்றுச்சூழல்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

## கொழும்பு சாஹிரா உயர்தர பிரிவு மாணவனின் கவிதை நூல் வெளியீடு

**ருஸைக் பாரூக்**



கொழும்பு சாஹிரா கல்லூரியின் உயர்தர பிரிவு மாணவன் அப்துல் உமர் சஹான் நெத்மினவின் இரண்டாவது கவிதை நூல் "ஏ தமய் ஜீவிதய" வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரி கபூர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் நடைபெற்றது.

சஹான் நெத்மினவின் முதல் நூல் "தடு சிடுனு குருல்லா" 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் ஊடகவியலாளர் கிம் பிரியாகம பண்டார, லஹிரு கித்துலகம மற்றும் கம்பஹா ரத்னவெளி பெண்கள் கல்லூரி மாணவி பவனி வாசனா ஆகியோர் உரையாற்றியதுடன், மாணவர்களின் பாடல்களும் இடம்பெற்றன.

ஸாஹிரா கல்லூரியின் பிரதி அதிபர் சினத் இஸ்மாயில், ஆரம்பப் பிரிவுத் பொறுப்பாளர் மொஹமட் ஷாஸு லி, கல்லூரி ஆளுநர்கள் சபை செயலாளர் அலவி முக்தார், கல்லூரி நூலகர் அனோஜா சேரசிங்க, கொடகே நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் அனுரசிறி ஹெட்டிகே, சஹான் நெத்மினவின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## மாத்தறை தாருள் உலூம் மாணவர்கள் மாவட்ட மட்ட போட்டிக்கு தெரிவு



மாத்தறை தாருள் உலூம் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் இருவர் மாவட்ட மட்ட கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நடந்து முடிந்த வலய மட்டப் போட்டிகளில் திறமை செலுத்திய எம்.எப். சல்ஹான் அஹமட் மற்றும் எம்.என்.அப்துல் மலிக் ஆகிய மாணவர்களே இவ்வாறு மாவட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வலய பாடசாலைகளுடன் நடைபெற்ற 5 போட்டிகளில் சல்ஹான் அஹமட் ஒரு சதம், ஒரு அரைச்சதம் அடங்கலாக 275 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் 14 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

அதேவேளை, அப்துல் மலிக் ஒரு அரைச்சதம் அடங்கலாக 156 ஓட்டங்களை பெற்றதோடு 16 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார். பாடசாலை அதிபர் எம்.ரீ.எம். மிப்தாஹ் மற்றும் விளையாட்டுத் துறைக்கு பொறுப்பான ஆசிரியர் எம்.எஸ்.எம். ராதி மற்றும் பயிற்றுவிப்பாளர் எம்.எல். ரஜிதீன் ஆகியோர் மாணவர்களுடன் எடுத்துக்கொண்ட படம்.

## மதுரங்குளி தும்பு உற்பத்தியாளர்கள் ரிஷாத் எம்.பியுடன் சந்திப்பு

**(புத்தளம் விசேட நிருபர்)**



புத்தளம், மதுரங்குளி தும்பு உற்பத்தியார்களுக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனுக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த சனிக்கிழமை காலை விருதோடையில் இடம்பெற்றது. சமாதான நீதவானும் தும்பு உற்பத்தியாளருமான எஸ். எம். பாயிஸ் இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது பிரதேசத்தில் அமைந்துள்ள தும்பு உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டு தும்பு உற்பத்தியின் போது தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரிடம் தெளிவு படுத்தினர்.

இதன்போது, மதுரங்குளி தும்பு உற்பத்தியார்களர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் இங்கு குறிப்பிட்டார்.

## அக்கரப்பத்தனை டயகம தொழிலாளிக்கும் நட்டஈடு; இ.தொ.காவின் இரண்டாவது வெற்றி



அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட டயகம கிழக்கு 03ஆம் பிரிவு தோட்டத்தில் மின்சாரம் தாக்கி பலியான தோட்டத் தொழிலாளியும், மூன்று பிள்ளைகளின் தந்தையுமாகிய இராமகிருஸ்ணனுக்கு அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிர்வாகம் நட்டஈடாக 45 இலட்சம் ரூபாவும் வாழ்வாதாரத்தை முன்னெடுத்து செல்ல காணி ஒன்றும் வழங்க இணங்கியுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், ராமேஸ்வரன் எம்.பி, சட்டத்தரணி மாரிமுத்து உள்ளிட்ட குழுவினருக்கும், அக்கரப்பத்தனை பெருந் தோட்ட முகாமைத்துவ கம்பனியினருக்கும் இடையில் கொழும்பு தொழில் அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக இ.தொ.கா உயர் மட்டம் தெரிவித்தது.

டயகம கிழக்கு 03பிரிவு தோட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த தொழிலாளியான இராமகிருஸ்ணனுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழில் அமைச்சு மற்றும் தொழில் ஆணையாளரை சந்தித்து கடந்த (05) கோரிக்கை விடுத்திருந்தது. மின்சாரம் தாக்கி பலியான இராமகிருஸ்ணனின் பிள்ளைகளின் கல்விச் செலவை முழுமையாக தோட்ட நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தோடு உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு சுயதொழிலை மேற்கொள்ள காணி வழங்குதல் வேண்டும்.

உயிரிழந்த இராமகிருஸ்ணனின் இறுதி சடங்கின் முழுமையான செலவை தோட்ட நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என பல நிபந்தனைகளை காங்கிரஸ் முன்வைத்திருந்தது.

மேலும் இவ்விடயம் தொடர்பாக நேற்று மீண்டும் அக்கரபத்தனை பெருந்தோட்ட யாக்கத்துடன் பேச்சுவார்த்தை இடம்பெற்று தீர்வு எட்டப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்தது.

இந்த நிலையில் நேற்று மீண்டும் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையில் உயிரிழந்த தொழிலாளி இராமகிருஸ்ணனின் குடும்பத்திற்கு 45 இலட்ச ரூபா நட்டஈடு வழங்க தோட்ட கம்பனி இணக்கம் தெரிவித்ததுடன், வாழ்வாதாரத்தை முன்னெடுத்து செல்ல காணியும் வழங்குவதாக இணங்கியுள்ளது.

அந்த வகையில் இது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்க்கு கிடைத்த இரண்டாவது வெற்றியெனவும் காங்கிரஸ் உயர் பீடம் தெரிவித்தது.

ஆ.ரமேஸ்.

# மலைச்சாரல்



உயிரிழந்த இளைஞனின்

## உடத்தலவின்ன வீட்டுக்குச் சென்ற இலங்கைக்கான தென் கொரிய தூதுவர்





தென்கொரியாவில் ஹாலோவீன் திருவிழா சன நெருசலில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்த உடத்தலவின்ன வாலிபரின் இல்லத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக இலங்கைக்கான தென் கொரிய உயர்ஸ்தானிகர் விஜயம் செய்து உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நட்டஈட்டை பெற்றுக் கொடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

உடத்தலவின்ன பகுதியைச் சேர்ந்த 27 வயது முஹமட் ஜினத் என்பவரே உயிரிழந்தவராவார்.

துயரத்தில் மூழ்கியுள்ள குடும்பத்தினரை சந்தித்த இலங்கைக்கான தென் கொரிய உயர்ஸ்தானிகர் உயிரிழந்த இளைஞரின் தந்தை,சகோதரர் மற்றும் மனைவி ஆகியோரை சந்தித்து தன் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டார்.

யட்டிநுவர பிரதேச சபை உறுப்பினர் வசீர் முக்தாருடன் இலங்கைக்கான தென் கொரிய உயர்ஸ்தானிகர் தம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போதே உயர் ஸ்தானிகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் ஜனாஸா நல்லடக்கம் 02.11.2022 புதன்கிழமை உடத்தலவின்ன ஜும்ஆப் பள்ளிவாசலில் ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டு உடத்தலவின்ன மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் கலைவிழா

St. Sylvester's College Kandy

**மாவத்தகம தினகரன் நிருபர்**

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் தமிழ் இலக்கிய சங்கத்தின் கலைஞானி 22 ஆவது கலை விழா இன்று மு. ப. 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் டி.பி.ஜி.ஐ. தென்னகோன் தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகர் ஆர். மகேஸ்வரன், கௌரவ அதிதியாக மத்திய மாகாண கல்விப் பணிமனையின் உதவிப் பணிப்பாளர் எம்.பி. விக்னேஸ்வரன், முன்னாள் கண்டி மாநகர சபை உறுப்பினர் எஸ். மலர்ச்செல்வன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.








கண்டி மோப்ரே கல்லூரியின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு 25 ரூபா பெறுமதியான தபாலுறை, முத்திரை வெளியீடும் நடைபவனியும் திருமதி அதிபர் மனோரஞ்சனி கிங்ஸ்லி தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் கொழும்பு மத்திய தபால் நிலையத்தின் பிரதி தபால் மா அதிபர் ரஞ்ஜித் ரணசிங்க, பழைய மாணவிகள், பெற்றோர்கள் உள்ளிட்ட பெரும் திரளானோர் கலந்து கொண்டனர். (படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்)

தினகரன்

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## அறிவித்தல்

**மத்திய மாகாண அரச சேவையில் மாகாண உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் சேவை தரம் 111 இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2022**

மத்திய மாகாண அரச சேவையில் மாகாண உள்ளக கணக்காய்வுப் பிரிவில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மத்திய மாகாண அரச சேவையில் மாகாண உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் சேவை தரம் 111 இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு மத்திய மாகாண அரச சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2022.11.28 ஆகும்.

இவ் ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நிகழ்நிலை (Online) மூலம் கோரப்படவுள்ளதுடன் அதனுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்பு அறிவித்தல் மற்றும் இவ் அட்சேர்ப்பு தொடர்பான மேலதிக விபரங்கள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்தையும் அதில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**டீ.ஏ.டி.டப்லிவ். தயானந்த**
**செயலாளர்**
**அரச சேவைகள் ஆணைக்குழு,**
**மத்திய மாகாண சபை**

**2022 நவம்பர் மாதம் 08ஆம் திகதி**
**மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு**
**இல. 244, கட்டுகஸ்தோட்டை, வீதி, கண்டி.**

மாநகரசபை - குருணாகல்

## பெறுகைக்கான அறிவித்தல்

**மாளிகாபிட்டிய அரங்கத்தின் கடைத்தொகுதிகளுக்கான மின்னிணைப்பினை பெற்றுக்கொடுப்பதற்கான திறந்த தேசிய போட்டி முறையிலான விலைகோரல்**

குருணாகல் மாநகர சபைக்கு சொந்தமான மாளிகாபிட்டிய அரங்கத்தின் கடைத்தொகுதிகளுக்கு மின்னிணைப்பினை வழங்குவதற்கான திறந்த தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கள்.

| தொடர் இல. | தொழிற்சாலை | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூ). | தகமை / தரம் | ஆவணக் கட்டணம் (+ பெ.சே.வரி 15%) (ரூ). | மனு உத்தரவாத வைப்பு / மனுப் பாதுகாப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | மாளிகாபிட்டிய அரங்கத்தின் கடைத்தொகுதிகளுக்கான மின்னிணைப்பினை பெற்றுக்கொடுத்தல் | 5,624,150.00 | EM 4 | 3,450.00 | 57,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்திற்கான தேசிய போட்டிமுறையிலான மனுக்கோரல்கள் குருணாகல் மாநகரசபையின் நகராட்சி மன்றத்தின் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள மனு ஆவணங்களை **2022.11.09 ஆம் திகதி முதல் 2022.11.29 ஆம் திகதி பி.ப.2.00** மணி வரை அலுவலக நேரங்களில் குருணாகல் மாநகரசபையின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். **2022.11.30 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு **நகராட்சி மன்றக் குழுவின் கூட்டம் நடைபெறும் அரங்கில்** மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கலாம். மனு ஆவணங்களுடன் ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
தொலைபேசி : 037-4941869
மின்னஞ்சல் : ginumviyadam@gmail.com
தொலைநகல் : 037 2228136

நகராட்சி ஆணையாளர்
மாநகர சபை,
குருநாகல்.
2022/11/09

மாநகரசபை - குருணாகல்

## பெறுகைக்கான அறிவித்தல்

**மாளிகாபிட்டிய அரங்கத்தின் மாடிப்படிகளின் கீழ் காணப்படும் விற்பனை பிரிவினை குத்தகைக்கு வழங்குவதற்கான திறந்த தேசிய போட்டி முறையிலான விலைகோரல்**

குருணாகல் மாநகர சபைக்கு சொந்தமான மாளிகாபிட்டிய அரங்கத்தின் மாடிப்படிகளின் கீழ் காணப்படும் விற்பனை பிரிவுகள் 49 வருடங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான திறந்த தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்காக கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பிரிவு இல. | பாவிக்கபட்ட ஒரு பிரிவின் சதுர அடி அளவு (சதுர அடி) | சதுர அடி ஒன்றுக்கான குறைந்தபட்ச மனுக்கட்டண பெ.சே.வரி நீங்கலாக (ரூ.) | தற்காலிகமாக செலுத்த வேண்டிய மாதாந்த வாடகை பணம் ரூ. | ஆவணக் கட்டணம் (+ பெ.சே.வரி 15%) ரூ. | மனு உத்தரவாத வைப்பு / மனுப் பாதுகாப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | A-01 | 259.59 | 5,000.00 | 13,000.00 | 3,450.00 | 15,000.00 |
| 2 | A-02 | 255.93 | 5,000.00 | 12,000.00 | 3,450.00 | 15,000.00 |
| 3 | A-03 | 255.40 | 5,000.00 | 11,000.00 | 3,450.00 | 15,000.00 |
| 4 | A-04 | 200.44 | 5,000.00 | 10,000.00 | 3,450.00 | 15,000.00 |
| 5 | A-05 | 184.47 | 5,000.00 | 9,000.00 | 3,450.00 | 15,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட விற்பனை பிரிவுகளை குத்தகைக்கு வழங்குவதற்காக தேசிய போட்டிமுறையிலான மனுக்கோரலுக்கு குருணாகல் மாநகரசபையின் நகராட்சி மன்றத்தின் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள மனு ஆவணங்களை **2022.11.09 ஆம் திகதி முதல் 2022.11.29 ஆம் திகதி பி.ப.2.00** மணி வரை அலுவலக நேரங்களில் குருணாகல் மாநகரசபையின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். **2022.11.30 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு **நகராட்சி மன்றக் குழுவின் கூட்டம் நடைபெறும் அரங்கில்** மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கலாம். மனு ஆவணங்களுடன் ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
தொலைபேசி : 037-4941869
மின்னஞ்சல் : ginumviyadam@gmail.com
தொலைநகல் : 037 2228136

நகராட்சி ஆணையாளர்
மாநகர சபை,
குருநாகல்.
2022/11/09

கமத்தொழில் அமைச்சு

# கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை

## தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடலைக் கொள்வனவு செய்வதற்கான அழைப்புக் கடிதம்

**ஒப்பந்த இல.: AAIB/03/05/01/22/87**

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாட்டை கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபைத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் மற்றும் அமைவிடம் | பெசேவ நீங்கலாக மதிப்பீட்டு ஆகுசெலவு | மீளளிக்கப் படாத ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணைத் தொகை |
|---|---|---|---|---|
| AAIB/03/05/01/22/87 | கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் முகாமைத்துவ தகவல் முறைமைக்காக விரிவான முறைமை ஆய்வு, Business Process Reengineer (BPR), வடிவமைத்தல், அபிவிருத்தி மற்றும் தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடல் அபிவிருத்தி முறைமை. | 80 மில்லியன் இலங்கை ரூபா | 3,500 இலங்கை ரூபா | 750,000 இலங்கை ரூபா |

2. **பணியின் நோக்கம்:**
   அ) தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடலின் வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி.
   ஆ) தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடலின் வன்பொருள் வழங்கல் மற்றும் நிறுவுதல்.
   இ) மேலேயுள்ள மேம்படுத்தப்பட்ட தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடலின் செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு.

3. தொழில்நுட்பம் மற்றும் நிதியிடல் முன்மொழிவு ஆகிய **இரு-உறை முறைமையில்** விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையில் நடாத்தப்படும்.

4. தகைமையுள்ள விலைமனுதாரர்கள் மேலேயுள்ள பெறுகைக்கான சட்ட உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர் 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வியாபார பெயர் நியதிச்சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட வியாபார பெயர் கட்டளைச்சட்டத்தின் (149ஆம் அதிகாரத்தின்) கீழ் வழங்கப்பட்ட கம்பனியொன்றின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பணிப்பாளர்களின் விபரங்களின் பிரதியொன்று அல்லது 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சட்டத்தின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் **1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின்** கீழ் வழங்கப்பட்ட பதிவின் மூலப்பிரதியையும் விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைக்காக, சித்திகரமான விலைமனுதாரர் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.
   * அரசாங்க அமைப்புக்களினால் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாமலிருத்தல்.
   * 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் விலைமனுதாரர் பதிவு பெற்றிருத்தல்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராம வீதி, 117ஆம் இலக்கத்திலுள்ள கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் நிருவாகத்திற்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராம வீதி, 117ஆம் இலக்கத்திலுள்ள கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் பெறுகைக் கிளையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை 2022.11.09ஆம் திகதியிலிருந்து 2022.12.15ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாட்களிலும் (பொது மற்றும் வங்கி விடுமுறைகள் நீங்கலாக) மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரையும் பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. 2022.11.09ஆம் திகதியிலிருந்து 2022.12.15ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக **3,500.00** ரூபாவைச் செலுத்தியதன் பின்னர், நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராம வீதி, 117ஆம் இலக்கத்திலுள்ள கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களுக்கு நிறுவனத்தின் தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

8. 2022.12.15ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதியில் முன்மொழிவு என்பவற்றை தனித்தனியான தபாலுறைகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தொழில்நுட்ப முன்மொழிவுகள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் மாநாட்டு மண்டபத்தில் உடனடியாகத் திறக்கப்படும். சமுகமளிக்க விரும்பும் பிரதிநிதிகள் அமைப்பிலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட கடிதமொன்றை சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் இக்கடிதமானது உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை, இல. 117, சுபத்ராராம பாதை, கங்கொடவில, நுகேகொட என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். நிதியிடல் முன்மொழிவின் திறக்கும் திகதியானது RFP இற்கமைவாக அறிவிக்கப்படும்.

9. விலைமனுக்கள் 2023-02-28ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராம வீதி, 117ஆம் இலக்கத்திலுள்ள கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் மாநாட்டு மண்டபத்தில் 2022.11.23ஆம் திகதியன்று மு.ப. 11.00 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

11. அனைத்து விலைமனுக்களுடனும் 750,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்று பின்வருமாறு **இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்**.
   I. இலங்கையில் செயற்படுவதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
   II. விலைமனுக்கோரல் ஆவணங்களின் 8ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   III. தலைவர், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் 2023.03.31ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.

12. கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் திணைக்கள பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதி தீர்மானமென்பதுடன் காலத்திற்கு காலம் வழங்கப்படும் நிதியிடல் ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளுக்கு எந்தவொரு திருத்தங்களை மேற்கொள்வதற்கான உரிமையையும் கொள்வனவுதாரர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

13. மேலும் தெளிவுறுத்தல்களுக்கும் தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

| முகவரி | தொடர்பு இலக்கங்கள் |
|---|---|
| உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்),<br>கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை,<br>இல.: 117, சுபத்ராராம வீதி,<br>கங்கொடவில, நுகேகொட. | தொலைபேசி: 0115-384000 அல்லது 0112-384000<br>தொலைநகல் இலக்கம்: 011-2812573<br>மின்னஞ்சல்: admin@aib.gov.lk |

**தலைவர்,**
**கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை,**
**இல. 117, சுபத்ராராம வீதி,**
**கங்கொடவில, நுகேகொட.**

**09.11.2022.**

## பிழைதிருத்தம்

### மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் அடகு முகவர்களான வரையறுக்கப்பட்ட பண்டாரவெல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2020.01.01 முதல் 2021.06.30 வரையான காலத்தில் அடகு வைத்து (அன்றைய தினம் உட்பட) மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகள் 2022.11.26, 27 ஆகிய தினங்களில் மு.ப.9.00 இற்கு நகர கிராமிய வங்கி வளாகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

**பொது முகாமையாளர்**
**வ/ப. பண்டாரவெல ப.நோ.கூ.சங்கம்**
**2022.11.03ஆம் திகதியன்று**

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 03/07/2022 | 02/08/2022 | 28/11/2022 & 01/12/2022 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ∴பினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ∴பினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

Repeat Your ad For Better Offers

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹோமாகம, ஸ்ரீ மஹிந்த மாவத்தை, இலக்கம் 341/2ஏ என்ற முகவரியில் வசிக்கும் சமன் துசார சதரசிங்ஹ (தே.அ.அ.இல. 197121102654) ஆகிய நான், ஹோமாகம, ஸ்ரீ மஹிந்த மாவத்தை, இலக்கம் 341/2ஏ என்ற முகவரியில் வசிக்கும் மெகொட கமகே சுஜீவா பிரியானி டயஸ் (தே.அ.அ.இல. 705872074V) என்பவருக்கு வழங்கப்பட்டதும், 2009.03.18 அன்று பதிவு செய்யப்பட்டதும், 2008.09.11 அன்று பிரசித்த நொத்தாரிசு திரு. யூ.ஜே. ஹிரிமுத்துகொட என்பரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5622 இலக்கமுடைய அற்றோணி தத்துவமானது உடன் அமுலாகும் வண்ணம் இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**சமன்துசார சதரசிங்ஹ**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10**

### இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு பாவனைப் பொருட்களை வழங்குதல்

இலங்கை தேசிய வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | விபரங்கள் | குறிப்பீட்டிலக்கம் |
|---|---|---|
| 1. | சவர்க்கார வகைகள் | SI/10/2022 |
| 2. | பொலித்தீன் குப்பை உறைகள் | SI/03/2022 |

மேற்படி வழங்கல்களுக்காக தகைமை வாய்ந்த பதிவு செய்துள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் சவர்க்காரங்களுக்கு மீளளிக்கப்படாத 4000.00 ரூபா மற்றும் பொலித்தீன் குப்பை உறைகளுக்கு மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2022-11-10ஆம் திகதி முதல் 2022-11-30ஆம் வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து இயைபுடைய விலைக்கோரல் நிபந்தனைகள் சகிதமான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2022-12-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை தேசிய வைத்தியசாலை பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்தியர் டப்ளியூ. கே. விக்கிரமசிங்க,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

## நீர்ப்பாசன அமைச்சு
## இலங்கை மஹாவலி அதிகாரசபை

### 2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

கொழும்பு-10 இலுள்ள இலங்கை மஹாவலி அதிகாரசபையின் தலைமை அலுவலகம் மற்றும் இலங்கை மஹாவலி அதிகாரசபையின் அனைத்து முறைமைகள் மற்றும் செயற்றிட்ட அலுவலகத்திற்கும் **பண்டங்கள் மற்றும் சேவைகளை** வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் / அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்களை பதிவு செய்வதற்காக **2022.11.10 ஆம் திகதியிலிருந்து 2022.12.12 ஆம்** திகதி வரையும் விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

**"TENDERS –REGISTRATION OF SUPPLIERS"** என்பதன் கீழுள்ள **www.mahaweli.gov.lk** என்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்யலாம். **ஒவ்வொரு அம்சத்திற்கான பணக்கொடுப்பனவானது 1000 ரூபா** என்பதுடன் இலங்கை வங்கி ஹயிட் பார்க் கிளையின் **2327542** என்ற கணக்கிலக்கத்திற்கு பணக்கொடுப்பனவை செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் **( 'வழங்குநரின் பெயர் மற்றும் இலங்கை மஹாவலி அதிகாரசபை – 2023 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களை பதிவு செய்தல்'** என்ற சொற்கள் ரொக்கப்பண பற்றுச் சீட்டில் குறிப்பிடப்படல் வேண்டும்) பற்றுச்சீட்டானது உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமானது **ரொக்கப் பண பற்றுச்சீட்டின் மூலப்பிரதியும் வியாபார பதிவு செய்தல் சான்றிதழும்** பதிவுத் தபாலில் **பணிப்பாளர் நாயகம், 9 ஆம் மாடி, பெறுகைப் பிரிவு, இலங்கை மஹாவலி அதிகாரசபை, இல. 500, T.B. ஜயா மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு 2022.12.12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே இடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இதற்கு மேலாக, **"Registration of Suppliers the year 2023"** என்ற வாசகங்கள் விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காக பின்வரும் வழிகளில் தொடர்பு கொள்ளவும்:

தொலைபேசி இலக்கங்கள்: 0112687491-5 நீடிப்பு 255/ 268 அல்லது
தொலைபேசி இலக்கங்கள்: 0112687235 - உதவிப் பணிப்பாளர் (பெறுகை)
இணையம்: www.mahaweli.gov.lk

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மஹாவலி அதிகாரசபை,**
**இல. 500, T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு-10.**

## இலங்கை அரசாங்கம்

### நீர் வழங்கல் அமைச்சு

## நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்

### கடன் இல. Cr. 5685-lk & 9255-lk

## விலைக்கோரல் அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்திடமிருந்து நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களுக்கு கொடுப்பனவாகச் செய்யவுள்ளது.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக் கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப் படும் கேள்விப் பிணை முறி | தகைமை தேவைப்பாடுகள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| **செயற்றிட்டப் பெறுகைக் குழு (மேல்நிலை)** | | | | | |
| **வேலைக் கேள்விகள்** | | | | | |
| கம்பஹா மாவட்டத்திலுள்ள அத்தனகல்லையில் 25m3/d கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணித்தல் ஒப்பந்த இல. MWS/WaSSIP/PDO/NCB/STP-Attanagalla/AF/2022/08 | ரூபா 20,000/- | ரூபா 2,256,000/- | C3 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2022 டிசம்பர் 6ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு |
| கேகாலை மாவட்டத்தில் தீவல மேல் மற்றும் கீழ் (கேகாலை 01ஆம் படிநிலை) கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு வேலைகள் ஒப்பந்த இல. MWS/WaSSIP/Kegalle/RE/NCB/Deewala Upper & Lower/ AF/ 2019/10 | ரூபா 12,500/- | ரூபா 576,000/- | C4 அல்லது C5 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2022 நவம்பர் 29ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| கேகாலை மாவட்டத்தில் திதுலாவத்த கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு வேலைகள் ஒப்பந்த இல. MWS/WaSSIP/ Kegalle/RE /NCB/ Didulawaththa /AF/2021/23 | ரூபா 12,500/- | ரூபா 924,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2022 நவம்பர் 29ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு |
| கிளிநொச்சி மாவட்டத்தில் செல்வநகர் நீர்த்தாங்கி கோபுரத்திலிருந்து பிரதான விநியோக குழாயைப் பதித்தல் - கோனவில் குழாயைப் பதித்தல் - கட்டம் II ஒப்பந்த இல. MWS/WaSSIP/Kilinochchi/Rural/ NCB/ Konavil Phase – II/AF /2022/07 | ரூபா 35,000/- | ரூபா 4,896,000/- | C2 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2022 டிசம்பர் 08ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு |
| குருநாகல் மாவட்டத்தில் குருநாகல் (இப்பாகமுவ) கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணித்தல் ஒப்பந்த இல. MWS/WaSSIP/Urban/NCB/Septage-Ibbagamuwa/ AF/2021/12 | ரூபா 20,000/- | ரூபா 1,548,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2022 டிசம்பர் 06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| மொனராகலை மாவட்டத்தின் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் மிகுதி வேலைகள் ஒப்பந்த இல. MWS/WaSSIP/ Monaragala /BW/NCB / Balance Work-Septage /2022 /04 | ரூபா 20,000/- | ரூபா 1,500,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2022 டிசம்பர் 08ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு |
| நுவரெலியா மாவட்டத்தில் ஸ்டெஸ்பி நீர் வழங்கல் திட்டத்தை நிர்மாணித்தல் ஒப்பந்த இல. MWS/WaSSIP/ Nuwara Eliya /Plantation /NCB/Strathspey /AF/2022/03 | ரூபா 12,500/- | ரூபா 1,092,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜூபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2022 டிசம்பர் 17ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு |
| **நேரத்தை நீடித்தல்** | | | | | |
| 2022-10-12ஆம் திகதிய விளரம்பரம் பற்றியது. பின்வரும் கேள்விக்கான முடிவுறுத்தல் திகதி பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | |
| பதுளை மாவட்டத்திலுள்ள தியத்தலாவ நீர் வழங்கல் திட்டதிற்கு M&E உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல. MWS/WaSSIP/Badulla/NCB/ Diyathalawa – M&E Works /2020/06 | விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி: 2022 நவம்பர் 29 பி.ப. 2.00 மணி (விலைமனுக்கள் 2023 மார்ச் 27ஆம் திகதி வரையும் விலைக்கோரல் பிணை முறியானது 2023 ஏப்ரல் 24ஆம் திகதி வரையிலும் செல்லபடியாதல் வேண்டும்) | | | | |

3. செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.
4. சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்பாட்டு செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படுமிடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விகளை ஒன்றில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பலாம்.
7. சகல கேள்விகளும் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

***நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.***
***சமூக நீர் திட்டங்களின் சிக்கல்களுக்கு 1914 எனும் எண்ணைத் தொடர்புகொள்ளவும்.***

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to. classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

# பெறுகை அறிவித்தல்

**மாவட்ட பொது வைத்தியசாலை சிலாபம்**

## 2023 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

2023 ஆம் ஆண்டில் இவ் வைத்தியசாலையின் ரூபா மூன்று இலட்சத்திற்கு (ரூபா.300,000.00) மேற்படாத கட்டிடத்திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளிற்கான ஒப்பந்தக் காரர்களைப் பதிவுசெய்து கொள்வதற்காக, இலங்கை நிர்மாணத்துறை மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பதிவு செய்யப்பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022.11.24 அன்று மு.ப.10.00 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்களைத் திறத்தல் அன்றைய தினம் அதே நேரம் பணிப்பாளரின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் நீங்கள் அல்லது உங்கள் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

2022.11.09 முதல் 2022.11.23 வரை வார வேலை நாட்களில் மு.ப.10.00 முதல் பி.ப.2.00 வரையான காலப்பகுதியில் திட்டமிடல் பிரிவில் இதற்கான கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இக் கேள்விப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்காக தமது தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் மற்றும் கேள்விக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரிசீலனை செய்துகொள்ளலாம்.

| தொடர் இலக்கம் | உருப்படி | தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| 01 | 2023 ஆம் ஆண்டில் கட்டிடத் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தக் காரர்களைப் பதிவு செய்தல் (ரூபா 300,000.00 இற்கு மேற்படாத சிறு பராமரிப்பு மற்றும் 02 மில்லியன்களிற்கு மேற்படாத நிர்மாணிப்புக் கள் தொடர்பாக, | C9 C8 (திருத்தப் பட்ட பதிவு விதிகளின் பிரகாரம் EM5 மற்றும் அதற்கும் மேல்) | 2,500.00 |

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில்,

"பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள், "தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை - சிலாபம்" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக அலுவலகத்தில் ஒப்படைத்தல் முடியும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவையெனின் இலக்கம் 032-2222261 ஐ அழைக்கவும்

**தலைவர்,
பெறுகைக்குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,
சிலாபம்.**

**பெயர் மாற்றம்**

களுத்துறை மாவட்டத்தின், களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 188, ஜாவத்த வத்த, களுத்துறை வடக்கில் வசிக்கும் சிரிசேன ஹக்குருகே அகலங்க சசேன் குணரத்ன ஆகிய நான் இன்று முதல் சிரிசேன ஹேவகே அகலங்க ஷசேன் குணரத்ன என்ற பெயரை பாவிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும், மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

**- சிரிசேன ஹேவகே அகலங்க ஷசேன் குணரத்ன**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

# பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தான பண்ணைகளிற்கு பதனிடப்பட்ட கால்நடை உணவுகளை வழங்குவதற்காக 1986 இன் 15ஆம் இலக்க கால்நடை உணவு சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பெற்றுள்ள கால்நடை உணவு தயாரிப்பாளிடமிருந்து, பின்வரும் காலப்பிரிவுக்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. மாட்டுத்தீனி

உலர்வலயம் மற்றும் தெங்கு முக்கோண வலயங்களின் பண்ணைகளிற்கு - 2022 டிசம்பர் 01 முதல் 2023 ஜூன் 30 வரை

| பண்ணைகள் | கால்நடை உணவு வகைகள் | தேவையான அளவு | கேள்விப் பிணையம் (ரூபா) |
|---|---|---|---|
| கல்பொக்குண, நாரங்கல்ல, ருக் அத்தண, கொவுல்வெவ, சிரிங்கபாத, ஆண்டிகம, மெல்சிரிபுர, பொலன்னறுவை, பெலிகம, நிகவரெட்டிய, வீரவில, மெ. பெ.ச.சங் மத்திய நிலையம். மரந்தவில, ரொசிட்டா, ஒயாமடுவ, கொட்டுகச்சிய | கரவைப் பசுக்களிற்கான உணவு (Type II) Milking Cow Feed (Type II) | 1514.2 | 1,241,644.00 |

கால்நடை உணவு தேவையான அளவு, விபரக்குறிப்புக்கள் (Specifications) மற்றும் கேள்வி நிபந்தனைகளடங்கிய ஆவணங்களை அலுவலக வேலை நேரங்களில் பின்வரும் முகவரியிலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் வழங்கல் முகாமையாளரிடம் கோரல் கடிதமொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். உருப்படி ஒன்றிற்காக ரூபா.5,000.00 வீதம் மீளளிக்கப்படாத வைப்பொன்று அறவிடப்படும்.

2022 நவம்பர் 21 அன்று பி.ப. 3.30 வரை இதற்கான படிவங்கள் வழங்கப்படுவதுடன், 2022 நவம்பர் 22 அன்று மு.ப.10.30 இற்கு கேள்விகள் மூடப்படும். அவ்வேளை முடிவுற்றதும் உடனடியாக கொழும்பு - 05, நாராஹென்பிட்ட, நாவல வீதி, இலக்கம் 40 இலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையில் கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர் - பெறுகைக்குழு**

**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**

# கொழும்பு மாநகர சபை

## கேள்வி/ விலைமனுவிற்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் **சேவைகள் மற்றும் பொருட்களுக்காக** முத்திரையிடப்பட்ட கேள்விகளை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

| தொடர் இல. | கேள்வி இலக்கம் | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனு தாரரின் தகுதித் தன்மை | மீளளிக்கப் படாத கேள்வி/ விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணையின் பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01. | CPD13/ 2186/ 2022 | 2023 மற்றும் 2024 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்காக கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான மயானங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தகன சாலைகளின் சேர்விஸ் மற்றும் பழுதுபார்த்தல் | வியாபாரப் பதிவுடன் இந்தவகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை கொண்டுள்ள வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூ. 2300.00 | ரூ. 25,000.00 இற்கான நிபந்தனையற்ற உடன் பெறக்கூடிய உத்தரவாதம் |
| 02. | CPD13/ 2398/ 2022 | பழைய மாநகர நிலையங்களில் உள்ள சிற்ப உருவங்களை பழுது பார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் | | ரூ. 2300.00 | ரூ. 20,000.00 இற்கான நிபந்தனையற்ற உடன் பெறக்கூடிய உத்தரவாதம் |
| 03. | CPD02/ 2707/ 2022 | ஆற்று மணல், செங்கல் மற்றும் மண் வழங்குவதற்கான விலைமனுக்கள் (2023.01.01 - 2023.06.30) | | ரூ. 5750.00 | ரூ. 300,000.00 இற்கான நிபந்தனையற்ற உடன் பெறக்கூடிய உத்தரவாதம் |
| 04. | CPD02/ 2706/ 2022 | கட்டிடம் மற்றும் வீதி நிர்மாண பொருட்களை வழங்குவதற்கான விலைமனு (ஒன்று சேர்க்கப்பட்ட சிறு துண்டுகள்) (2023.01.01 - 2023.06.30) | | ரூ. 5750.00 | ரூ. 500,000.00 இற்கான நிபந்தனையற்ற உடன் பெறக்கூடிய உத்தரவாதம் |

கேள்வி ஆவணம் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) ஆகியவற்றை இரு முறைமைகளினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**முறைமை-01 – கொழும்பு மாநகர சபையின் www.colombo.mc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தல்.**

I. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி/ விலைமனுக்கோரல் கட்டணத்தை பின்வரும் முறைமைகளில் செலுத்தலாம்.

அ) 167-1-001-6-3169425 என்ற கணக்கு இலக்கத்தை கொண்டுள்ள நகர மண்டப கிளைக்கு வரவு வைக்குமாறு எந்த மக்கள் வங்கி கிளையிலிருந்தும் அனுப்புதல்.

ஆ) வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பின்வரும் கொழும்பு நகர எல்லைக்குலுள்ள மாநகர இடப்பரப்புக்களிலுள்ள பணக்கொடுப்பனவு கருமபீடங்கள்.

***வட்டார அலுவலகம் 4
இல. 147, ஹைலெவல் வீதி
கிருளப்பன
கொழும்பு-06.***

***வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு
மாளிகாகந்த
கொழும்பு-10.***

II. மூலப்பிரதி பற்றுச்சீட்டு/ வரவுத் துண்டு ஆகியவற்றை கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைப்பது கட்டாயமானதாகும்.

**முறைமை 02 – நகர மண்டப இடப்பரப்பிலிருந்து சேகரித்தல்.**

அ) 2022.11.28ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் நகர மண்டப இடப்பரப்பிலுள்ள சிறாப்பர்களின் கருமபீடங்களில் ஒவ்வொரு கேள்விக்கும்/விலைமனுக்கோரலுக்கும் கேள்வி அறிவித்தலில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகைத் திணைக்களம் அலுவலகத்திலிருந்து கேள்வி/ விலைமனுக் கோரல் ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம்.

அ. கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022.11.28 ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணிக்குப் பின்னர் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படமாட்டாது/ வழங்கப்படமாட்டாது.

ஆ. கேள்விகளை/விலைமனுப்பிணை ஆகியவற்றை மூடும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு நிபந்தனையற்ற உடனடியாக பெறக்கூடிய விலைமனு உத்தரவாதம்/விலைமனுப்பிணையானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதம்/விலைமனுப்பிணை ஆகியன 2023.04.27 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுவானது 2023.03.28 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

இ. கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணம் ஆகியன மூலப்பிரதியானது உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு நகல்பிரதியுடன் 2022.11.29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-07, மாநகர மண்டபம், மாநகர சபை செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

ஈ. கேள்வி/ விலைமனுவானது 2022.11.29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படுவதுடன் மூடும் நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் கேள்விகள்/விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள்/விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறையாக பிரகடனப்படுத்தப்படின், கேள்விகள்/ விலைமனுக்கள் அடுத்த வேலை நாளன்று மு.ப. 10 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்/ விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் திறத்தலின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். 0112686389, 0112686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பிரதம கணக்காளர் (பெறுகை) இடமிருந்து தெளிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளலாம்.

உ. ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களை கொண்டுள்ள கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பொது ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்த பின்பு PCA(3)ஐ சமர்ப்பித்தல் வேண்டும்.

**J.M. பத்ராணி ஜயவர்தன
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை.**

# பெறுகை அறிவித்தல்

## பாதுகாப்புச்சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் 2023/2024

## சப்ரகமுவ மாகாணம்

சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு சொந்தமான 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜனவரி 31ஆம் திகதி வரையான காலத்தில் வைத்தியசாலைகளில் சுத்திகரிப்புசேவை மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கலுக்காக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகை குழு தலைவர் மூலம் 2022.11.30ஆம் திகதி மு.ப. 10.00 வரை விலைமனுக்கள் ஏற்கப்படும்.

2. அந்தந்த நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணைமுறியின் பெறுமதி கீழே தரப்பட்டுள்ளது.

02.

| | சேவை | வைத்தியசாலை/நிறுவனம் | விலைமனு பிணையின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப்படாத விலைமனு கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | பாதுகாப்பு சேவை வழங்கல் | i. பலங்கொட ஆரம்ப வைத்தியசாலை | 120,000.00 | வைத்தியசாலை ஒன்றுக்கு / அலுவலகம் ஒன்றுக்காக ரூபா 3000.00 |
| | | ii. கஹவத்த ஆரம்ப வைத்தியசாலை | 100,000.00 | |
| | | iii. கலவான ஆரம்ப வைத்தியசாலை | 70,000.00 | |
| | | iv. எஹலியகொட ஆரம்ப வைத்தியசாலை | 100,000.00 | |
| | | v. சந்திரிக்காவெவ பிரதேச வைத்தியசாலை | 35,000.00 | |
| | | vi. கரவனல்லை ஆரம்ப வைத்தியசாலை | 140,000.00 | |
| | | vii. மாவனல்லை ஆரம்ப வைத்தியசாலை | 120,000.00 | |
| | | viii. வரகாபொல ஆரம்ப வைத்தியசாலை | 140,000.00 | |
| | | ix. இரத்தினபுரி பிரதேச மருந்துக் களஞ்சியம் | 15,000.00 | |
| | | x. கேகாலை பிரதேச மருந்து களஞ்சியம் | 15,000.00 | |
| | | xi. இரத்தினபுரி இதய சத்திர சிகிச்சையகம் | 15,000.00 | |
| | | xii. இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | 15,000.00 | |
| | | xiii. கேகாலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | 15,000.00 | |
| | | xiv. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - இரத்தினபுரி | 30,000.00 | |
| 02 | துப்புரவு சேவை வழங்கல் | i. பலாங்கொடை ஆரம்ப வைத்தியசாலை | 180,000.00 | வைத்தியசாலை ஒன்றுக்கு / அலுவலகம் ஒன்றுக்காக ரூபா 3000.00 |
| | | ii. கஹவத்த ஆரம்ப வைத்தியசாலை | 170,000.00 | |
| | | iii. கலவான ஆரம்ப வைத்தியசாலை | 150,000.00 | |
| | | iv. எஹலியகொட ஆரம்ப வைத்தியசாலை | 150,000.00 | |
| | | v. கரவனல்லை ஆரம்ப வைத்தியசாலை | 180,000.00 | |
| | | vi மாவனல்லை ஆரம்ப வைத்தியசாலை | 180,000.00 | |
| | | vii வரகாபொலை ஆரம்ப வைத்தியசாலை | 200,000.00 | |
| | | viii கொலன்ன ஆரம்ப வைத்தியசாலை | 30,000.00 | |
| | | ix கொடக்கவெல பிரதேச வைத்தியசாலை | 30,000.00 | |
| | | x பல்லேபெத்த பிரதேச வைத்தியசாலை | 30,000.00 | |
| | | xi சந்திரிகாவெவ பிரதேச வைத்தியசாலை | 30,000.00 | |
| | | xii ரக்வான பிரதேச வைத்தியசாலை | 15,000.00 | |
| | | xiii வெலிகெபொள பிரதேச வைத்தியசாலை | 15,000.00 | |
| | | xiv அயகம பிரதேச வைத்தியசாலை | 15,000.00 | |
| | | xv கல்தொட்ட பிரதேச வைத்தியாசலை | 15,000.00 | |
| | | xvi இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை | 15,000.00 | |
| | | xvii மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை - இரத்தினபுரி | 15,000.00 | |

03. மேற்படி பெறுகைக்காக 2022.11.09 முதல் 2022.11.29 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை மற்றும் 2021.11.10 ஆம் திகதி 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்தில் சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் வழங்கப்படும். விலைமனுக்கள் ஏற்கப்படுவது 2022.11.30 ஆம் திகதி மு.ப. 10.00க்கு முடிவுறும். ஒரு நிறுவனத்திற்கு விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக குறித்த கட்டணத்தை இந்த அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்துமூல கோரிக்கை ஒன்றை முன்வைத்தல் வேண்டும்.

04 சப்ரகமுவ மாகாணத்தின் சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் பெற்றுக்கொண்ட மாதிரிகளில் மாத்திரம் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென கேள்விகள் இரண்டு பிரதிகளாக சிங்கள மொழியில் பூரணப்படுத்தி தனித்தனி உறைகளில் உள்ளிட்டு முத்திரையிட்டு அவற்றை ஓர் உறையில் சேர்த்து முத்திரையிட்டு 2022.11.30 அன்று மு.ப.10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, இல.75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் குறித்த விலைமனுக்களை 2022.11.30ஆம் திகதி மு.ப. 10.00க்கு முன்னர் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விகளை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில்........ (வைத்தியசாலை அல்லது அசுகாதார நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடவும்) இற்கு "பாதுகாப்பு/சுத்திகரிப்புச் சேவைகளை வழங்களிற்கான கேள்வி" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

05. 2022.11.30 ஆம் திகதி மு.ப. 10.30க்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்களுக்கு அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு இந்த சந்தர்ப்பத்தில் பங்கேற்க முடியும்.

06. விலைமனு ஆவணங்களை எந்த கட்டணமும் செலுத்தாமல் இந்த அலுவலகத்தில் 2022.11.09 முதல் 2022.11.29 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.4.00 வரை பரீட்சிக்க முடியும்.

07. மேலதிக விபரங்களுக்காக இந்த அலுவலகத்தின் தலைமை கணக்காளரை தொடர்புகொள்ளவும். தொலைபேசி இலக்கம் 045 – 2222277

**தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு,
மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
இரத்தினபுரி.**

2022.11.09

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**கல்வி அமைச்சு**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**

**சாலியபுரயிலுள்ள இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானம் மற்றும் மருத்துவ பீடத்திற்கு உயிரியல் வாயு முறைமையை (BIO GAS SYSTEM) வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல்**
**(ஒப்பந்த இல. RJT/CW/2022/09)**

மேற்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

01. 2022-11-09ஆம் திகதி முதல் 2022-11-30ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
02. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை மூலப்பிரமாணங்களுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.
    - சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.
      உயிரியல் வாயு முறைமையை வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்தலில் குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவம்
    - கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வு ஆகக்குறைந்தது 4.5 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.
    - பிரதான ஒப்பந்தக்காரராக 30 மில்லியன் ரூபாவிற்கு குறையாத தொகையில் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மையுடைய ஆகக்குறைந்தது ஒரு செயற்திட்டத்தையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
03. மீளளிக்கப்படாத கட்டணமாக 5000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், 2022-11-09ஆம் திகதி முதல் 2022-11-30ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான உதவி பதிவாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான உதவி பதிவாளரின் அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். 2022-11-09ஆம் திகதி முதல் 2022-11-30ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வேலைகளுக்கான பொறியியலாளரிடமிருந்து (025-2266787) மேலதிக தகவல்களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செய்யப்படல் வேண்டும்.
04. 2023-02-02ஆம் திகதி வரையில் விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
05. அனைத்து விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட 40,000.00 ரூபாவிற்கான (நாற்பதாயிரம் ரூபா மட்டும்) விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அல்லது 20,000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விலைமனுப்பிணை முறியானது 2023-03-02ஆம் திகதி செல்லுபடியாதல் வேண்டும்.
06. முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் பிரதான நிர்வாகக் கட்டிடம், 2ஆம் தளம், பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
07. நிர்மாணக் காலம் 120 நாட்காட்டி நாட்களாகும்.
08. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2022-12-01ஆம் திகதி பி.ப. 2.00 மணியாகுமென்பதுடன் அவைகள் மூடிய உடனடுத்து திறக்கப்படும்.
09. 2022-11-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சாலியபுர இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானம் மற்றும் மருத்துவ பீடத்திலுள்ள பிரதான கேட்போர் கூடத்தில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும்.
10. விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை. திகதி: 2022-11-09.**

---

**அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பீடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு**

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்டவர்களின் தகுதிகளை ஆராயும்: -

| இல. | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. நிரோஷனி மனிஷா டயஸ் அபேவிக்ரம குணசேகர. 51/8, விஹார மாவத்தை, தலவத்துகொட வீதி, பிடகோட்டை. | பிரான்ஸ் குடியரசின் இலங்கையின் தூதுவராகவும் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பிற்கான (UNESCO) இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகவும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார். |
| 2 | திருமதி. ஹிமாலி சுபாஷினி டி சில்வா அருணதிலக. 21/2B, வீர மாவத்தை, ஸ்ரீ சுபூதிபுர, பத்தரமுல்ல. | சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார். |

மேற்குறிப்பிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, "செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே" என்ற விலாசத்திற்கு 2022 நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777300 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையதளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கோட்டே.**
**2022 நவம்பர் மாதம் 09 ஆம் திகதி**

---

## அறிவித்தல்

### அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளிநாட்டு கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்ட FC 00236655 என்ற கம்பனியிலக்கத்தையும் சிங்கப்பூரின் சட்டங்களின் கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்டதும் செல்லுபடியாகும் தன்மையைக் கொண்டதும் 10, Collyer Quay, #10-01 Ocean Financial Centre, Singapore 049315, Singapore என்ற முகவரியில் பதிவு பெற்ற அலுவலகத்தையுமுடையதும் 2021.02.01 ஆம் திகதியன்று திகதியிடப்பட்டதும் Ho Suk Tsing Leslie என்ற சிங்கப்பூரின் பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2021.02.11 ஆம் திகதியன்று 2178 என்ற இலக்கத்தையுடைய நாட்புத்தகம் 326 ஆம் பாகம், 109 ஆம் பக்கத்தில் எழுத்து மூல அதிகாரம் பெற்றவர்கள் மற்றும் அற்றோணித்தத்தவத்தினாலும் பதிவு பெற்றதும் 601400138V என்ற தேசிய அடையாள அட்டையின் உரிமையாளரும் கந்தானை, பற்றிமா வீதி, 122 ஆம் இலக்கத்திலுள்ள ஆனந்த மானகே என்பவருக்கு SABIC ASIA PACIFIC PTE LTD என்ற பெயரையுமுடைய நாம் வழங்கிய அற்றோணித்தத்துவமானது 2022.11.04 ஆம் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கை சோஷலிச குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்குகின்றோம்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆனந்த மானகே என்பவரினால் எமக்கு அல்லது எமது சார்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நாம் எவ்வித பொறுப்பையும் ஏற்க மாட்டோம்.

**SABIC ASIA PACIFIC PTE LTD**

**Address: 10, Collyer Quay, #10-01 Ocean Financial Centre,**
**Singapore,**
**049315, Singapore.**
**Date: 04.11.2022.**

---

**2023 ஆண்டுக்கான வரவு செலவு வரைவு முன்மொழிவு ஆவணம் பரிசீலனை செய்தல்**
**லுணுகலை பிரதேச சபை**

லுணுகலை பிரதேச சபையின் 2023 ஆண்டுக்கான வரவு செலவு வரைவு பொதுமக்கள் பரிசீலனை செய்வதற்காக

லுணுகலை பிரதேச சபை பிரதான காரியாலயத்தில் 2022.11.02 ஆம் திகதி தொடக்கம் 2022.11.11 ஆம் திகதி வரை வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

www.lunugala.ps.gov.lk
இணையதளத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

**சீ.ஜகத் சந்திர தலுக்கொட்டுவ**
**தவிசாளர் பிரதேச சபை - லுணுகலை**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)

**வீதி அபிவிருத்தி சபையின் "மகநெகும மஹமெதுர"**
**கட்டிடத்தின் தரைத்தளம் தொடக்கம் 09வது மாடி வரை துப்புரவு சேவைகளை வழங்குதல், குப்பைகளை அகற்றுதல், நிலப்பரப்புப் பகுதியைப் பராமரித்தல் மற்றும் கட்டிடத்தை தூய்மை செய்தல்**

**ஒப்பந்த இலக்கம் : *RDA/DPR/SE/CL(HO)/2022/34***

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சார்பாக "மகநெகும மஹமெதுர" கட்டிடத்தின் தரைத்தளம் தொடக்கம் 9வது மாடி வரை **ஒரு வருட காலத்திற்கு** தூய்மைபடுத்தல் மற்றும் சுத்தப்படுத்தும் சேவைகளை வழங்குவதற்காக கீழே உள்ள நிபந்தனைகளை கொண்ட தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையானது பிரதம செயற்படுத்தும் நிறுவனமாக செயற்படும்.
2. மனுக் கோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய செயற்படுத்தப்படும்.
3. மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **91 கலண்டர் நாட்கள்** வரை மனுக்கள் செல்லுபடியாகும்.
4. மனுக்கள் **ரூ.350,000/-** பெறுமதியுடைய மனுப் பாதுகாப்பு பிணை (**2023.03.30** ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.) இணைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவில் **ரூ.175,000/-** பெறுமதியுடைய மனுக்காப்புறுதிப் பிணை அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையில் செலுத்திய மேற்குறிப்பிடப்பட்ட பணம் பற்றுச்சீட்டு இணைக்கப்படாத அனைத்து மனுக்களும் நிராகரிக்கப்படும்.
5. மனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களிலும் மனுதாரரினால் கையெழுத்து இடப்பட்டிருக்க வேண்டும் மேலும் அவருடைய அதிகாரப்பூர்வ முத்திரையை பதிக்கபட்டிருத்தல் வேண்டும்.
6. மனுதொடர்பான முன்மனுக்கூட்டம் **2022.11.21** ஆம் திகதி **மு.ப.10.30** மணிக்கு **பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, இல-216 "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் பிரிவில்** இடம்பெறும்.
7. **பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, இல-216 "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரின் (கொள்முதல் பிரிவில்)** எவ்வித கட்டணமும் இன்றி மனு ஆவணங்களை **அலுவலக நேரத்தில்** பரீட்சிக்க முடியும்.
8. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.11.09** ஆம் திகதியிலிருந்து **2022.11.30** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.5,000/- (வட்வரி உள்ளடங்களான)** கட்டணத்தை செலுத்தி 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் பதிவாளர் வெளியிட்டுள்ள பதிவு சான்றிதழ் உடன் **இலங்கை வங்கி - பெருநிறுவன கிளை 0000001943** எனும் கணக்கிலக்கத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் எனும் பெயரில் வைப்பிலிட்ட ரசீதின் அசல் பிரதியுடன் மனு ஆவணத்தை **பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான "மகநெகும மஹமெதுர" 4 வது மாடியில்** அமைந்துள்ள கொள்முதல் பிரிவின் பணிப்பாளர் காரியாலயத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். **2022.12.01** ஆம் திகதி **பி.ப. 02.00** மணிக்கு முன்னர் மூடிய மனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். உரிய நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
9. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **பிரதிகளுடன்** மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்குமாறு **தலைவர், வீ.அ.அ.ச கொள்முதல் குழு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முதலாவது மாடி, "மகநெகும மஹமெதுர" இல-216 டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்க வேண்டும். மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மகநெகும மஹமெதுர, நிர்வாக வளாகத்திற்கு தூய்மைபடுத்தும் சேவையை வழங்கல்"** என குறிப்பிடப்பட வேண்டும்.
10. **பத்தரமுல்லை, கொஸ்வத்தை, இல 216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் (கொள்முதல்) காரியாலயத்தில்** மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.
11. மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாக : **011-2884790 அலுவலக நேரத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரை (கொள்முதல் பிரிவு)** தொடர்பு கொள்ள முடியும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு,
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
முதலாம் மாடி, 'மகநெகும மஹமெதுர',
இல-216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

---

**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**சுற்றாடல் அமைச்சு**
**CEA/AD/GEN/SUPP.REGIS./2022**

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு 2023ஆம் வருடத்தில் பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக கீர்த்தி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பிரதான வகுதி | உப வகுதி | விபரங்கள் |
|---|---|---|
| **பொருட்கள்** | **G-1** முதல் **G-21** வரை | காகிதாதிகள், டோனர், தளபாடங்கள், தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின்சார உபகரணங்கள், வளிச்சீராக்கிகள், கட்புல செவிப்புல உபகரணங்கள், டயர்கள், பெட்டறிகள், ஆய்வுகூட உபகரணங்கள், கட்டிடப் பொருட்கள், சீருடைகள், புத்தகங்கள், விரல் ரேகை பதிவு இயந்திரங்கள், முத்திரைகள், வாகன சுத்திகரிப்புப் பொருட்கள், இரசாயனங்கள், வாகன உதிரிப்பாகங்கள், திரைச்சீலைத் துணிகள் |
| **சேவைகள்** | **S-1** முதல் **S-35** வரை | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல், தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேவைகள், மோட்டார் வாகன திருத்தவேலைகள், மோட்டார் வாகனங்களுக்கான சேர்விஸ்கள், மோட்டார் வாகனங்களின் சக்கர சமநிலையாக்கம், உணவு பானங்கள் வழங்கும் சேவைகள், உள்ளக தொலைபேசி முறைமை திருத்தவேலைகள், மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள், திரைச்சீலைகள் மற்றும் சீருடைகளைத் தைத்தல், ஆய்வுகூட உபகரணங்களின் திருத்தவேலைகள், தீயணைப்பு உபகரணங்களின் திருத்தவேலைகள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் மினுக்கும் வேலைகள், வாகனங்களுக்கு குஷனிடுதல் உட்பட வாகன ஆசனங்களுக்கு உறையிடுதல், அச்சு வேலைகள், சாவி வெட்டும் வேலைகள், பீடை நாசினி நடவடிக்கைகள், அறிவித்தல் பலகைகள், பதாகைகள், தொப்பிகள் தயாரித்தல், டீ-சேர்ட்கள், கொடிகள், கட்புல செவிப்புல உற்பத்திகள், மின்சார நிறுவல்கள், மென்பொருள் அபிவிருத்தி, மொழிபெயர்ப்பு, வாகனங்களை வாடகைக்கு வழங்கும் சேவைகள், மோட்டார் வாகனங்களுக்கான வளிச்சீராக்கம், தகவல் முறைமை, நிகழ்வு முகாமைத்துவம், கொள்ளளவி வங்கி (Capacitor Bank) சேர்விஸ் செய்தல், வலையமைப்பு முறைமை உட்கட்டமைப்பு வசதிகள், வளிச்சீராக்கிகள் திருத்தவேலைகள், கூரியர் சேவைகள், தோட்டப் பராமரிப்பு, சமூக ஊடக மேம்படுத்தல்கள், விளம்பரப்படுத்தல், கலி பவுசர், பழைய பத்திரிகைகளை விற்பனை செய்தல், கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் திருத்தவேலைகள் |
| **வேலைகள்** | **W-1** முதல் **W-5** வரை | அலுமினியக் கட்டமைப்புகள், கட்டிட நிர்மாணங்கள், கட்டிட பராமரிப்பு, நீர்க்குழாய் வேலைகள், நிலச்சீராக்கம் |

ஒவ்வொரு பிரதான வகுதிக்கும் (உருப்படி இலக்கம் மற்றும் உபவகுதி விபரங்களை **www.cea.lk** எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்) மீளளிக்கப்படாத கட்டணமொன்றாக 1000.00 ரூபாவை ரொக்கப்பணத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். அல்லாவிடில் இலங்கை வங்கியின் பெலவத்த கிளையில் 0002937303 எனும் நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பெயரில் வரவு வைக்கப்பட்டு பணக்கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டானது விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

அதிகாரசபையானது வழக்கமாக வழங்கல், சேவைகளுக்கான விலைக்கோரல்களை பதிவுபெற்ற வழங்குநர்களின் பட்டியலிலிருந்தே கோருவதுடன் தேவைப்படும்போது பட்டியலுக்கு புறம்பாக ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்கோரல்களை கோருவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. மேலும் பதிவு செய்து கொண்ட வழங்குநர்கள் தேவைப்படும்போது விலைமனுக்கோரல்களை சமர்ப்பிக்கத்தவறும், வரையறுக்கப்பட்ட காலக்கெடுவினுள் வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்கத்தவறும் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளுக்கமைவாக வழங்கல்களை நிறைவேற்றத் தவறுதல் போன்ற காரணங்களால் வழங்குநர்கள் முன்னறிவித்தலின்றி பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்கள்.

www.cea.website உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பமானது முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு **பணக்கொடுப்பனவிற்காக பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி ஆகியன விண்ணப்பத்துடன்** இணைக்கப்பட்டு **2022 டிசம்பர் 09ஆம் திகதியன்று** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இந்த புகைப்படப் பிரதி கட்டாயமாகும். அச்சு வேலைகளுக்காக விண்ணப்பிக்கும் வழங்குநர்கள் (தேசிய ஆவணக்காப்பு திணைக்களத்தில் பதிவைப் பெற்றிருந்தால்) அதன் புகைப்படப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது பின்வரும் முகவரியிலுள்ள நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவுசெய்யும் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பத்தை தாங்கி வரும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **''2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்''** என்ற சொற்பதங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய விபரங்கள் அதிகார சபையின் **www.cea.lk** எனும் இணையதளத்திலும் பெற்றுக்கொள்ளலாம். (தயவு செய்து பெறுகை அறிவித்தலைப் பார்க்கவும்)

எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது தன்னகத்தே கொண்டுள்ளது.

**பணிப்பாளர் (நிர்வாகம்),**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை,**
**''பரிசர பியச'',**
**இல.: 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011-2872278, 011-2873447-8**
**2022 நவம்பர் 09ஆம் திகதி.**

## நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல் - 2022.11.09

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | 2023ஆம் வருடத்தில் அம்பத்தலை உள்ளீர்ப்பில் களனி ஆற்றிற்கு குறுக்காகவுள்ள மணல் தடுப்பை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல்<br>ஒப்பந்த இல: **DPC/WP/W/AMB/CIVIL/O&M/2022/37** | 12,500/-+ VAT ** | ரூபா 402,000/- | நீர் வழங்கல் துறையில் C5 அல்லது C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 40.2 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 30/11/2022 மு.ப. 10.00 |
| 02 | வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் மாங்குளம் நீர் வழங்கல் திட்டங்களில் அடையாளம் காணப்பட்ட காணிகளுக்கு பெயர்ப் பலகைகள் மற்றும் கொங்கிறீட் கம்பங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/SUPPLY & FIXING – KILL & MAN/2022/053** | 4,000/-+ VAT | ரூபா 40,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 மற்றும் C8 தரத்தில் CIDA பதிவு | 3.96 மில்லியன் | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>2022-11-23ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு வவுனியா, யாழ்ப்பாணம் வீதி, தேநீவவ சபையில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 30/11/2022 பி.ப. 2.00 |
| 03 | ஹெம்மாத்தகம நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் மாவனெல்ல ஹெம்மாத்தகம வீதி நெடுகில் நீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்காக HDPE/DI குழாய்கள் மற்றும் பொருத்தல்களை பதித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/AGM(KEG)/HWSP/ CIVIL/2022/158** | 12,500/-+ VAT ** | ரூபா 420,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 41.8 மில்லியன் | பிஓநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 23/11/2022 பி.ப. 2.00 |
| 04 | ஹெம்மாத்தகம நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் மாவனெல்ல ரம்புக்கனை வீதி நெடுகில் நீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்காக HDPE/DI குழாய்கள் மற்றும் பொருத்தல்களை பதித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/AGM(KEG)/HWSP/ CIVIL/2022/157** | 12,500/-+ VAT ** | ரூபா 185,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 18.5 மில்லியன் | பிஓநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 23/11/2022 பி.ப. 2.00 |
| 05 | அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தில் நீரிறைத்தல் மற்றும் புவியீர்ப்பு வழிகளை இடமாற்றுவதற்கு DI குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் வால்வுகளைப் பதித்தல்<br>ஒப்பந்த இல:**RH/NC/DGM/LAYING/DI/APN/2022/139** | 12,500/-+ VAT ** | ரூபா 271,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 19.9 மில்லியன் | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele: 0252222296<br>Fax:0252225609 | 23/11/2022 பி.ப. 2.00 |
| 06 | கலனேவ நீர் வழங்கல் திட்டத்திற்கான வலயப்படுத்தல் ஏற்பாடுகள் (Zoning Arrangement)<br>ஒப்பந்த இல:**NRW/NC/DGM/ZONING/GAL/2022/141** | 6,000/-+ VAT ** | ரூபா 90,700/- | நீர் வழங்கல் துறையில் C6 முதல் C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.8 மில்லியன் | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele: 0252222296<br>Fax:0252225609 | 23/11/2022 பி.ப. 2.00 |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 07 | தேநீவவச தலைமை அலுவலகத்திலுள்ள Server அறைக்கு இரண்டு எண்ணிக்கையான துல்லியமான வளிச்சீராக்கி முறைமைகளை வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>ஒப்பந்த இல: **TNC/DGM/IT/2022/05** | 6,000/-+ VAT ** | ரூபா 60,000/- | இரண்டு எண்ணிக்கை துல்லியமான வளிச்சீராக்கி முறைமைகளை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.0 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 30/11/2022 மு.ப. 10.00 |
| 08 | கண்டி வடக்கு பாத்ததும்பர ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் PE Butt Fusion &Tapping இயந்திரங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **KNPIWSP/SUPPLY/PC-1/2022-77** | 4,000/- + VAT | ரூபா 30,000/- | 1. உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள்/ விநியோகஸ்தர்கள்/ இறக்குமதியாளர்கள் அல்லது<br>2. PE Butt Fusion &Tapping இயந்திரங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தலில் 5 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் வாய்ந்த கீர்த்தி வாய்ந்த உள்நாட்டு உற்பத்தியாளர்கள் | | கண்டி வடக்கு பாத்ததும்பர ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம், தேநீவவச, பஹல கொண்டதெனிய, கட்டுகஸ்தொட்ட.<br>Tele:0812492390<br>Fax:0812492286 | 08/12/2022 பி.ப. 2.00<br>2022-11-09 முதல் 2022-11-30 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரையான சாதாரண வேலை நாட்களில் ஆவணங்கள் வழங்கப்படும் |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 09 | இம்புல்கஸ்தெனிய மற்றும் பொல்கஹவெல நீர் வழங்கல் திட்டங்களுக்கு Submersible Borehole type Centrifugal பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **RSC (NW)/M-KURU/P/RH/POLGAHA/2022/71** | 4,000-/ + VAT | ரூபா 22,000/- | நீர்ப் பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | 1.9 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 30/11/2022 பி.ப. 2.00 |
| 10 | நாரம்மல - தம்பெலெஸ்ஸ உள்ளீர்ப்புக்கு Submersible Borehole type Centrifugal பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **RSC (NW)/M-KURU/P/RH/NARAM/2022/68** | 4,000-/ + VAT | ரூபா 22,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | 1.9 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 30/11/2022 பி.ப. 2.00 |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 11 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமேல்) அலுவலத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(NW)/DEV/SER/O&M/RSC/2022/73** | 4,000-/ + VAT | ரூபா 44,000/- | ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபாரப் பதிவு ஒழுங்குவிதியின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 4.40 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086<br>2022-11-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு **RSC –NW** குருநாகலில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 30/11/2022 பி.ப. 2.00 |
| 12 | ஹந்தானை நீர் வழங்கல் திட்டம், ஹந்தானை சுற்றுலா பங்காவிற்கான சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம்.<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම/ මද/සේවා/ක්‍රිතාත/හන්තාන/2022/172 | 2,000/- + VAT | ரூபா 15,500/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tel .0812386068<br>Fax.0812388027 | 23/11/2022 பி.ப. 2.00 |
| 13 | கம்பொல நீர் வழங்கல் திட்டம் - கம்பொல பிரதேச நீர் வழங்கல் திட்டத்திற்கான நீர்மானி வாசித்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு நீர்க்கட்டண விலைப்பட்டியல்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම/ මද/සේවා/ක්‍රිතාත/ගම්පොළ/2022/176 | 6000/- + VAT ** | ரூபா 100,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tel .0812386068<br>Fax.0812388027 | 23/11/2022 பி.ப. 2.00 |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 14 | சியம்பலாண்டுவ நீர் வழங்கல் திட்டத்திற்கு சிங்கள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M/SIYABALANDUWA/ 2022/179** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 23/11/2022 பி.ப. 2.00 |
| 15 | செவனகல நீர் வழங்கல் திட்டத்திற்கு சிங்கள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M/ SEVANAGALA/2022/177** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 23/11/2022 பி.ப. 2.00 |
| 16 | மெதகம நீர் வழங்கல் திட்டத்திற்கு சிங்கள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M/ MEDAGAMA/2022/176** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 23.11.2022 பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# இலங்கை பெண்கள் அணி இந்தியா பயணம்



இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு நான்கு அணிகள் மோதும் டி20 தொடரில் இலங்கை 19 வயதின் கீழ் பெண் அணி பங்கேற்கவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் இந்தியாவுக்கு செல்லும் இலங்கை 19 வயதின் கீழ் பெண்கள் அணியானது, இந்தியா 19 வயதின் கீழ் ஏ அணி (ஏ), இந்தியா 19 வயதின் கீழ் அணி (பி) மற்றும் மேற்கிந்திய தீவுகள் 19 வயதின் கீழ் அணிகளை எதிர்கொள்ளவுள்ளது. இலங்கை அணி தங்களுடைய முதல் போட்டியில் இந்தியா 19 வயதின் கீழ் பி அணியை இம்மாதம் 13ஆம் திகதி எதிர்கொள்ளவுள்ளதுடன், 15ஆம் திகதி மேற்கிந்திய தீவுகள் அணியையும், 17ஆம் திகதி இந்தியா ஏ அணியையும் எதிர்கொள்ளவுள்ளது. தொடரின் இறுதிப் போட்டியானது இம்மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், குறிப்பிட்ட இந்த போட்டிகள் அனைத்தும் விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டி20 உலகக் கிண்ணம்:

# நியூசிலாந்து-பாகிஸ்தான் முதல் அரையிறுதி இன்று

டி20 உலகக் கிண்ணத்தின் முதல் அரையிறுதிப் போட்டியில் நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் சிட்னியில் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இம்முறை உலகக் கிண்ணத்தில் அதிரடி துடுப்பாட்டம் மற்றும் வலுவான பந்துவீச்சு என்று பலமான அணியாக களமிறங்கியுள்ள நியூசிலாந்து மீண்டும் ஒருமுறை உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறும் எதிர்பார்ப்புடன் இன்றைய தினம் களமிறங்கவுள்ளது.



நியூசிலாந்து கடந்த டி20 உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டிவரை முன்னேறிய நிலையில் அவுஸ்திரேலியாவிடம் கிண்ணத்தை பறிகொடுத்தது. எனினும் அவுஸ்திரேலியாவை 89 ஓட்டங்களால் தோற்கடித்து இம்முறை உலகக் கிண்ணத்தை ஆரம்பித்த நியூசிலாந்து சுப்பர் 12 சுற்றில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மாத்திரமே தோல்வியை சந்தித்தது.



அணித்தலைவர் கேன் வில்லியம்ஸ் முதற்கொண்டு பின் அலன், கிளன் பிலிப்ஸ், டெவோன் கொன்வோய், ஜேம்ஸ் நீஷம் என்று நியூசிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசை வலுவாக இருப்பதோடு பந்துவீச்சில் டிம் சௌதி, ட்ரென்ட் போல்ட் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

ஆரம்பப் போட்டியில் இந்தியா மற்றும் சிம்பாப்வேயிடம் தோற்று கடைசி வரை அரையிறுதிக்கு முன்னேறுவது நிச்சயமின்றியே பாகிஸ்தான் அணி உலகக் கிண்ணத்தில் ஆடியது. எனினும் தென்னாபிரிக்க அணி நெதர்லாந்திடம் தோற்றதை அடுத்து கிடைத்த வாய்ப்பைக் கொண்டு பங்களாதேஷை வீழ்த்தி பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

ஆரம்ப வீரராக வரும் மொஹமட் ரிஸ்வான் மற்றும் அணித்தலைவர் பாபர் அசாம் தவிர்த்து மத்திய வரிசை துடுப்பாட்டம் இன்னும் ஸ்திரமற்றதாகவே உள்ளது. எனினும் ஆரம்ப வரிசை நின்றுபிடித்து ஆடினால் கடைசி நேரத்தில் அதிரடியாக ஆடக்கூடிய வீரர்கள் அணியில் உள்ளனர். ஷஹீன் ஷா அப்ரிடி, நசீம் ஷா, ஹரிஸ் ரவுப் என்று பாக். பந்து வீச்சு வரிசை வலுவாக உள்ளது. அது எதிரணி துடுப்பாட்ட வரிசையை ஆட்டங்காணச் செய்தால் போட்டி பாகிஸ்தான் அணிக்கு சாதகமாகிவிடும்.

போட்டி நடைபெறும் சிட்னி கிரிக்கெட் மைதானம் துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக சாதகம் கொண்டது. இங்கு நியூசிலாந்து, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்டுகளை இழந்து 200 ஓட்டங்களை பெற்றிருந்தது. பாகிஸ்தானும் தென்னாபிரிக்காவுடனான போட்டியில் 9 விக்கெட்டுகளை இழந்து 185 ஓட்டங்களை பெற்றது.

காலநிலை சீராக இருப்பதால் மழை குறுக்கிட வாய்ப்புக் குறைவு என்று காலநிலை அவதானிப்பு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# த்ரோவர்ஸ் சம்பியன்சிப் போட்டி நவம்பர் 12இல்

முதலாவது ஸ்போர்ட்ஸ் அன்லீஷ் த்ரோவர்ஸ் சம்பியன்சிப் போட்டி வரும் சனிக்கிழமை (12) டொரிங்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் குண்டு எறிதல், தட்டெறிதல் மற்றும் ஈட்டி எறிதல் போன்ற விளையாட்டுகள் 14, 16 மற்றும் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்காக இடம்பெறவுள்ளது. தனிநபர்களும் நாடு முழுவதையும் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் இந்தப் போட்டிகளில் பங்குபற்றலாம். இதற்கான முற்பதிவுகள் தற்போது இடம்பெறுவதோடு, ஒன்லைனில் www.sportunleashthrowers.com எனும் இணையத்தளத்தினூடாக பதிவுகளை மேற்கொள்ள முடியும். ஒரு நிகழ்வில் 32 போட்டியாளர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவதுடன், குழு நிலைப் போட்டிகளில் ஆகக் கூடியது 16 போட்டியாளர்கள் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

# தேசியக் கரத்தே போட்டியில் திருமலைக்கு 28 பதக்கங்கள்



**கிண்ணியா மத்திய நிருபர்**

ஜப்பான் கராத்தே இலங்கை சங்கத்தினால் தேசிய மட்டத்தில் நாடாத்தப்பட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் மொத்தம் 28 பதக்கங்களை பெற்று திருகோணமலை மாவட்ட வீரர்கள் சாதனை படைத்துள்ளனர்

அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்ற இந்த போட்டியில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 58 கராத்தே வீர, வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர். இதில் 05 தங்கப்பதக்கங்களும் 10 வெள்ளிப்பதக்கங்களும் 13 வெண்கலப்பதக்கங்களுமாக மொத்தம் 28 பதக்கங்களை திருகோணமலை மாவட்டத்திற்கு பெற்றுத் தந்துள்ளனர் என இவர்களைப் பயிற்றுவித்த கராத்தே ஆசிரியர் ரா. சத்தியராஜன் தெரிவித்தார்.

# ஆர்ஜன்டீன சம்பியன்ஸில் 10 வீரர்கள் வெளியேற்றம்



போகா ஜூனியர்ஸ் அணிக்கு எதிரான ஆர்ஜன்டீன சம்பியன்ஸ் கிண்ண கால்பந்து இறுதிப் போட்டியில் 10 வீரர்களுக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டதால் முன்கூட்டியே போட்டி நிறுத்தப்பட்டு ரேசிங் கழகம் கிண்ணத்தை கைப்பற்றியது.

இருக்கையில் இருந்த இரு வீரர்கள் உட்பட ஏழு போகா வீரர்கள் வெளியேற்றப்பட்டனர். இதனால் போட்டி நிறுத்தப்படும்போது ரேசிங் அணி 2–1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்று வெற்றியை உறுதி செய்தது. போட்டி விதிகளின்படி அணி ஒன்றுக்கு ஏழு வீரர்களுக்கு குறைவாக இருந்தால் ஆட்டத்தை தொடர முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. 118 ஆவது நிமிடத்தில் ரேசிங் வீரர் கார்லொஸ் அல்கராஸ் கோல் புகுத்திய பின் எதிரணி பக்கம் கொண்டாட்டத்தில் ஈடுபட்டதை அடுத்து ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் மத்தியஸ்தர் அடுத்தடுத்து சிவப்பு அட்டை காண்பித்தார்.

# குணதிலக்க விவகாரத்தை விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழு நியமனம்




இலங்கை அணி வீரர் தனுஷ்க குணதிலக்க மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரிப்பதற்கு மூன்று பேர் அடங்கிய விசாரணைக் குழு ஒன்றை இலங்கை கிரிக்கெட் சபை நியமித்துள்ளது.

இந்த விசாரணைக் குழுவில் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி சிசிர ரத்னாயக்க, சட்டத்தரணி நிரோஷன் பெரேரா மற்றும் சட்டத்தரணி ஆசேல ரேகாவ ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இலங்கை அணி அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்தபோது இலங்கை கிரிக்கெட்டின் அவதானத்தை பெற்றிருக்கும் குற்றச்சாட்டுக்கு உள்ளான பல்வேறு சம்பவங்கள் குறித்து இந்தக் குழுவின் விசாரணையில் அவதானம் செலுத்தப்படும் என்று இலங்கை கிரிக்கெட் சபை நேற்று (08) வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

விசாரணைக் குழு இந்த சம்பவம் குறித்து இலங்கை அணி முகாமையாளரிடம் உடன் விளக்கத்தைக் கோரும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“இந்தக் குழுவினால் வழங்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் பணியை மேற்கொள்ளும்போது எந்த ஒரு தவறான செயல் அல்லது அலட்சியத்தில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்படும் வீரர்கள் அல்லது அதிகாரிகள் மீது இலங்கை கிரிக்கெட் சபை கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளும்” என்று இலங்கை கிரிக்கெட்டின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டி20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்றிருந்த இலங்கை அணியின் வீரர்கள் 16 விருந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில் 6 விருந்து நிகழ்ச்சிகளுக்கே உத்தியோகபூர்வமான அனுமதி கிடைத்திருப்பதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே பாலியல் குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவில் தடுப்புக்காவலில் உள்ள குணதிலக்கவுக்கு அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்தும் உடன் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறைவேற்றுக் குழு தடை விதித்தது.

அவுஸ்திரேலிய பெண் ஒருவர் மீது பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிட்னி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குணதிலக்கவுக்கு பிணை வழங்க நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை மறுத்தது.



இந்த வழக்கு வரும் ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் அவர் பிளக்டவுன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிராக நியூ சவுத் வேல்ஸ் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய விருப்பதாக குணதிலக்கவின் வழக்கறிஞர் ஆனந்த அமரனாத் கூறியுள்ளார்.

# 51 பேரைக் கொன்ற நியூசி. தாக்குதல்தாரி மேன்முறையீடு



நியூசிலாந்தில் இரு பள்ளிவாசல்களில் 51 பேரை கொலை செய்த ஆடவர் தம் மீதான குற்றச்சாட்டுக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளார்.

தம்மை வெள்ளையின மேலதிக்கவாதி என்று அடையாளப்படுத்திய 32 வயதான பிரென்டன் டரன்ட் மேன்முறையீடு செய்ததை நீதிமன்ற அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். எனினும் மேன்முறையீட்டு விசாரணைக்கான திகதி இன்னும் வழங்கப்படவில்லை.

முஸ்லிம் வழிபாட்டாளர்களை கொலை செய்தது மற்றும் கொலை செய்ய முயன்றதற்கு டரன்ட் மீது 2020இல் பிணை இல்லாத ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. நியூசிலாந்து நீதிமன்றம் ஒன்று குற்றவாளிக்கு வாழ்நாள் முழுவதற்குமான ஆயுள் தண்டனை வழங்கிய முதல் சந்தர்ப்பமாக இது இருந்தது.

அவுஸ்திரேலிய நாட்டவரான டரன்ட் 2017இல் கிறிஸ்சேர்ச்சுக்கு குடியேறிய நிலையில், 2019 மார்ச் 15 ஆம் திகதி துப்பாக்கிகளுடன் இரு பள்ளிவாசல்களில் தாக்குதல் நடத்தினார். இது தொடர்பான வழங்கு விசாரணையில் டரன்ட் எந்த ஒரு வாக்குமூலமும் அளிக்கவில்லை என்பதோடு தம்மீதான அதிகபட்ச தண்டனையையும் நிராகரித்தார்.

## சர்வதேச செய்திகள்

# காலநிலை மாற்றம்: உலக தலைவர்களுக்கு ஐ.நா பொதுச் செயலாளர் கடும் எச்சரிக்கை

காலநிலை மாற்றத்தைச் சமாளிப்பதில் உலக நாடுகள் உடனே சேர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் பேரழிவைச் சந்திக்க நேரும் என்று ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் எச்சரித்துள்ளார்.

எகிப்தில் நடைபெறும் உலகப் பருவநிலை மாநாட்டில் உலகத் தலைவர்களுக்கு முன் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

காலநிலை மாற்றம் எனும் போர்க்களத்தில் உலகம் தோற்றுக் கொண்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

பழைய புகை கக்கும் எரிசக்தியைக் கைவிட்டு இயற்கையைக் காக்கும் புதிய எரிசக்திக்கு மாறும்படி அவர் உலகத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டார்.

காலநிலை மாற்றம் எனும் நரகத்தை நோக்கிச் செல்லும் அதிவேகப் பாதையில் உலகம் வேகமாகப் பயணம் செய்து கொண்டிருப்பதாக அவர் எச்சரித்தார்.



இந்நிலையில் மனிதர்களுக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன என்று கூறிய குட்டரெஸ், பருவநிலை மாற்றத்தைச் சமாளிப்பது குறித்து ஒத்துழைப்பது அல்லது ஒழிந்துபோவது என்று அந்த 2 தெரிவுகளை முன்வைத்தார்.

எகிப்தில் ஷார்ம் அல் ஷெய்க் நகரில் நடைபெற்று வரும் காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா மாநாட்டில் 100க்கும் அதிகமான உலகத் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதில் பசுமையில்ல வாயுக்களின் உமிழ்வை குறைப்பதற்கான அழுத்தம் அதிகரித்திருப்பதோடு வெப்பநிலை அதிகரிப்பால் பாதிப்பை சந்தித்திருக்கும் வளர்ந்துவரும் நாடுகளுக்கு நிதி உதவி அளிப்பது குறித்து வலிறுத்தப்பட்டு வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 9ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.